
தேரேறி வா முருகா! நல்லருள் தா முருகா!!
சரவணா ரெக்ஸ்
இல.526,529 பருத்தித்துறை வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம்.
இல.171, பிரதான வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 2992



# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆவணி 04, ஞாயிற்றுக்கிழமை 20.08.2017 | கதிர் 287


# குமரப்பா, புலேந்திரனை கடலில் வழிமறித்து கைது செய்தவர்தான் ட்ரவிஸ் சின்னையா!

## புதிய கடற்படைத் தளபதியான தமிழர் குறித்துத் தகவல்

யாழ்ப்பாணம்,ஓக.20

இந்தியப் படைகள் இலங்கையில் நிலைகொண்டிருந்த சமயத்தில் - 1987 ஒக்டோபர் 2 ஆம் திகதி பருத்தித்துறைக்கு வட கிழக்கே 35 முதல் 40 கடல் மைல் தொலைவில்வைத்து, ஆழ்கடலில் விடுதலைப் புலிகளின் தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பதினைந்து போராளிகளை வழிமறித்துக் கைது செய்யும் நடவடிக்கைக்குப் பொறுப்பாக இருந்த லெப்டினன்ட் கொமாண்டர் ரி.ஜே.எல்.சின்னையா தான் நேற்றுமுன்தினம் இலங்கையின் புதிய கடற்படைத் தளபதியாக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு மாத காலத்தில், வடக்கு - கிழக்கில் யுத்த நிறுத்தம் ஏற்பட்டு, அமைதி பக்கம் 20

# நல்லூர்க் கந்தன் தேர் இன்று



பக்தர்களுக்கு அருளும் நல்லூர் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழா இன்றாகும். இன்று காலை 7 மணிக்கு ஆறுமுகப் பெருமான் தேருக்கு எழுந்தருளுவார்.

# அமைச்சர் விஜேதாஸ நாளை இராஜினாமா?

கொழும்பு, ஓக. 20

அரசியல் சர்ச்சையில் சிக்கியிருக்கும் நீதி,பௌத்த சாசன அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ பெரும்பாலும் நாளை அல்லது இவ்வார முற்பகுதியில் தமது அமைச்சர் பதவியை இராஜினாமாச் செய்வார் எனக் கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. பக்கம் 20

# 50 ஆயிரம் கல்வீடுகள்; கூட்டமைப்பு வரவேற்பு!

கொழும்பு, ஓகஸ்ட் 20

மீளக்குடியேறும் மக்களுக்காக ஐம்பதாயிரம் கல் வீடுகளை அமைப்பதற்கு ஜனாதிபதியின் கீழ் உள்ள நல்லிணக்க அமைச்சு முடிவெடுத்து அறிவித்திருக்கின்றமையைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வரவேற்றிருக்கின்றது. பக்கம் 20

# இந்தியப் படையினருக்கு நேற்று யாழில் அஞ்சலி!

## இந்தியப் படை அதிகாரிகள் யாழ்.வருகை



(எஸ்.நிதர்சன்)

யாழ்ப்பாணம்,ஓக.20

யாழ்ப்பாணத்தில் முப்பது வருடங்களுக்கு முன்னர் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இடம்பெற்ற மோதல்களில் உயிரிழந்த இந்திய இராணுவத்தினரின் நினைவாக இங்கு அமைக்கப்பட்டுள்ளநினைவிடங்களில் நேற்று இந்தியப்படை பக்கம் 20

# இராணுவத்தை விட்டு ஓடியோர் 700 பேர் ஒரு வாரத்தில் கைது

கொழும்பு ஓக.20

இராணுவத்தை விட்டு சொல்லிக் கொள்ளாமல் ஓடிய சுமார் எழுநூறு பேர் ஒரு வார காலமாக இராணுவத் தரப்பினால் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது கைதுசெய்யப்பட்டிருக்கின்றனர் என இராணுவப் பேச்சாளர் தெரிவித்பக்கம் 20

# புலமைப் பரிசில் பரீட்சை இன்று

யாழ்ப்பாணம்,ஓக.20

ஐந்தாம் தரத்துக்கான புலமைப் பரிசில் பரீட்சை இன்று காலை 9.30 மணி முதல் நாடு முழுவதிலும் 3 ஆயிரத்து 14 நிலையங்களில் நடைபெறுகிறது. மொத்தம் 3 லட்சத்து 56 ஆயிரத்து பக்கம் 20

# தேங்காய் விற்கச் சென்றவர் டிப்பர் வாகனம் மோதிப் பலி

## சாவகச்சேரியில் நேற்றுச் சம்பவம்

சாவகச்சேரி, ஓக.20

வீட்டில்உள்ளதென்னை மரங்களில்பறித்ததேங்காய்களைச் சந்தையில் விற்பதற்காகக்கொண்டுசென்ற குடும்பஸ்தரை டிப்பர் வாகனம் மோதியதில் சம்பவ இடத்திலேயே அவர் பலியானார். பக்கம் 20

**இன்று புலமைப்பரிசில் பரீட்சை எழுதும் தரம் ஐந்து மாணவர்களுக்கு 'காலைக்கதிர்' நாளிதழின் வாழ்த்துக்கள்!**

# புளொட்டுக்குள்ளும் போட்டி மாகாண அமைச்சர் பதவிக்கு!

யாழ்ப்பாணம்,ஓக.20

வடமாகாண அமைச்சரவை மாற்றத்தை ஒட்டிய குழப்பம் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சியான புளொட்டுக்குள்ளும் சிறு சலசலப்பை ஏற்படுத்தியிருப்பதாக அறியவருகின்றது.

இப்போது மாகாண சபையில் புளொட் சார்பில் நிறுத்தப்பட்ட மூன்று உறுப்பினர்கள் இடம்பெற்றுள்ளனர்.

ஒருவர் கஜதீபன் - யாழ்ப்பாண மாவட்டம்; மற்றையவர் லிங்கநாதன் பக்கம் 20

# கிழக்கு மாகாணத் தேர்தலை எதிர்கொள்ள கூட்டமைப்பு, முஸ்லிம் காங்கிரஸ் தயார்!

## திருகோணமலையில் வைத்து ஹக்கீம் அறிவிப்பு

திருகோணமலை,ஓக.20

"மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைப்புப் பற்றிப் பேசப்படுகின்றது. ஆனால், கிழக்கு மாகாண சபைத் தேர்தல் உரிய காலத்தில் நடத்தப்படுமாக இருந்தால் அதனை எதிர்கொள்வதற்கு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் தயாராகவே உள்ளன."

- இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பக்கம் 20

# அமைச்சுப் பதவிக்கு யாரையும் புளொட் பரிந்துரைக்கவில்லை

யாழ்ப்பாணம்,ஓக.20

வடக்கு மாகாண சபையில் அமைச்சுப் பதவிக்கு யாருடைய பெயரையுமே புளொட் பரிந்துரைக்கவேயில்லை.

இத்தகவலை அக்கட்சியின் தலைவரும், எம்.பியுமான த.சித்தார்த்தன் நேற்றிரவு 'காலைக்கதிர்' நாளிதழுக்குத் தெரிவித்தார்.

அமைச்சர் பதவியை புளொட் அமைப்பின் இரு உறுப்பினர்களான சிவநேசனும், லிங்கநாதனும் எதிர்பார்க்கின்றனர் என்று செய்திகள் வெளியாகியமை பக்கம் 20



எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் நல்லைக் குமரன் நல்லருள்கிடைத்திட பிரார்த்திக்கின்றோம்.
உங்கள் நாவிற்கு இனிய ஐஸ்கிறீம் வகைகளை சுவைத்து மகிழ நாடுங்கள்
லிங்கன் கிறீம் ஹவுஸ்
இல.119, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7327
இல.526, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 4945
இல.213, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 021 221 6660
No.6055 Steeles Ave E, Toronto, ONT, MIX OA7, Canada. T.P: 0014162925464

காலைக்கதிர் Kalaikkathir



# தமிழ் மக்கள் தம் மீட்பராக பிரபாவை ஏன் போற்றினர் என்பது புரியவில்லை

## நோர்வே சமாதானத் தூதுவர் சொல்ஹெய்ம் தெரிவிப்பு

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை தமிழ் மக்கள் ஏன் மகத்தான ஒரு தலைவராக விரும்பினார்கள் என்று தம்மால் புரிந்து கொள்ள முடியவில்லை என்று இலங்கைக்கான நோர்வேயின் முன்னாள் சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

சர்வதேச ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள செவ்வியில், அவர், விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பது தொடர்பாக பேசுவதற்காக, பிரபாகரனுடன் நடத்திய முதல் சந்திப்புக் குறித்து விவரித்துள்ளார்.



அதில், பிரபாகரனை முதல் தடவையாகச் சந்திப்பதற்கு நான் சென்றிருந்தபோது இலங்கையில் யாருமே அதனை அறிந்திருக்கவில்லை.

பிரதமருக்குக் கூட அது தெரியாது. சந்திக்கச் செல்வதற்கு இலங்கை ஜனாதிபதியே, எமக்கு அனுமதி அளித்திருந்தார்.

நாங்கள் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் இருந்த பிரதேசத்தில் பிரபாகரனைச் சந்தித்தோம். அதற்காக நாங்கள் உலங்கு வானூர்தியில், சென்றிருந்தோம்.

தாழ்வாகவும், மேலுயர்ந்தும் பறந்து சென்றது அது. மலைகளாக இருந்திருந்தால் பயங்கரமாக இருந்திருக்கும்.

நாங்கள் செல்வதை இராணுவத்தினரோ விடுதலைப் புலிகளோ முற்கூட்டியே அறிந்திருக்கவில்லை. அதனால் அவர்கள் இலகுவாக சுட்டு வீழ்த்தக் கூடும்.



அங்கு நாங்கள் பிரபாகரனைச் சந்தித்தோம். அது ஒரு நல்ல சந்திப்பு. அமைதி முயற்சிகளில் விடுதலைப் புலிகள் ஆர்வம் கொண்டிருப்பதை உறுதிப்படுத்தினர்.

ஆனால், தமிழர்கள் மத்தியில் பிரபாகரன் மகத்தான நிலையில் இருக்கிறார் என்பதைப் புரிந்து கொள்வது கடினமாக இருந்தது.

அந்த நேரத்தில் அவர் கடவுளாக, படைப்பின் மூலமாக, மீட்பராக போற்றப்பட்டார்.

தமிழ் மக்கள் ஏன் அவரை அப்படிப் போற்றினார்கள் என்று எம்மால் உண்மையில் புரிந்துகொள்ள முடியவில்லை. - என்றும் அவர் கூறியுள்ளார். (உ)

# வெங்காய வெடியால் காயமடைந்த யானை பரிதாபமாக உயிரிழப்பு!

வவுனியா - பாலமோட்டை பகுதியில் யானை ஒன்று நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டுள்ளது.

இதுபற்றித் தெரியவருவ தாவது:-

வவுனியா, பாலமோட்டை, ஊரல்குளத்தில் யானை ஒன்று இறந்து கிடக்கக் காணப்பட்டதை அவதானித்த ஊர் மக்கள் ஓமந்தைப் பொலிஸாருக்குத் தகவல் வழங்கினர்.

இதனை அடுத்து ஓமந்தை பொலிஸாரும், வன ஜீவராசிகள் திணைக்களத்தினரும் சம்பவ இடத்துக்குச் சென்றனர். வன ஜீவராசிகள் திணைக்கள வைத்திய அதிகாரியால் யானை இறந்ததற்குரிய காரணம் தொடர்பாக மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது.

இந்த மருத்துவ அறிக்கையின் படி ஐந்து வயதுடைய மேற்படி யானை வெங்காய வெடியை உண்டதனால் வாயில் ஏற்பட்ட காயம் காரணமாக உணவு உண்ண முடியாமல் இறந்துள்ளது எனத் தெரியவந்துள்ளது.

இந்த யானை 7 நாள்களுக்கு முன்னர்





இறந்திருக்கலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (உ)

# சர்வஜன வாக்கெடுப்பா? தேர்தல் திணைக்களம் தயார்!

## ஆணைக்குழுத் தலைவர் உறுதியளிப்பு

சர்வஜன வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்பட வேண்டும் எனக் கோரப்பட்டால் அதற்கு நாம் தயார் என தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென உத்தரவிடப்பட்டு ஆறு வாரங்களுக்குள் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும். அரசமைப்புத் திருத்தங்கள் அல்லது அது தொடர்பான காரணிகளுக்காக அரசமைப்பின் அடிப்படையில் சர்வஜன வாக் கெடுப்பு நடத்த ஜனாதிபதிக்கு அதிகாரம் உண்டு எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புத்



தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்படும் என அண்மையில் அமைச்சர் ராஜித சேனாரத்ன கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்தகைய நிலைமை ஏற்பட்டால் அந்தத் தேர்தலை நடத்தும் முழுத் தயார் நிலையில் தேர்தல் திணைக்களம் உள்ளது என்றார் மஹிந்த தேசப்பிரிய. (உ)

# அமைச்சர் விஜயதாஸவுக்கு எதிரான; நடவடிக்கை குறித்து நாளை முடிவு!

## ரணில் தலைமையில் மூவர் குழுவிடம் பொறுப்பு

கொழும்பு,ஓக.20

நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டு வருவது குறித்து மூவரடங்கிய விசேட குழுவொன்று ஆராய்ந்து வருவதாகவும், இக்குழு நாளை திங்கட்கிழமை தனது இறுதித் தீர்மானத்தை முன்வைக்கும் என்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

பிரதமர் தலைமையிலான இவ்விசேட குழுவை ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழு நியமித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊழல் மோசடிகளுக்கெதிரான வழக்குகள் தாமதமாவது மற்றும் தமக்கான கூட்டுப்



பொறுப்புக்களை மீறி செயற்படுதல் உள்ளிட்ட காரணங்களுக்காக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரப்படவேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சியில் பலரும் யோசனைகளை முன்வைத்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பில் மத்திய செயற்குழுவில் விரிவாக ஆராயப்பட்டபோதும் எதுவித இறுதித் தீர்மானமும் எடுக்கப்படவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (உ)

## சின்மயா மிஷனில் இன்று அருளுரை

நல்லூர், ஓக.20

நல்லூர் உற்சவத்தை யொட்டி பருத்தித்துறைவீதி, இலக்கம் 700 என்ற முகவரியில் உள்ள யாழ்ப்பாணம் சின்மயா மிஷனில் ஆன்மீக அருளுரை நிகழ்வு இடம்பெற்று வருகிறது. நாளாந்தம் பிரம்மச்சாரி ஜாக் ரத சைதன்யா சுவாமிகள் மாலை 7.30 மணி முதல் 8 மணிவரை அருளுரை வழங்குவார்.

இன்றைய தலைப்பு:

‘எது பலம்’ (இ)




யாழ்ப்பாணம், ஓக.20

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு: எஸ்.குமாரசாமி, வயலின்: அ.ஜெயராமன், மிருதங்கம்:க.கண்ணதாஸ், கடம்: அ.செல்வரத்தினம், கெஞ்சிரா:ஞா.வசந்த்.

***

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று இளஞ்சைவப் புலவர் சைவநெறிச் சன்மார்க்கர் க.கைலநாதன் ‘திருவடியின் சிறப்பு’ என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (ச)

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ் – 20.08.2017

## பாராளும் பிணியோட்ட தேரேறி வா முருகா!



ஆறுமுகம் பார்த்துப் பார்த்து
அருளினில் பூத்துப் பூத்து
தேறும் முகம் எத்தனையோ; எந்தன்
தெய்வமுன் புதுமை கண்டு
கூறும் முகம் பார்த்தேன்; எங்கள்
குறைகளைத் தீர்க்கத் தேரில்
ஏறும்முகம் காணக் கடலாய்
எழுப்பாதா பக்தர் வெள்ளம்?

ஆறுதலைத் தாதா என்று
அடியவர் தினமும் சென்று
கூறுதலைக் கேட்டே கந்தன்
குளிர்ந்தனன் உள்ளம்; இந்தா
மாறுதலைத் தாறேன் என்றே
மங்கல சமேத ராக
ஆறுதலை முருகன் தேரில்
அசைந்திடக் காண வாரீர்!

நல்லன தாராய்; நல்லை
நாதனே வாராய்; எங்கள்
உள்ளமுன் அன்பில் ஊறி
உறைந்ததே பாராய்; எந்தக்
கல்லையும் கசிய வைக்கும்
கருணையிற் கடலே; உந்தன்
வல்லமை கேட்டுத் தானே
கந்தனே விரதம் காத்தோம்!



அடிவான் பன்னீர் சிந்த
அந்தணர் தீபம் காட்ட
கொடிமலர் கம்பளம் விரிக்க
கோபுரக் குயில்கள் வாழ்த்த
அடியவர் வடம்தொட் டிழுக்க
அரோகரா எங்கும் ஒலிக்க
பிடித்த எப் பிணியும் அகல
பிரணவன் தேரில் வந்தான்.

தேவாரப் பாட்டாகி வா வா
தேரேறிக் கந்தாநீ வா வா
நாவாறத் தமிழ்பாட வா வா
நல்லையிற் குமராநீ வா வா
பூவாடை பூண்டவனே வா வா
பூர்வலோகப் புண்ணியனே வா வா
தேவர்குறை தீர்த்தவனே வா வா
பக்தர்குறை போக்கிடவே வா வா

வண்ணமுகத் தமிழும்நீ; நாம்
வணங்குகின்ற தெய்வம்நீ! எம்
கண்குளிரும் காட்சிநீ; எம்மைக்
கதிசெய்யும் ஆட்சியும்நீ; நல்லை
மண்ணாளும் மயிலோனே; ஒற்றை
மணித்துளியும் பிசகாது கருமம்
தண்ணாளும் செயலோனே; இன்பம்
தருவிக்கத் தேரேறி வா வா!

ஆக்கம்:
**கவிக்கதிரோன்**
**வேலணையூர் சுரேஷ்**

யாழ். நகரில் தரம் குன்றாத
தங்க நகைகளுக்கு நாடுங்கள்
**புதிய நதியா நகைமாடம்**
இல.73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்
**வினோ நகைப் பூங்கா**
இல.185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
உரிமையாளர்: சடாச்சரம் புவிச்சந்திரன்.

**ஸ்ரீ றங்கன் என்ரப்பிறைஸ்**
370, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 222 2027 Fax:021 222 2993

யாழ். நகரில் கண்கவர் ஆடைத்
தெரிவுகளுக்கு நாடுங்கள்!
**சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்**
இல.41, பெரியகடை, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 2063

HIKVISION
CCTV DEALER IN JAFFNA
**ALDI ELECTRONICS**
No,15 stanly Road , Jaffna
TP:-0212222676

புன்னகை முகங்களை; மேலும் பொலிவுற
வைக்கும் தங்க நகைகளைத் தேர்வுசெய்ய...
**சிறி மீனாட்சி நகை அகம்**
இல.183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி:- 021 222 6109

யாழ். நகரில் அசல் 22 கரட் தங்க நகைகள்
விற்பனையாளர்
**விஷ்ணு ஜீவல்லறி**
தங்கப் பவுண் நகை வியாபாரம்
இல:- 181, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (வின்சர் தியேட்டர் முன்பாக)

தங்க நகை உலகில் 34 வருட
அனுபவத்தைக் கொண்ட
**ரூபி ஜுவல்லரி**
இல.227-229, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 221 6919

தரம் – நாணயம் உத்தரவாதம் கொண்ட நகைகளை
கொள்வனவு செய்ய நாட வேண்டிய ஒரே இடம்
**மைதிலி நகைமாடம்**
இல.89V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே: 021 222 7902

**Arsh** Make - up Studio
Bridal Make - up, Party Make - up, Casuai Make -up and etc... Day, Evening Indian, Eastern, Arabic and Eropeon Make-up Styles. Eyebrow Threading.
0764166351 Urumpirai East, Urumpirai.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## குமரப்பாவும் சின்னையாவும்

இலங்கையின் புதிய கடற்படைத் தளபதியாக றியர் அட்மிரல் ட்ரவிஸ் ஜெர்மி லியண்ட்ரு சின்னையா பதவியேற்றிருக்கின்றார்.

இதுவரை கிழக்கு மாகாணக் கடற்படைத் தளபதியாகப் பணி யாற்றி வந்த ட்ரவிஸ் சின்னையா, நாளை மறுதினம் முதல் இலங்கையின் கடற்படைத் தளபதியாகப் பொறுப்பேற்பார்.

இலங்கை சுதந்திரமடைந்த பின்னர் கடற்படைத் தளபதி பதவிக்கு நியமிக்கப்படும் இரண்டாவது தமிழ் வீரர் இவரே.

இதற்கு முன்னர் 1960 தொடக்கம் 1970 வரை கடற்படைத் தளபதியாக இருந்த தமிழர் வைஸ் அட்மிரல் ராஜன் கதிர்காமர். அவர் தமது 38 ஆவது வயதில் கடற்படைத் தளபதியானவர். இலங்கைக் கடற்படைத் தளபதிகளின் வரிசையில் ஆகக் குறைந்த வயதில் அப்பதவியை எட்டியவரும் ஆகக் கூடிய காலம் அப்பதவியில் இருந்தவரும் அவர்தான். முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் மூத்த சகோதரர் அவர்.

அவருக்குப் பின்னர் – சுமார் 47 ஆண்டுகள் கழித்து – கடற்படைத் தளபதி பதவிக்கு மற்றொரு தமிழர் வந்திருக்கின்றார்.

இடைப்பட்ட காலத்தில் – 1970 முதல் 2017 வரை – தமது உரிமைகளுக்காகவும், கௌரவ வாழ்வுக்காகவும் இலங்கைத் தமிழர்கள் ஆயுதப் போராட்டம் நடத்திய காலத்தில், தமிழர்கள் எவருக்குமே முப்படைத் தளபதி பதவி வழங்கப்படவேயில்லை. அவ்வப்போது பொலிஸ்மா அதிபர், சட்டமா அதிபர், பிரதம நீதியரசர் என்ற பதவிகளைக் கிள்ளித் தெளித்ததோடு சரி.

இப்போது ட்ரவிஸ் சின்னையாவுக்கு இந்தப் பதவி வழங்கப்பட்டமையைக் காட்டி, இதோ இலங்கையில் தமிழர்களுக்கு சம அந்தஸ்து, சமவுரிமை எல்லாம் வழங்கப்பட்டுவிட்டது என்று ஒரு கும்பல் பிரசாரம் செய்யத் தொடங்கிவிடும். ஆனால், உண்மை அதுவல்ல.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இலங்கைப் படைகளின் ஆயுதப் போராட்டத்தில் கடற்படைத் தரப்பில் காத்திரமாகப் பங்காற்றியவர் றியர் அட்மிரல் ட்ரவிஸ் சின்னையா.

தன் இனத்தின் விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை அவர் கோடரிக்காம்பாக இருந்திருக்கலாம். ஆனால், மத்திய மலைநாடான கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட ட்ரவிஸ் சின்னையா, புலிகளை அழிப்பதில் முன்னின்ற ஒரு கடற்படை வீரர்.

புலிகளின் கடைசி தசாப்த காலத்தில் ஆழ்கடலில், சர்வதேச கடற்பரப்பில், பல நாள்கள் தொடர்ந்து பயணம் செய்து, புலிகளின் ஆயுதக் கப்பல்களைத் தேடிக் கண்டுபிடித்து அழிப்பதில் துல்லியமாகப் பணியாற்றியவர் இவர் என்று தென்னிலங்கை ஊடகங்கள் வர்ணித்துப் புகழ்கின்றன.

அது மட்டுமன்றி, அவரைப் பற்றிய மற்றொரு செய்தியும் இங்கு பதியப்பட வேண்டும். அது இலங்கைத் தீவின் நீண்டகால இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்ட இலங்கை – இந்திய ஒப்பந்தம் அடியோடு குழம்பிப் போவதற்கான சம்பவத்துக்குக் கால்கோள் இட்டவரும் கூட இதே ட்ரவிஸ் சின்னையாதான் என்பது வெளியில் அதிகம் தெரியாத இரகசியம்.

1987 ஜீலை 29 ஆம் திகதி இலங்கை – இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதற்குக் கீழ் போராளிகள் அமைப்புகள் எல்லாவற்றுக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டு, சுமுகநிலை ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

அச்சமயத்தில்தான் அந்தத் துரதிஷ்ட சம்பவம் நிகழ்ந்தது. வடக்கில் இருந்து தென் தமிழீழமான கிழக்கு மாகாணத்தை நோக்கி, கடல் வழியாகப் பயணத்தை மேற்கொண்ட புலிகளின் தளபதிகளான குமரப்பா, புலேந்திரன் உட்பட பதினைந்து போராளிகள் பருத்தித்துறைக்கு வடகிழக்கே 35 முதல் 40 கடல் மைல் தூரத்தில் வைத்து கடற்படையால் வழிமறித்துக் கைது செய்யப்பட்டனர். அவர்களைத் தமது கடற்கலம் மூலம் வழிமறித்து கைதுசெய்த பொறுப்பதிகாரி இதே ட்ரவிஸ் சின்னையாதான்.

1982 இல் கடற்படையில் இணைந்திருந்த சின்னையா, அப்போது – 1987 இல் – லெப்டினன்ட் கொமாண்டர் தர நிலையில் இருந்தார். அவரோடு அந்தக் கைது நடவடிக்கையில் 'லீடிங் சிமென்' பிரேமதிலகவும் சேர்ந்து செயற்பட்டார் என ஊடகப் பதிவுகள் தெரிவித்திருக்கின்றன.

ட்ரவிஸ் சின்னையாவால் கைதுசெய்யப்பட்ட குமரப்பா, புலேந்திரன் உட்பட பதினைந்து போராளிகளும் பலாலி படைத் தளத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். இலங்கை – இந்திய ஒப்பந்தத்தின் கீழான சமாதான ஏற்பாடுகளுக்கு முரணாக – இந்தியப் படையினரின் பார்வையில் இல்லாத தொலை தூரத்தில் வைத்து அவர்களை 'விசாரணை' செய்வதற்காக – அனைவரையும் கொழும்புக்குப் பலவந்தமாக விமானத்தில் ஏற்றுவதற்கு முயன்றது, அமைச்சர் லலித் அத்துலத் முதலியின் வழிகாட்டலில் செயற்பட்ட இராணுவம். தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரு போராளிகள் அதனை எதிர்த்து சயனைட் உட்கொண்டு அப்போதே வீரச்சாவடைந்தனர். அந்தக் கசப்புணர்வே – தீப்பொறியே – பின்னர் கனன்று, எரிந்து, இலங்கை – இந்திய ஒப்பந்தம் நாறிப் போகவும், இந்திய அமைதிப் படைகள் எதிர் விடுதலைப் புலிகள் என குரூர யுத்தம் வெடிக்கவும், கடைசியில் இந்தியப் பிரதமராவார் என்ற கனவில் இருந்த ராஜீவ் காந்தி தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மூலம் உயிரிழக்கவும் வழி செய்யும் பல தொடர் சம்பவங்களின் கட்டவிழ்கைக்குக் காரணமாயிற்று.

குமரப்பா, புலேந்திரன் போன்ற வீரத் தளபதிகளைக் கைது செய்து, சூது மூலம் அவர்களைக் கொல்வதற்கு வழி செய்த தமிழ் அதிகாரிக்கு சிங்களம் இதைத் தவிர வேறு என்ன கைம்மாறு செய்யப்போகின்றது?

# மனச்சாட்சிப்படி பணியாற்றுவோரை அரசு ஒருபோதும் கைவிடமாட்டாது!

## உறுதிபடத் தெரிவித்தார் ஜனாதிபதி

அரச சேவையில் ஏதேனும் ஒரு துறை மக்களின் எதிர்ப்புக்கும் வெறுப்புக்கும் உள்ளானால் அதுதொடர்பில் அத்துறைகளின் தலைவர்கள் பொறுப் புக்கூற வேண்டும் என, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

தமது மனச்சாட்சிக்கு ஏற்ப நேர்மையாகவும் அர்ப்பணிப்புடனும் சேவை செய்யும் அனைத்து அதிகாரிகளையும் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அரசு கைவிடாமல், அவர்களுக்குச் சார்பாக இருக்கும் என்றும் ஜனாதிபதி கூறினார்.

மகாவலி குடியேற்றவாசிகளுக்கு ஒரு லட்சம் காணி உறுதிகள் வழங்கும் தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விக்டோரியா மற்றும் கொத்மலை வலய விவசாயிகளுக்கு காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திகன மத்திய மாகாண விளையாட்டு கட்டடத் தொகுதி வளாகத்தில் இடம் பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் –

அரச சேவையில் காணித் துறையின் நடவடிக்கைகள் குறித்து நீண்ட காலமாக இந்நாட்டு மக்கள் மத்தியில் திருப்தியான ஒரு நிலை கிடையாது. இந்த நிலைமையை கருத்திற்கொண்டு பிழைகளை சரிசெய்து இன்றைய நாளின் பணிகளைப் போன்று நாளைய தினத்தின் மக்கள் பணிகளையும் உரிய முறையில் நிறைவேற்றுவதற்கு அனைத்து அதிகாரிகளும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

காணி உரிமை என்பது பாரம்பரிய உரிமையுடன் தொடர்பான பிரச்சினையாகும். அந்த உரிமையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பது நாட்டு மக்களுக்காக நிறைவேற்றும் அடிப்படை கடமையாகும்.

அரசை முன்னெடுத்து செல்லும் போது குற்றச்சாட்டுக்கள் எதிர்ப்புக்கள் தெரிவிக்கப்படுவது ஒரு ஜனநாயக நாட்டின் பண்புகளாகும். நாட்டில் சுதந்திரமும் ஜனநாயகமும் இல்லையாயின் அத்தகைய எதிர்ப்புகள் ஏற்படாது.

நாட்டு மக்கள் தமது உரிமைகளை கேட்கவும் அரசியல்வாதிகள் தமது அரசியல் கருத்துக்களை முன்வைக்கவும் பயந்த யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்து, நாட்டில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஜனநாயக உரிமைகளை உரிய முறையில் அனுபவிப்பதும் அது குறித்து தெளிவுடன் நடந்துகொள்வதும் அனைவருடையவும் பொறுப்பாகும். – என்றார்.

இந்நிகழ்வில் பௌத்த மகா சங்கத்தினர், அமைச்சர்களான லக்ஷ்மன் கிரியெல்ல, எஸ்.பி. திசாநாயக்க, பிரதி அமைச்சர் அநுராத ஜயரத்ன, மத்திய மாகாண முதலமைச்சர் சரத் ஏக்கநாயக, மகாவலி அபிவிருத்தி, சுற்றாடல்துறை அமைச்சின் செயலாளர் அநுர திஸாநாயக்க ஆகியோர் கலந்து கொண்டனர். (ம)

# 13 பாலங்களின் கட்டுமானம் பூர்த்தி; அவற்றில் 7 பாலங்கள் கையளிப்பு

## வடக்கு அமைச்சர் டெனீஸ்வரன் நடவடிக்கை





மன்னார், ஓக். 20

ஐக்கிய இராச்சியம் மற்றும் நெதர்லாந்து நாடுகளின் நன்கொடையில் இலங்கை முழுவதும் கிராமிய பாலங்கள் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. மொத்தமாக ஆயிரம் பாலங்களைக் கொண்ட இந்தத் திட்டத்தில் வடமாகாணத்தின் மேற்பார்வையின் கீழ் கணிசமான அளவு பாலங்கள் வடக்கில் ஐந்து மாவட்டங்களிலும் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. அவற்றில் மன்னார் மாவட்டத்தில் 13 பாலங்களுக்கான கட்டுமானப் பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. இரண்டு பாலங்களுக்கான வேலைகள் நடைபெற்று வருகின்றன.

அந்த வகையில் மாந்தை மேற்குப் பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட 7 பாலங்களை மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வுகள் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றன. இந்த நிகழ்வுகளில் பிரதம விருந்தினராக வடமாகாண போக்குவரத்து, கிராம அபிவிருத்தி, வீதி அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் கலந்துகொண்டு அவற்றை மக்களுக்குக் கையளித்தார்.

அதன்போது கறுக்காகுளம் பகுதியில் மணற்காடு பாலம், அடம்பன் பகுதியில் மினுக்கன் பாலம், கண்டல் பகுதியில் விளான்குளி பாலம், கள்ளியடி கூராய் வீதி பாலம், இலுப்பைக் கடவை படகுத்துறை வீதி பாலம் மற்றும் பெரியமடு பகுதியில் காயாநகரில் இரண்டு பாலங்கள் ஆகியவற்றைக் கையளித்ததுடன் அந்தப் பாலங்களுக்கான அணுகுவீதிகள் அமைப்பதற்கான மதிப்பீடுகளை ஐந்து மாவட்டங்களிலும் மேற்கொள்ளுமாறும் வீதி அபிவிருத்தித் திணைக்களப் பொறியியலாளர்களுக்குப் பணிப்புரையும் வழங்கினார். மேலும் இந்தப் பாலங்கள் அமைக்கப்பட்டுள்ள வீதிகள் ஊடாக மழைக் காலங்களில் மழைநீர் பாதையை ஊடறுத்துப் பாய்வதால் கடந்த காலங்களில் அவற்றினூடாகப் பயணம் செய்ய மக்கள் மிகவும் இன்னல்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வுகளில் அமைச்சருடன் வீதி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி மாகாண பணிப்பாளர் சி.பூ.சிவநேசன், இயந்திர பொறியியலாளர் ரவீந்திரன் குரூஸ், மன்னார் மாவட்ட நிறைவேற்று பொறியியலாளர் எம்.துஷியந்த், மன்னார் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் மாந்தை பிரதேச சபையின் செயலாளர் சார்பாக தொழில்நுட்ப உத்தியோகத்தர் என்.நிலோஜனும் மற்றும் அந்தந்த பிரிவுக்குரிய கிராம அலுவலர்கள் மற்றும் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (இ)

## நாளை

21.08.2017
திங்கட்கிழமை
நட்சத்திரம் : ஆயிலியம், சித்தம்
மாலை 5.19 வரை
திதி : அமாவாசை பி.இ. 12.59 வரை
சுபநேரம் : 12.05 – 1.35 வரை
இராகுகாலம் : 7.35 – 9.05 வரை

## ஐரோப்பிய நீதிமன்றத்தின்

# புலிகளின் மீதான தடை நீக்கத்தை வரவேற்கின்றார் உருத்திரகுமாரன்

## ஏனைய நாடுகளையும் நீக்கக் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஓக.20

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான ஐரோப்பிய ஒன்றியத் தின்தடையானது,தவறானஅணுகு முறை எனத்தெரிவித்துள்ளநாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் பிரதமர் வி.உருத்திரகுமாரன், அந்தத் தடையை நீக்கிய ஐரோப் பிய நீதிமன்றத்தின் தீர்ப்பை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் வரவேற்கின்றது எனவும் கூறி யுள்ளார்.

இந்தத் நீக்கலுக்காக ஐரோப் பிய நீதிமன்றத்தால் கூறப்பட்ட காரணங்களை அடித்தளமாகக் கொண்டு இந்தியா, அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், கனடா ஆகிய நாடுகளும் தத்தமது நாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியல்களில் இருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை நீக்கு மாறும் அவர் கோரியுள்ளார்.

மேற்படி தடை நீக்கம் தொடர் பாகக் கருத்து வெளியிட்டுள்ள உருத்திரகுமாரன் மேலும் கூறு கையில் –

தமிழீழ மக்களின் தேசிய விடுதலை இயக்கமாகவும், தமி ழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகள் என சர்வதேச சமூ கத்தாலும், 2002 இல் நோர்வே, ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெ ரிக்கா, ஜப்பான் ஆகிய நாடு களின் அனுசரணையுடன் சிறீ லங்கா அரசாங்கத்துடன் நடை பெற்றபேச்சுமூலமும்அங்கீகாரத் தைப் பெற்றதாக விளங்கிய தமி ழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தைப் பயங்கரவாத இயக்கப் பட் டியலில் சேர்த்தமையை, ஆரம் பத்திலிருந்தே அரசியல் ரீதியாக வும், சட்டரீதியாகவும், தார்மீக ரீதி யாகவும் தவறான விடயமாகவே நாம் பார்க்கிறோம்.

மேலும் ஐரோப்பிய பொது நீதிமன்றம் 2014 இல் வழங்கிய தீர்ப்பில் தமிழீழ விடுதலைப் புலி கள் இயக்கத்தின் மேல் வைக்கப் பட்ட குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப் படாத தகவல்களின் அடிப்படை யில் இருந்தமையையும், தகைமை வாய்ந்த ஒரு நிறுவனத்தால் அவை முன்வைக்கப்படவில்லை எனக் கூறியதையும் இத்தருணத் தில் சுட்டிக்காட்ட விரும்புகின் றோம்.

நாடற்ற மக்களின் உரிமைப் போராட்டங்கள் அனைத்தையும் பயங்கரவாதம் என்ற கூடைக்குள் போடுவது நீதிக்காகவும், பாது காப்புக்காகவும், சுதந்திரத்திற் காகவும் போராடும் தேசிய இனங் களின் போராட்டங்களினது நியா யங்களை மறுப்பதாக அமையும். சட்டங்களை உருவாக்குவது, நாடுகளும், நாடுகளை அங்கத்த வர்களாகக் கொண்ட அமைப்புக் களும்தான் என்பதையும் நாம் அறிவோம்.

ஐரோப்பிய நீதிமன்றம் கூறி யதுபோல், 2009 இற்கு பின்னர் வன்முறை தவிர்ந்த போராட்ட மாக முற்றிலும் வடிவம் மாறிய தமிழர் போராட்டத்தைப் பயங்கர வாதம் என அழைப்பது, சட்டத்தைத் துஷ்பிரயோகம் செய்வது மட்டு மல்லாது பொது அறிவையும் அவ மதிப்பதாக அமைகின்றது.

ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியாகிய சில மணி நேரத்திற்குள்ளேயே, ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பு 2013 இற் கும் 2015 இற்கும் இடைப்பட்ட காலத்திற்கே மட்டுப்படுத்தப்பட் டுள்ளது என்றும், 2015 ற்கும் 2017 ற்கும் இடைப்பட்ட காலத் திற்கு செல்லுபடியாகாது என் றும் வெளியான ஐரோப்பிய ஒன் றியத்தின் அறிக்கை எமக்கு ஆச் சரியத்தையும் வேதனையையும் ஏற்படுத்தியுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மேலுள்ள தடை செல்லுபடியாகாது என்ற ஐரோப் பிய நீதிமன்ற தீர்ப்புக்கான காரணம் (Rationale) 2013 ற்கும் 2015 ற்கும் இடைப்பட்ட காலத்தை விட 2015 முதல் இன்று வரையு மான காலகட்டத்துக்கு மேலும் கூடப் பொருத்தமானது என்பதை சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

மேலும் ஐரோப்பிய நீதி மன்றம் ஹமாஸ் இயக்கத்தைத் தொடர்ந்தும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் வைத் திருக்க வேண்டும் என்ற தீர்ப்பை வரவேற்றுள்ள அமெரிக்க இரா ஜாங்க திணைக்களத்தின் அறிக்கை, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீதான தடை செல்லுபடியாகாது எனக் கூறிய தீர்ப்புத் தொடர்பாகக் கருத்து எதை யும் கூறாதிருப்பதையும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டும்.

ஐரோப்பிய நீதிமன்றத்தின் தீர்ப்பு வெளியானவுடன் உலகத் தமிழ் மக்களிடையே பொங்கி யெழுந்த மகிழ்ச்சி அலை, தமி ழீழ விடுதலைப் புலிகளின் மேல் மக்களுக்கிருக்கும் அபிமானத் தையும், ஆதரவையும் வெளிக் காட்டி நிற்கின்றது.

மேலும் ஐரோப்பிய நீதிமன் றத்தின் தீர்ப்பைத் தமிழ் தேசிய இனத்தின் மரபுவழி உரிமை யான சுயநிர்ணய உரிமைக்குச் செயலுருவம் கொடுப்பதற்காகத் தமிழ் தேசிய இனம் தற்போது தேர்ந்தெடுத்துள்ள போராட்டவடி வத்துக்குக் கிடைத்த அங்கீகார மாகவும் நாம் பார்க்கிறோம். – என் றார். (ம)

## சாரணர் பணிக்கு நல்லூரில் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20

1961ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 56 வருடங்களாகத் தொடர்ந்து நல்லூர் உற்சவத் தின் போது சிறந்த சேவையை வழங்கி வரும் யாழ். மாவட்ட சாரணர் அமைப்பு, இந்த வருடம் முதல் அப்பணியில் சிறந்த சேவையாற்றி வருபவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கிக் கௌர விக்கவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று ஞாயிற் றுக்கிழமை மாலை 3.30 மணி முதல் 5 மணிவரை நல்லூர் நல்லை ஆதீனத்தில் நடைபெற விருப்பதாக யாழ். மாவட்ட சார ணர் அமைப்புத் தெரிவித்துள் ளது. (உ)

## நல்லை ஆதீனத்தில் இசை அர்ச்சனை

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர் கந்தன் தேர்த்திரு விழாவை முன்னிட்டு நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீன மண் டபத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை மாலை 7 மணிமுதல் சாஸ்திரிய இசை நிகழ்ச்சி இடம் பெறும்.

இசை அர்ச்சனையில் மிரு தங்க இசையை பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா, பிரம்மஸ்ரீ சு.அனந்தநாராயணன் சர்மா ஆகியோரும் வயலின் இசையை சு.வாசுகி, சு.நந்தினி ஆகியோ ரும், பியானோ பிரம்மஸ்ரீ சு.அர விந்தன் சுப்பிரமணியம் சர்மா வும் வழங்குவர்.

இசை ஆர்வலர்கள் அனை வரையும் கலந்து பயன் பெறு மாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித் துள்ளனர். (இ)

# ஜே.வி.பியின் 6 எம்.பிக்களால் செய்யக் கூடியவற்றை கூட்டமைப்பு 16 எம்.பிக்களால் ஏன் செய்ய இயலவில்லை?

## சந்தேகத்துடன் கேட்கின்றார் அதன் எம்.பி. ஹந்துநெத்தி

மட்டக்களப்பு, ஓக.20

"ஜே.வி.பி. தனது நாடாளு மன்ற உறுப்பினர்கள் ஆறு பேரை வைத்துக்கொண்டு பல விடயங்களைச் செய்யும்போது, நாடாளுமன்றில் 16 உறுப்பினர் களைக் கொண்டுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏன் சில பிரச்சினைகளைத் தீர்க்க முடியாமல் இருக்கின்றது?" என ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப் பினர் சுனில் ஹந்துநெத்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்று முன்தினம் வெள் ளிக்கிழமை மட்டக்களப்புக்கு விஜயம் செய்த அவர், மட்டக் களப்பு மாவட்ட தமிழ் ஊடக வியலாளர்கள் ஒன்றியத்தைச் சந்தித்துக் கலந்துரையாடினார். அப்போதே மேற்படி கேள்வியை அவர் எழுப்பினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் நல்லாட்சி அரசுக்கு முன்னர் இருந்த செயற்பாடுகள், அதன் பின்னரான நிலைமைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் நாடாளுமன்ற உறுப்பினருக்குத் தெளிவுபடுத்தினர்.

மட்டக்களப்பு மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் இனி வரும் காலங்களில் தாம் முக்கிய கவனம் செலுத்துவார் எனவும், இதற்காகத் தமிழ் தேசிய கூட் டமைப்பும் தமக்கு ஆதரவளிக்க வேண்டும் எனவும் சுனில் ஹந்து நெத்தி தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெறுவன எனத் தெரிவிக் கப்படும் ஊழல், மோசடிகள் தொடர்பில் உரிய விசாரணைகள் நடைபெறுகின்றனவா என்பதில் சந்தேகம் நிலவுகின்றது. இது தொடர்பில் கோப் குழு கவனம் செலுத்த வேண்டும் என அந்தக் குழுவின் தலைவரான சுனில் ஹந்துநெத்தியிடம் ஊடகவிய லாளர்கள் கோரினர்.

இது தொடர்பில் தான் கவனம் செலுத்தி உரிய விசாரணைகள் நடத்த நடவடிக்கை எடுப்பார் என நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹெந்துன்நெத்தி உறுதியளித்தார்.

அத்துடன் கல்குடாவில் நிர் மாணிக்கப்பட்டுவரும் எதனோல் உற்பத்திச்சாலை தொடர்பிலும் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு அந்த எத னோல் உற்பத்தி நிலையம் திறக் கப்படமாட்டாது என்பதைத் தான் உறுதியாகக் கூறுகிறார் எனவும் அவர் தெரிவித்தார். (ம)

# நல்லாட்சி இதுதானா? நாமலுக்கு சந்தேகம்

கொழும்பு, ஓக.20

"பொலிஸ் அதிகாரியொரு வரைத் தாக்கிய நபரை விடு தலை செய்துவிட்டு, இன்னொரு பொலிஸ் அதிகாரியை நான் அச் சுறுத்தினேன் எனக் குற்றம்சாட்டி என்னைக் கைது செய்யப்பார்க் கின்றனர். இதுதானா நல்லாட்சி?"

– இவ்வாறு கூட்டு எதிரணி யின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப் பினார்.



''பொலிஸ் அதிகாரியை அச்சுறுத்தினேன் என்று தெரி வித்து என்னைக் கைது செய்யப் பார்ப்பவர்கள், பொலிஸ் அதி காரி ஒருவர் மீது பகிரங்கமாகத் தாக்குதல் நடத்திய பொலிஸ் மா அதிபருக்கு எதிராக எதனையும் செய்யாதிருக்கின்றனர். இதுவா நல்லாட்சி அரசாங்கம்?" – என வும் நாமல் ராஜபக்ஷ கேள்வி எழுப்பியுள்ளார். (ம)

# இந்திய உத்தரப்பிரதேசத்தில் நேற்று பாரிய ரயில் விபத்து

## 23 பேர் பலி, 40 பேர் காயம்



இந்தியாவின் உத்தரப்பிரதேச மாநிலத்தில் நேற்று மாலை மோச மான ரயில் விபத்து ஒன்று ஏற் பட்டுள்ளது. இதில் 23 பேர் பலி யானார்கள் என நேற்றிரவு அறி விக்கப்பட்ட போதிலும் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக் கும் என அஞ்சப்படுகின்றது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உட்கல் எக்ஸ்பிரஸ் ரயில் பய ணித்துக் கொண்டிருந்தபோது அதன் ஆறு பெட்டிகள் தடம் புரண்டு விபத்துக்குள்ளாகின. இதன்போது 14 பெட்டிகள் சேத ம டைந்தன எனக் கூறப்படுகின்றது.

இந்த விபத்தில் நாற்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர் எனவும் இந்த எண்ணிக்கையும் மேலும் அதிகரிக்கக்கூடும் என வும் தெரிவிக்கப்பட்டது.

இந்த விபத்தில் சிக்கியோரை மீட்க 44 பேர் கொண்ட தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் பணி யில் ஈடுபட்டுள்ளனர் என மத்திய ரயில்வே அமைச்சர் சுரேஷ் பிரபு தெரிவித்தார். விபத்து நடந்த இடத் திற்கு மூத்த அதிகாரிகளை உடனடியாக செல்லுமாறும் தான் பணிப்புரை விடுத்தார் என அவர் நேற்றிரவு டுவிட்டரில் பதிவிட்டிருந் தார்.

விபத்து தொடர்பாக உடனடி விசாரணைக்கும் தாம் உத்தரவிட் டுள்ளார் எனவும் தவறு செய்தவர் கள் யாராக இருந்தாலும் தராதா ரம் பாராது நடவடிக்கை எடுக்கப் படும் எனவும் அவர் கூறினார்.

விபத்தில் பலியானவர்களின் குடும்பத்தினருக்கு மூன்றரை லட்சம் ரூபாவும், படுகாயமடைந் தவர்களுக்கு 50 ஆயிரம் ரூபாவும் சிறிய காயமடைந்தவர்களுக்கு 25 ஆயிரம் ரூபாவும் நிவாரண மாக வழங்கப்படும் என ரயில்வே துறை அறிவித்துள்ளது.

இதேவேளை, ரயில் பெட்டி கள் தடம்புரண்ட சம்பவத்தைக் கேள்விப்பட்டு தான் மிகவும் வேதனை அடைந்தார் என பிரத மர் நரேந்திர மோதி ட்விட்டரில் தனது கவலைகளை வெளிப் படுத்தியிருந்தார். (ம)

# இலங்கையில் பாரதி 39

● முருகபூபதி – ஆஸ்திரேலியா





பாரதியின் கவிதைகளில் எளிமையும் ஓசைநயமும் சொற்சிக்கனமும் இருந்தமையால் இசைப்பாடல்களாகவும் அவை மாறிவிட்டன.

தமிழகத்திலும் இலங்கையிலும் மட்டுமன்றி புலம்பெயர்ந்தவர்கள் வாழும் நாடுகளிலும் பாரதியின் பாடல்கள் பலரால் இசையோடு பாடப்படுகின்றன. கச்சேரிகளில், அரங்கேற்றங்களில், திரைப்படங்கள், நாடகங்கள், கூத்துக்களிலெல்லாம் பாரதியின் கவிதைகள் பண்ணோடு ஒலிக்கின்றன.

பாரதியும் தான் இயற்றிய கவிதைகளை இராகத்துடன் பாடும் இயல்பைக்கொண்டிருந்தவர். பாரதியின் பக்தரான பாரதிதாசன் ''**பாரதிதான் சிந்துக்குத் தந்தை**'' என்று எழுதியிருக்கிறார்.

ஆனால், அதனை மறுக்கிறார் ஈழத்து அறிஞர் (அமரர்) **தென்புலோலியூர் மு. கணபதிப்பிள்ளை.** எனினும் சிந்து எனப்படும் தொன்மையான இசைப் பாடலுக்கு உயிரூட்டி வளர்த்தவர் பாரதிதான் எனவும் ஒப்புக்கொள்கிறார்.

மு. கணபதிப்பிள்ளை, தாம் பிறந்த ஊரின்பெயரையும் தமது பெயருடன் இணைத்துக் கொண்டு எழுத்துலகில் வாழ்ந்தவர். இலங்கை அரசமொழித் திணைக்களத்தில் பணியாற்றியவர். இலங்கை வானொலியிலும் இலக்கிய மேடைகளிலும் உரையாற்றியவர். இவருடைய மகள்தான்(அமரர்) திருமதி கமலினி செல்வராசன். இவரும் இலங்கை வானொலியில் புகழ்பெற்ற கலைஞர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிந்துவகைப்பட்ட இசைப் பாடல்கள் பாரதிக்கு முன்பே மரபுவழியாக புனையப்பட்டிருக்கின்றன என்று சொல்லும் கண பதிப்பிள்ளையவர்கள், பாரதியின் எங்கள் **தாய் என்ற** கவிதை காவடிச் சிந்திலே எழுதப்பட்டிருக்கும் தகவலையும் பதிவு செய்கிறார்.

''**தொன்று நிகழ்ந்த தனைத்தும் உணர்ந்திடு சூழ்கலை வாணர்களும் - இவள் என்று பிறந்தவள் என்றுணராத இயல் பினளாம் எங்கள் தாய்**'' எனச் சொல்வதன் மூலம் அதன் தொன்மையை பாரதி குறிப்பிடுகிறார்.

தொன்று நிகழ்ந்திடும் யாவற்றையும் உணர்ந்து கொள்ளத்தக்கவர்கள், முக்காலங்களும் உணரும் முனிவர் வகையினைச் சார்ந்தவர்கள். அவர்களே, தமிழ்த்தாய் எப்போது பிறந்தவள் என்று அறிந்து கூறமுடியாத இயல்பினையுடையவள் அவள் என்று கூறுகிறார்.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன் தொடங்கியே கன்னித் தன்மை குலையாமல் வளர்ந்து வரும் இயல்பினை உடையவளாய் இருப்பதனாலேயே அவளை இன்றும் ''**கன்னி தமிழ்**'' என்று போற்றிவருகின்றோம். இன்று சிந்துவெளிமொழியை ஆராய்ந்துகொண்டிருக்கும் உலகப் பேரறிஞர்கள் கூட அவள் என்று பிறந்தவள் எனக் கூறமுடியாது கையை விரிக்கிறார்கள்.

அடியும் முடியும் காண முடியாது திகைக்கிறார்கள். தமிழ் தான் சிந்து வெளிமொழியென உறுதியாகக் கூறுகிறார்கள்.

''இலக்கியப்பாடல்களிலே பெரும்பாலானவை, முதலிலே எழுதா இலக்கியமாகவே இருந்து பின்னதாக ஏட்டில் இடம்பெற்றவையாகும். மிகப் பழைய இலக்கியங்களிலே பயின்றுவரும் அகவல், வஞ்சி, கலி ஆகியவை கூட ஏட்டிலே ஏறுமுன், எழுதா நிலையினவாகவே இருந்தன. இந்த வகையாகவே சிந்து மரபும் வளர்ந்து வந்தது எனத் தெளிவாகத்தெரிகின்றது'' என்று பதிவுசெய்துள்ளார் தென்புலோலியூர் கணபதிப்பிள்ளை. ( **ஆதாரம்: பாரதியாருக்கு முன்பே சிந்து பாடியவர் பலர் - கட்டுரை - சிந்தாமணி 29-04-1984)**

நாட்டார் பாடல்கள், கிராமி யப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள், தாலாட்டுப் பாடல்கள் யாவும் ஏட்டிலே எழுதப்படு முன்னர் மரபார்ந்து வாய்மொழிக் கூற்றாகத்தான் முதலில் வெளிவந்தன. இவை குறித்து பிற்காலத்தில் பல் கலைக்கழக மட்டத்திலும் ஆராயப்படுகிறது.

பாரதியால் வளர்த்தெடுக் கப்பட்ட சிந்துவகை அடிச்சுவட்டினை சுந்தர மூர்த்தி நாயனார், அப்பர், திருஞான சம்பந்தர் பாடல்களிலும் காணமுடிகிறது என்றும் சொல்கிறார் கணபதிப் பிள்ளை.



''**நீள நினைந்தடியேன் - உனை நித்தலும் கைதொழுவேன்**'' (சுந்தரர்)

''**தலையே நீ வணங்காய் - தலை மாலைதலைக்கணிந்து**'' ( அப்பர்)

''**தோடுடைய செவியன் விடையேறியோர்**'' (ஞானசம்பந்தர்) முதலான திருப் பதிகங்களும் சிந்து வகைப் பட்டதே என்பது கணபதிப்பிள்ளை அவர்களின் கூற்று. அதனால் பாரதிக்கு முன்பே பலரும் சிந்து பாடியிருப்பதனால், பாரதிதாசன் சொல்வது போன்று பாரதியை சிந்துக்குத் தந்தை எனச்சொல்ல முடியாது என்பதுதான் இலங்கை தமிழ் அறிஞரின் வாதம். இவ்வாறு சொன்ன தனால் பாரதியின் மகிமை குறைந்து விடப்போவதில்லை.

சிந்துக்கு மேலும் உயிரூட்டி நவீன தமிழ் இலக்கியத்திற்கு மேலும் வளம் சேர்த்தவர் பாரதி.

இது இவ்விதமிருக்க, பாரதியின் கவிதை வரிகளும் இலங்கையில் வாதப்பிரதிவாதங்களுக்குட்பட்டிருக்கின்றன.

தமிழ் தொன்மையான மொழி எனச் சொல்லப்படுகிறது. தமிழ் பேசும் தமிழர்கள் பற்றி பாரதி, கனியன் பூங்குன்றனார், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, பாரதிதாசன், ஈழத்துக் கவிஞர் புதுவை இரத்தினதுரை, பேராசிரியர் சி.சிவசேகரம் ஆகியோரின் கருத்துக்களை ஒப்புநோக்கி எழுதியவர் தற்பொழுது இங்கிலாந்தில் வசிக்கும் எழுத்தாளர் **அ. இரவி.** இவர் இலங்கையில் பாரதி நூற்றாண்டு காலகட்டத்தில் புதுசு என்ற இலக்கிய விமர்சன இதழும் நடத்தியிருப்பவர்.

மகாகவி பாரதியார் கவிதைகள் தொகுப்பில் **தமிழச்சாதி** என்ற தலைப்பில் ஒரு நீண்ட கவிதை இடம்பெறுகிறது. அவர் அதற்கு கொடுத்திருக்கும் தலைப்பு: ''**இருதலைக் கொள்ளியினிடையே**'' ஆனால், பாரதி தமது கைப்பட எழுதி சிதைவுற்ற பிரதியே தொகுப்பாளர்களுக்கு கிடைத்திருக்கிறது.

அதன் தொடக்கமும் முடிவும் தெரியாமல் **தமிழச்சாதி** என்று தமிழ் இனத்தை பாரதி வர்ணித்திருப்பதனால் இந்தத் தலைப்புடன் தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது.

அக்காலகட்டத்தில் தமிழ் இனம் குறித்து பாரதிக்கு இருந்த பார்வையினால் ஆவேசமுற்று இருதலைக் கொள்ளியினிடையே என்ற தலைப்பிலேயே அதனை எழுதியிருப் பதாகவே புரிந்துகொள்கின்றோம்.




'விதியே விதியே தமிழச்சா தியை என்செய நினைத்தாய் எனக்குரையாயோ...?, என்ற வரிகள் இடம்பெறும் இக்கவி தையில் திருக்குறளும், சிலப்பதிகாரமும், கம்பராமாயணமும் கண்ட தமிழச்சாதியை ''அமரத் தன்மை வாய்ந்தது'' எனப் பேருவகை கொண்டு பாடி விட்டு, அதே தமிழச்சாதி, ஆப்பிரிக்கத்து காப்பிரி நாட்டிலும் தென் முனையடுத்த தீவு கள் பலவினும்..... தமிழச்சாதி தடியுதை யுண்டும் காலுதை யுண்டும்.... என்று வெகுண்டு தொடர்கிறார் பாரதி.

''மேற்றிசை வாழும் வெண்ணிற மக்களின் செய்கையும் நடையும் தீனியும் உடையும் கொள்கையும் மதமும் குறிக ளும், நம்முடையாவற்றினுஞ் சிறந்தன, ஆதலின் அவற்றை முழுதுமே தழுவி மூழ்கிடினல்லால், தமிழச்சாதி தணிமீதிராது, பொய்தழிவெய்தல் முடி'' யெனப் புகலும் நன்றடா நன்று! நாமினி மேற்றிசை வாழ்குவம் எனிலோ ''ஏ... ஏ... அஃதுமக்கிசையா'' தென்பர்..... என்று தொடர்ந்து,

''சீமை மருத்துகள் கற்ற மருத்துவர் தமிழச்சாதியின் நோய்க்குத்தலையசைத்தேகினர் என்பதேயாகும் இஃதொரு சார்பாம்...'' என்று மேலும் தொடருகிறார்.

பாரதி தமிழர்களின் இரண்டக வாழ்வையும் அவர்தம் சிந்தனையையும் பற்றி இவ்வாறு விவரிக்கும் பொழுது அவர் இருதலைக் கொள்ளி யினிடையே தான் இதனை எழுதியிருப்பது புரிகிறது.



அதனால் தமிழ்ச்சாதியை அவர் குறைத்து மதிப்பிட வில்லை என்பதை அ. இரவி **வீரகேசரி வார வெளியிட்டில் (03-04-2005)** ஆராய்கிறார்.

நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையவர்கள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டு சிறைக்கும் சென்றவர். காந்தியடிகளின் உப்புச் சத்தியாக்கிரக போராட்டத்தில் மக்கள் ஊர்வலமாக சென்றவேளையில் அவர்கள் பாடுவதற்காக ''கத்தியின்றிரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' பாடலை இயற்றிக் கொடுத்தவர்.

அத்துடன் ''**தமிழன் என்றோர் இனமுண்டு தனியே அதற்கோர் குணமுண்டு**'' என்ற பாடலையும் ''தமிழ் அன்னைக்குத் திருப்பணி செய்வோமே, தரணிக்கே ஓரணி செய்வோமே அமிழிதம் தமிழ் மொழி என்றாரே அப்பெயர் குறைவது நன்றாமோ'' என்ற பாடலையும் தமிழ்த்தாய் வாழ்த்தாக வழங்கியிருப்பவர்.

பாரதிதாசன் இவர்களுக்கெல்லாம் ஒரு படி மேலே சென்று, '' தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா'' எனப்பாடினார்.

பாரதியோ ''யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்'' எனவும் ''**வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி வாழிய வாழியவே**''என்றும் பாடினார். இந்தப்பாடல் தான் இன்றும் தமிழ்மேடைகளில் நிகழ்ச்சி தொடங்கும் முன்னர் ஒலிக்கிறது.

( 17ஆம் பக்கம் பார்க்க)

காலைக்கதிர் Kalaikkathir



தெய்வீகன்



# அரசியல்வாதிகளின் அல்லக்கைகள்: ஆபத்பாந்தவர்களா? ஆபத்தானவர்களா?

இளையவர்களின் பங்களிப்பெனப்படுவது எல்லாத்துறைகளையும் போல அரசியலிலும் செழிப்போடு பார்க்கப்படுகின்ற விடயம் ஆகும். தலைமுறை மாற்றங்களின் வழியாக புதிய சிந்தனைகளோடு - புதிய எதிர்பார்ப்புக்களோடு - புதிய முகங்களோடு - மக்களுக்காகப் பணி செய்ய வருகின்ற இளையவர்கள் பலர்; காலத்தின் நீட்சியில் பெரிய பெரிய மாற்றங்களுக்கான பிரதான காரணிகளாகியிருக்கிறார்கள். வரலாற்றை வளைத்திருக்கிறார்கள். புதிய உலக ஒழுங்கை வரைந்து காட்டியிருக்கிறார்கள். எந்தக்காலத்திலும் சாதிக்க முடியாது என்று ஒதுக்கப்பட்ட விதிகளை சாத்தியமாக்கியுள்ளார்கள்.

### இளையோர் பங்களிப்பு

இத்தகைய இளையவர்களின் பயணங்கள் எவ்வகையான புரட்சிகளுக்கு வித்திடக்கூடிய வீரியம் வாய்ந்தவை என்று ஈழத்தமிழர்களுக்கு எவரும் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை.

காலா காலமாக உலகின் மூலை முடுக்கெங்கிலும் பெருக்கெடுத்து பாய்ந்த சகலவிதமான புரட்சி ஆறுகளையும் மேவி பாய்ந்த பெரு நதியாகப் பொங்கிப் பிரவகித்த ஈழத் தமிழர்களின் ஆயுத வழிப்போராட்டத்தில் இளையவர்களின் பயங்களிப்பு எத்தகையது என்பது தமிழர்களாகிய நாங்கள் வாழ்ந்து முடித்த வரலாறு. அச்சத்தின் அர்த்தங்களையே ஆகுதியாகிவிட்டு உலகின் உச்சங்களிலெல்லாம் தங்களை உச்சரிக்க வைக்குமளவுக்குதியாகக் கீற்றுக்களை பரவவிட்டவர்கள் எங்கள் இனத்தின் இளையவர்கள்.

இவையெல்லாம் நடந்து முடிந்தது 2009 ஆம் ஆண்டுக்கு முற்பட்டதொரு காலப்பகுதி.

ஆனால், இன்று - அவர்களின் அத்தகைய அர்ப்பணிப்பும் தியாகமும் ஈழத்தமிழர்கள் மத்தியில் நிலவுகின்ற தற்போதைய அரசியல் நிலைமைக்குப் பாதகமான ஒன்றாகவே அடியில் மண்டிக்கிடக்கிறது. அது எவ்வாறென்றால், மக்களுக்காக பணி செய்ய முன்வருகின்ற எவரையும் மக்கள் அந்த மாவீரர்களின் தியாகத்தின் அளவுகோல் வைத்துத்தான் அளந்து பார்க்கிறார்கள். அந்த மாவீரர்களின் செயல்திறனோடு ஒப்பீடு செய்துதான் பரிசோதிக்கவும் செய்கிறார்கள்.

### நோஞ்சான் வீரர்கள்

அந்தவகையில், தற்போது ஈழத் தமிழர் மத்தியில் அரசியல் செய்யப் போவதாக அரங்குக்கு வந்து நிற்பவர்கள் எவரும் மக்களால் ஒரு நோஞ்சான் வீரராக பார்க்கப்படுகின்றமை தவிர்க்க முடியாததாகி விடுகிறது. இது எவருக்குமே சவாலானதொரு விடயம்.

> *தமிழ்த் தேசிய அரசியலில் புத் தூக்கம் மிக்க - புதிய சிந்தனைகள் செறிந்தவர்கள் - களத்திற்கு வரவேண்டும். மக்கள் மனங்களோடு வெளிப்படையாக பேசக்கூடிய இளையவர்கள் அரசியலுக்கு வரவேண்டும். கடந்த காலங்களில் தலைவர்கள் உட்பட அனைவரும் இழைத்த சரி - பிழைகளை உள்வாங்கி சீர்தூக்கிப் பார்த்து அவற்றின் அடிப்படையில் மக்களை வழி நடத்திச் செல்லக்கூடிய இளையவர்கள் தேசத்தின் சொத்துக்களாக பிறப்பெடுக்க வேண்டும்.*

ஆனால், இதனை நாங்கள் வேறொரு கோணத்தில் பார்த்தால் -

ஆயுதப்போராட்டத்தின்போது உயிரை ஆயுதமாக வரித்துக்கொள்வதும் உயிரை அர்ப்பணிப்பவர்களை ஆதர்ஷமாகக் கொள்வதும் கள நிலை அடிப்படையில் ஏற்றுக் கொள்ளக் கூடிய தியாகம். அதுதான் உலகப் பொது விதியும்கூட.

ஆனால், இன்று நிலவுகின்ற அரசியல் போராட்ட சூழ்நிலையில் அரசியல்வாதிகளின் பங்களிப்பும் அவர்களின் தலைமைத்துவமும் அவர்கள் பயணிக்கவேண்டிய பாதையும் வித்தியாசமான படிமுறைகளைக் கொண்டவை. அந்த படிமுறைகளின் வழியில் அரசியல் தலைவர்களும் அவர்களின் அடியொற்றிகளும் எவ்வகையான மார்க்கங்களை கடைப்பிடிக்கவேண்டும் என்பது வேறொரு சூழ்நிலையின் ஊடாகப் பார்க்கப்படவேண்டியது. அதனை மக்கள் ஏற்றுக்கொள்ளுகின்ற அரசியல் பக்குவமும் உணர்வுநிலை சார்ந்த திருப்திப்பாடுகளும் இலகுவில் எட்ட முடியாதவையாக இருக்கலாம். ஆனால், காலப்போக்கில் அந்த யதார்த்தங்களை மக்கள் உள்வாங்கிக் கொள்வார்கள். முள்ளிவாய்க்காலின் பின்னரான எட்டாண்டு காலப்பகுதி இதனைப் பல்வேறு கட்டங்களில் எடுத்துக் காண்பித்திருக்கிறது.

அந்த வகையில், மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட - 2009 ஆம் ஆண்டு நிறைவடைந்த போர்க்காலத்தோடு தமிழ் மக்களுக்கான திடீர் பொறுப்பாளிகளாகிவிட்ட - தமிழ் அரசியல்வாதிகள் என்னவெல்லாம் சாதிக்க நினைத்தார்கள், கடைசியில் என்ன சாதித்திருக்கிறார்கள், இன்னும் என்னென்னவெல்லாம் சாதிக்கப்போவதாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள் என்று ஒவ்வொரு நாளும் ஊடகங்களில் பார்த்துக்கொண்டிருக்கிறோம்.

தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் கீழ் தமிழ் மக்கள் எதுவுமே அடைந்துவிடவில்லை என்று கூறிவிடமுடியாவிட்டாலும்கூட -

### வெறுப்பும் கோபமும்

இன்னமும் அடைந்திருக்கக்கூடிய பலன்களை இழந்த விரக்தியும் அந்த தவறுகளை திருத்திக்கொள்ளாத கூட்டமைப்பின் பாவனைகளின் மீது ஏற்பட்டிருக்கும் கோபமும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் கூட்டமைப்பின் தலைமைத்துவத்தின் கீழ் பெற்றுக்கொண்டவற்றையும் ஒருவித வெறுப்புடனேயே முன்னிலைப்படுத்தியிருக்கிறது. ஆட்சி மாற்றத்துக்கான தந்திரோபாயம் உட்பட பலவற்றை இந்த வரிசையில் அடுக்கிச் சொல்லலாம்.

இவ்வாறான நிலையில், இனிமேல் தமிழ்த் தேசிய அரசியலை புதிய பரிணாமத்தின் வழியாக முன்கொண்டு செல்லவேண்டியதும் அதற்கான ஆக்கபூர்வ ஏற்பாடுகளைத் தயார் செய்வதும் அத்தியாவசியமாகவுள்ளது. இந்த தேவையின் ஓர் அங்கமாகத்தான் மாற்றுத் தலைமைக்கான கோஷங்கள் உட்பட பல கச்சேரிகள் பலநூறு ராகங்களில் பாடப்பட்டு வருகின்றன. அதிகாரபீடத்தில் முடிவெடுக்க வல்லவர்களாக இருந்துகொண்டிருக்கும் இன்றைய ஆளுமைகளிடமிருந்து தமிழ்த் தேசிய அரசியலுக்கு புதிய சிந்தனைகள் பிறக்கும் என்றும் அவை பெரிய புரட்சிகளை உண்டுபண்ணும் என்றும் மக்களிடமிருந்த நம்பிக்கைகள் எல்லாம் அருகத்தொடங்கிவிட்டன. தமது கதிரைகளைக் காப்பாற்றுவதற்கான சூட்சுமங்களை மாத்திரம் செவ்வனே தெரிந்துவைத்திருக்கிறார்களே தவிர



மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான எந்தவிதமான மாயாஜாலமும் இவர்களிடம் இல்லை. இதனை சிங்கள தேசம் மிக வசதியாகக் கையாண்டு வெற்றிகண்டு வருகிறது.

### புத்தூக்கம் தேவை

அப்படியென்றால் அடுத்தது என்ன?

தமிழ்த் தேசிய அரசியலில் புத்தூக்கம் மிக்க - புதிய சிந்தனைகள் செறிந்தவர்கள் - களத்திற்கு வரவேண்டும். மக்கள் மனங்களோடு வெளிப்படையாக பேசக்கூடிய இளையவர்கள் அரசியலுக்கு வரவேண்டும். கடந்த காலங்களில் தலைவர்கள் உட்பட அனைவரும் இழைத்த சரி - பிழைகளை உள்வாங்கி சீர்தூக்கிப் பார்த்து அவற்றின் அடிப்படையில் மக்களை வழி நடத்திச் செல்லக்கூடிய இளையவர்கள் தேசத்தின் சொத்துக்களாக பிறப்பெடுக்கவேண்டும். அதற்கான காலப்பகுதி கனிந்து விட்டது. ஒரு யுகம் தனது பொறுப்பைக் கைமாறுகின்ற தருணம் வந்துவிட்டது.

(17 ஆம் பக்கம் பார்க்க...)

# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித் திங்கள் 4 ஆம் நாள் சதுர்த்தசித் திதி பி.இ. 2.10 மணி வரை. பின்னர் அமாவாசை. நட்சத்திரம்: பூசம் மாலை 5.22 மணிவரை. பின்னர் ஆயிலியம். சித்தயோகம் மாலை 5.22 அதன் மேல் மரணயோகம் பி.இ. 2.10 மணி வரை. பின்னர் சுபயோகம். பிறந்த நட்சத்திர வழிபாடு: பூசம்.

ராகுகாலம்:- மாலை 4.54 மணி முதல் 6.27 மணி வரை.

சுபநேரம்:- காலை 9.05 மணி முதல் 10.34 மணி வரை.

திவசம் செய்ய வேண்டிய திதி:- ஆவணி மாத தேய்பிறை சதுர்த்தசி.

**சந்திராட்டமநாள்:** மூலம், பூராடம், உத்தராடம் முதலாம் கால் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுப கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

20.08.2017
26.08.2017

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்ம ஸ்ரீ சி.ஜெகதீஸ்வரக்குருக்கள் ஜே.பி.

## மேஷம்:

சஞ்சலமான வாரம் ஆகும். மனச் சஞ்சலம் இவர்களின் செயற்பாடுகளில் தடுமாற்றத்தை ஏற்படுத்தும். பணம் வந்தாலும் செலவுகள் மிக அதிகமாக இருக்கும். சொத்துகள் கைவிட்டுப் போகும். உறவினர்களுடன் நண்பர்களுடனும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விலகும். திருமண காரியங்கள் தள்ளிப் போகும்.

வியாபாரம், தொழில் மந்த நிலை நிலவும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்களைத் தள்ளிப் போட நேரிடும். உத்தியோகத்தர்கள் வேலை கடுமையாலும், மேலதிகாரிகளின் கெடுபிடியாலும் சிரமப்படுவார்கள். புத்திரர்களால் மனக் குழப்பம் ஏற்பட்டு விலகும்.

## ரிஷபம்:

மத்திமமான வாரம் ஆகும். பொருளாதாரம் மத்திமமாக இருக்கும். குடும்ப உறவு விரிசலாகும். உத்தியோகத்தர்கள் சிக்கலில் மாட்டிக் கொள்ள நேரிடும். திறமைக்கும், நல்ல மனதுக்கும் சோதனை உண்டாகும். எதிரிகளால் தொல்லைகள் உண்டாகும். பூர்வீகச் சொத்துக்கள் கைவிட்டுப் போகும்.

தொழில், வியாபாரம் மன நிம்மதியைத் தராது. உத்தியோகத்தர்கள் இடமாற்றத்தால் சிரமப்படுவார்கள். மாணவர்கள் படிப்பில் குறுக்கீடுகள் ஏற்படும். கடுமையான செலவுகளும் தொடர்ந்து வரும். உறவினர், நண்பர்களின் வருகையால் அதிருப்தி நிலவும்.

## மிதுனம்:

யோகமான வாரம் ஆகும். தனலாபம் பெருகும். வெளியூர்ப் பயணங்கள் ஏற்படும். ஆன்மீகப் பெரியோர்களின் தொடர்பால் சிறப்புண்டாகும். மாணவர்கள் படிப்பில் வெற்றி பெறுவார்கள். வீடு, காணி முதலியவற்றில் முதலீடு செய்ய நேரிடும். திருமண சுபகாரியங்கள் நடைபெற்று நிம்மதி ஏற்படும்.

கலைஞர்கள் வசதியும், வாய்ப்பும் பெறுவார்கள். ஆடம்பரப் பொருள்கள் லாபத்தை தரும். பூர்வீகச் சொத்துப் பிரச்சினைகள் சாதகமாகும். புதிய நட்பும், புதிய உறவும் சுக லாபத்தைத் தரும். தொழில் வியாபாரம் முன்னேறும்.

## கடகம்:

ஆக்கபூர்வமான வாரம் ஆகும். சௌகரியங்களும், பண வசதியும் திருப்தி அளிக்கும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபகரம் திருப்தி அளிக்கும். தொழில் உத்தியோகத்தில் முன்னேற்றமும், வருவாயும் ஏற்படும். குடும்ப நட்புறவு மேலோங்கும். உடலாரோக்கியம் சீராக இருக்கும்.

குடும்பத்தில் சுபகாரியங்கள் நடந்தேறும். தந்தையால் சிறப்பான அனுகூலம் உண்டாகும். தொழில் வியாபாரம், கூட்டுத் தொழில் புதிய உற்சாகமும், மேன்மையும் உண்டாகும். பிரிந்த உறவினர்கள் மீண்டும் ஒன்று சேர வாய்ப்புண்டாகும்.

## சிம்மம்:

யோசனையான வாரம் ஆகும். பண வரவில் திடீர் தடை தாமதமேற்படும். வீண் கோபதாபங்களால் வீட்டில் சகஜ நிலை மாறும். நிதானம் தேவை. உத்தியோகத்தர்களுக்கு புதிய சிக்கல் உருவாகும். செலவுகள் அதிகரிப்பால் மன உளைச்சலுக்கு ஆளாவார்கள்.

சுபகாரியம் தள்ளிப்போகும். உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். சிலருக்கு வாகனங்களால் கண்ட தோஷம் ஏற்பட்டு விலகும். பிறர் தலையீடு புதிய சிக்கலை உருவாக்கும். புதிய கடன்கள் சிரமத்தைத் தரும்.

## கன்னி:

உயர்வான வாரம் ஆகும். பணப்புழக்கம் திருப்திகரமாக இருக்கும். உடல் நலம் சுறுசுறுப்புடன் இருக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் சிறப்பைத் தரும். குடும்ப உறவில் ஒற்றுமை நிலவும். தொழில் வியாபாரம் எதிர்பார்த்தபடி நடைபெறும். உத்தியோகத்தர்களுக்கு நன்மை உண்டாகும்.

கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகளும், பாராட்டுகளும் கிடைக்கும். விவசாயிகளுக்கு தானிய வகையால் நன்மை உண்டாகும். சிலருக்கு திருமண காரியங்கள் நடந்தேறி, மன மகிழ்ச்சி உண்டாகும். கடன் சுமை குறையும் தொழிலில் உயர்வுகள் கிடைக்கும்.

## துலாம்:

சமபலன்கள் உள்ள வாரம் ஆகும். வருமானம் சுமார்தான். செலவுகள் அதிகமாகும். கவனக் குறைவும், சோர்வும், மனக்கவலையும் இவர்களை ஆட்டி வைக்கும்.

எண்ணிய காரியங்களில் தடையும், தாமதமும் நிலவும். வீண் சந்தேகம், சண்டை, சச்சரவுகள் குடும்பத்தில் கஷ்டத்தைக் கொடுக்கும். தொழில் வியாபாரம் போட்டியாலும் மந்த நிலையாலும் தடுமாற்றமடையும். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமாக இருக்கும். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. பெண்களால் பிரச்சினை உண்டாகி நீங்கும்.

## விருச்சிகம்:

அனுகூலமான வாரம் ஆகும். பொருளாதாரம் வளமாக இருக்கும். தொழில், வியாபாரம் புதிய ஒப்பந்தங்களாலும், வெளிநாட்டவர் தொடர்பாலும் மேன்மை அடையும். உத்தியோகத்தர்கள் விரும்பிய இடமாற்றம் பெறுவார்கள். பெரிய மனிதர்களின் நட்பும், உதவியும் சிறப்பும் பெறுவார்கள். ஸ்திர சொத்து விவகாரங்கள் அனுகூலமாகும்.

வாகன சுகம் உண்டாகும். நூதன வஸ்திராபரண சேர்க்கையும் உண்டாகும். புதிய தொழில் வாய்ப்புகள் கிடைக்கும். உத்தியோகத்தர்களுக்கு நன்மையும், மேன்மையும் உண்டாகும்.

## தனுசு:

கவலையானவாரம் ஆகும். தனவரவு குறையும். குடும்ப நட்புறவு குறைவடையும். பெண்களால் கலகங்கள் ஏற்படும். வியாபாரம் நஷ்டமடைந்து கவலையைத் தரும். வெளி வட்டாரத்தில் அசௌகரியம் ஏற்பட்டு நீங்கும். பூர்வீகச் சொத்து விவகாரங்கள் கவலையைத் தரும்.

தந்தையின் ஆரோக்கியம் பாதிப்படையும். விரயச் செலவுகள் அதிகரிக்கும். புதிய கடன் சுமை ஏற்க நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு இடமாற்றம் பிரச்சினையைத் தரும். கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெறுவதில் தடைகள் நிலவும். மாணவர்களுக்கு கல்வித் தடை உண்டாகும்.

## மகரம்:

மத்திமமான வாரம். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்ப உறவு சுமாராக இருக்கும். சிலருக்கு வாகன வகையில் செலவுகளும், பாதிப்பும் ஏற்படும். தொழில் வியாபாரிகள் நாணயம் தவற நேரிடும். உத்தியோகத்தர்களுக்கு உடன் பணியாற்றுபவர்களால் தொல்லைகள் உண்டாகும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம் செலுத்த வேண்டும். பிரிந்து சென்ற சகோதரர் மீண்டும் ஒன்று சேர்வார். சிலருக்கு வீட்டைத் திருத்தும் செலவுகள் ஏற்படும்.

கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை. உடல் ஆரோக்கியத்தில் மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

## கும்பம்:

மேன்மையான வாரம். பொருளாதாரம் மேன்மை அடையும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். பெரிய மகான்களின் சந்திப்பு மன நிறைவைத் தரும். புதிய தொடர்புகளால் நன்மை உண்டாகும். தொழில் வியாபாரம் வளர்ச்சி பெறும். புதிய முயற்சிகள் கைகூடும்.

சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பும் உண்டாகும். ஆடை, ஆபரணச் சேர்க்கை உண்டாகும். உத்தியோகத்தர்களுக்கு, பதவி உயர்வு வேண்டிய இடமாற்றம் மன நிறைவைத் தரும். கொடுக்கல், வாங்கலில் புரிந்துணர்வு அதிகரிக்கும்.

## மீனம்:

நன்மையான வாரம். குடும்பச் சூழ்நிலையில் நல்ல திருப்பம் ஏற்படும். பணவரவு குடும்பத்துக்கான தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளக் கூடியதாக இருக் கும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நீண்டகாலம் நோயால் பாதிப்படைந்தவர்கள் நோய் நீங்கி, சுகமடைவார்கள்.

சகோதர உறவு பலப்படும். செய்யும் தொழிலில் முன்னேற்றம் உண்டாகும். போட்டி, பந்தயங்களில் மாணவர்கள் வெற்றி பெறுவார்கள். வெளிநாடு செல்ல முயற்சித்தவர்களுக்கு பாஸ்போர்ட் விசா என்பன கிடைக்கும்.



# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய ‘போரும் சமாதானமும்’ என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

‘சுதந்திர வேட்கை’ என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் ‘Will To Freedom’ என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் ‘தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு’ என்ற பீடிகையுடன் வெளியானது.



70




## அத்தியாயம் - V

## ஒரு பண்பான பெண்

தலைமறைவாகத் தப்பிப் பிழைக்கும் வழிமுறைகளை நாம் உருவாக்கியிருந்தோம். இந்திய இராணுவத்தின் வெவ்வேறு நடவடிக்கைகளுக்கும் அவை ஈடுகொடுத்தன. உள்ளூர் மக்களின் அச்சத்தையும் அவை தவிர்த்தன. பாதுகாப்பான வீடுகளுக்கு இடம் மாறுகின்றமையைப் பொதுவாக இரவில் வைத்துக் கொண்டோம். எமது நகர்வில் புதிரையும் குழப்பத்தையும் ஏற்படுத்தும் நோக்கில் விடியற்காலைக்கு முன்னதாகவும் இடம்பெயர்ந்தோம். பகலில் பயணம் புரிவதில்லை என்று நாம் பிடிவாதமாக இருந்ததில்லை. தவிர்க்க முடியாத அல்லது எதிர்பாராத ஒரு சூழலில் பகலில் இடமாறுவது எனத் தீர்மானித்திருந்தோம். இந்திய இராணுவத்தின் தண்டனைக்கு உள்ளாகலாம் என்ற அச்சத்தில் எமக்கு உதவாமல் பலர் தம் கதவுகளை அடைத்தனர். எனவே, பழைய இடங்களை நாடும் புத்திசாலித்தனமற்ற நிலையிலும் நாம் இருந்தோம். நாம் எங்கே சென்றாலும் இந்தியப் படை காவல் உலா அணிகளைக் காண நேர்ந்தது. எனவே, இருபத்திநான்கு மணி நேரமும் விழிப்போடு இருந்தோம். இரவுக் காவல் உலாவை அவர்கள் கிரமமாக நடைமுறைப்படுத்தாத போதிலும் எந்த நேரமும் எந்த இடத்திலும் படையினர் வரலாம் என்று எதிர்பார்த்தோம். ஆகவே, ஒரு பின்னிரவில், நவிண்டிலில் எமது ஆதரவாளர்களில் ஒருவரான ரதியின் வீட்டை நாம் சென்றடைந்தபோது கரவெட்டியில் இருந்து நாம் புரிந்த பயணத்தின்போது பருவ மழையில் சிக்கி தெப்பமாக நனைந்திருந்ததால் ரதியின் உபசாரம் எனது வாழ்வில் கிடைத்த மிகக் குதூகலமான, மறக்க முடியாத வரவேற்பாக மனதில் பதிந்தது.

ரதியின் வீட்டை நாம் சென்றடைந்த போது அவர் எம்மை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். சூடான பிட்டு அடுப்பில் இதமாக மணந்து கொண்டிருந்தது. மெழுகுவர்த்தி ஒளியில் அவர் தரையில் உட்கார்ந்து கூடுதலான பிட்டு அவிப்பதற்காக மாவை குழைத்துக் கொண்டிருந்தார். அவரைச் சுற்றி அவருடைய மூன்று பிள்ளைகளும் சமையலில் உதவி புரிந்த வண்ணம் அமர்ந்திருந்தார்கள். எமது போராளிகளில் சிலரும் அங்கே உதவிபுரிந்து கொண்டிருந்தார்கள். எம்மைக் கண்டதும் எம்மை வரவேற்க ரதி உடனே எழுந்து வந்தார். மழை நீர் எம்மில் இருந்து சொட்டிக் கொண்டிருந்த போதும் எமக்கென கவனம் எடுத்து ஆயத்தப்படுத்தியிருந்த அறைக்குள் எம்மை இட்டுச் சென்றார். அந்த அறை தந்த வரவேற்பு என்னை ஒரு கணம் திக்குமுக்காடச் செய்தது. எளிமையான மிகச் சுத்தமான அறை இரண்டு கட்டில்கள், ஒவ்வொன்றும் எதிர் எதிர் சுவர்களுக்கு அருகே. ஒவ்வொரு கட்டில்களுக்கும் அருகே குட்டி படுக்கை மேசை. ஒரு விடுதியின் அறையை அது நினைவூட்டியது. ஆனால், ரதியின் வருக வருக என்ற உணர்வும் அங்கே தனியாகத் தெரிந்தது. படுக்கை மேசையில் வெந்நீர்க் குவளைகள், அருகே தேநீர், சீனி, பால்மா!

என்னை வீட்டுக்கு வெளியே உள்ள பெரிய தொட்டி அருகே கூட்டிச் சென்றார். கொங்கிறீற்ரால் கட்டப்பட்ட குளிக்கும் தொட்டி போல அது இருந்தது. தோட்டத்துக்கு இறைப்பதற்காகவும், குளிப்பதற்காகவும் தோட்டக்காரர் நீரை தேக்கி வைத்த தொட்டி அது. நீர் நிறைந்திருந்தது. என்னிடம் ஒரு துவாயையும், புதிய சவர்க்காரம் ஒன்றையும் தந்தார். வெதவெப்பான அந்த பருவமழையில் நின்று குளித்தேன். கதகதப்பான மழை பொழிந்து கொண்டிருக்கும்போது கிணற்றடியில் நின்று குளிப்பது யாழ்ப்பாணத்தில் ஒன்றும் புதுமையல்ல. இளைஞர்களிடையே அது பொதுவான நடைமுறை. இதைப் பார்க்கும்போது ஒரு முரண்பாடான செயலாகத் தோன்றினாலும் யாழ்ப்பாண வாழ்க்கையில் சிறப்பாக காணப்படும் அனுபவங்களில் இதுவும் ஒன்றாகும். குளித்து விட்டு வந்ததும் ரதி எமக்கு உணவு பரிமாறினார். சுடச்சுட மென்மையான பிட்டு சிறிது சிறிதாக நறுக்கிய வெங்காயமும் பச்சை மிளகாயும் இட்டு முட்டைப் பொரியல். கடைசியில் பழுத்து இனித்த கதலி வாழைப்பழம். இந்த வீட்டுக்கு நாம் இப்போது தான் வந்திருந்தோம். நாம் அங்கு இருப்பது யாருக்கும் தெரியாது. படையினரும் இன்னமும் காவல் உலா புறப்படவில்லை. அமைதியாக தூங்கலாம் போலப்பட்டது. தூங்குவதற்காக கண்களை மூடும்போது அப்படியான ஓர் அமைதி உணர்வு வந்ததென்றால், நான் கடுமையான மனநெருக்குவாரத்துக்குள் சீவித்திருக்கிறேன் என்பதுதானே அர்த்தம்.

இந்தக் கல்வீடு மிகப் பெரியது அல்ல என்றபோதிலும் ரதியின் பொருளாதார நிலைக்கு முற்றிலும் பொருந்தாத ஒன்று. இன்னமும் முப்பது வயதை எட்டாத ரதி மெலிந்த தோற்றம் உடையவர். திருமணம் புரிந்ததில் இருந்து ஏமாற்றம், துயரம், நிதி நெருக்கடி போன்றவற்றுக்கு முகம் கொடுத்துக் கொண்டிருந்தார். அவருடைய மூத்த மகனுக்கு எட்டு அல்லது ஒன்பது வயதாக இருக்கவேண்டும். ஆகவே, இருபது வயதை தாண்டியவுடன் ரதி திருமணம் செய்திருக்கலாம் என்று நாம் ஊகிக்கலாம். அவருடைய கணவர் ஒரு வர்த்தகர். தென்னிந்தியாவிலேயே அவருடைய கூடுதலான வர்த்தக தொடர்புகள். அவர் வீட்டுக்கு வருவது ஒழுங்காக இருக்கவில்லை. இறுதியில் வராமலேயே நின்று விட்டார். ரதியின் கணவர் தென்னிந்தியாவிலேயே தமக்கென ஓர் இரண்டாவது மனைவியைத் தேடிக் கொண்டார் எனக் கேள்வி. அவர் உண்மையில் ரதியையும் மூன்று பிள்ளைகளையும் கைவிட்டிருந்தார். வருவாயைத் தேடுவதற்கான தொழிற் பயிற்சி எதுவும் இல்லாத ரதி, தமது பிள்ளைகளுக்கு உணவும் உடையும் வழங்க முடியாது திணறினார். தன்னுடைய கஷ்டங்களை பொறுமையோடு சகித்துக் கொண்ட ரதி, தமது பிள்ளைகளை படிப்பிக்க வேண்டும் என்பதில் குறியாக இருந்தார். பிள்ளைகளின் கல்வி வாய்ப்புக்கு குறுக்கே தமது வறுமை தடையாக இருக்கக் கூடாது என்பதிலும் அவர் குறியாக இருந்தார். தனது குடும்பத்தின் மீட்சி, தமது பிள்ளைகளின் கல்வியிலேயே தங்கியிருப்பதாக ரதி கருதினார். உண்மையில் பொதுவான தமிழ்ச் சிந்தனையே அதுதான். இதற்காக அவர் தன்னை வருத்தி, தனது வளங்கள் அனைத்தையும் செலவிட்டார். போர்களால் அவர்களுடைய வாழ்க்கையில் இடையூறுகள் ஏற்பட்ட போதிலும், பிள்ளைகள் தங்கள் கல்வியைத் தொடர வேண்டும் என்பதில் ரதி, மன உறுதியோடு பிடிவாதமாக இருந்தார். நாம் அங்கே இருந்த போது ரதி தமது கதையைக் கூறினார். சிறிலங்கா இராணுவத்தின் விடுதலை நடவடிக்கையின் போது (ஒப்பரேஷன் லிபரேஷன்) இடம்பெற்ற விமானக் குண்டுத் தாக்குதலின்போதும், தமது பிள்ளைகளைக் காப்பாற்ற அவர் எவ்வளவு கஷ்டப்பட்டார் என்பதை விளக்கினார். வல்வெட்டித்துறையில் தமது வீட்டிலே பதுங்குகுழி இல்லாதமையால் தாமும் அச்சத்தால் நடுங்கிய தமது பிள்ளைகளும் கட்டிலுக்குக் கீழே ஒடுங்கிக் கொண்டிருந்தார்கள் என அவர் கூறினார். அவருடைய வாழ்க்கை வரலாறு பரிதாபகரமானது. இந்தத் துயரத்துக்கு முகம் கொடுக்க அவர் எங்கிருந்துதான் மனவலிமையைப் பெற்றாரோ என்று நான் வியந்தேன். மேலை நாடுகளில் கைவிடப்படும் பெண்களின் சமூக - பொருளாதார நிலையோடு ஒப்பிடும் போது, யாழ்ப்பாணத்தில் கைவிடப்படும் பெண்களின் நிலை, வெகுவாக வேறுபட்டது. கூட்டுக் குடும்ப உறுப்பினர்கள் இவர்களுக்கு உதவி புரிய முன்வராவிட்டால், இவர்கள் கதி அதோ கதிதான். அரச நலன்புரி உதவிகள் இவர்களுக்குக் கிடைப்பதில்லை. தமது பிள்ளைகளுடைய வயிற்றை அன்றாடம் நிரப்புவதற்கு வேண்டிய பணம் திரட்டுவதற்காக தொட்டாட்டு வேலைகளைக் கூட ரதி தேடினார்.

ஓர் இரவு, புலிகளுடைய வடமராட்சித் தளபதி சூசை எம்மைப் பார்க்க வந்திருந்தார். சுற்றிவளைப்புக்களில் இருந்து சூசை நூலிழையில் தப்பியிருந்தார். அவர் பிடிபட இருந்தபோது, அவரைப் பாதுகாத்துக் கொண்டவர்களின் சமயோசித புத்தியால் அவர் காப்பாற்றப்பட்டார். சுருட்டி வைக்கப்பட்ட பாய்க்குப் பின்னே அவரைப் பதுக்கிவிட்டு, துணிமணிகளையும் அவருக்குமேல் குவித்து விட்டிருந்தார்கள். அவருடைய நல்ல காலம், இந்தியர்கள் அங்கே துளாவவில்லை. பொதுவாக எவரும் ஒளிந்திருக்கக்கூடிய இடம் பாய்ச்சுருள். ஆதலால், அதனுள் யாரும் இருக்கமாட்டார்கள் என்று இந்தியப் படையினர் நினைத்திருக்க வேண்டும். அதனால், பாய்ச்சுருளை விட்டுவிட்டார்கள் போலும். நூலிழையில் உயிர் தப்பிய சம்பவங்கள் அந்த நாள்களில் அதிகம்! தப்புவதற்கும் ஒளிந்திருப்பதற்கும் கடைப்பிடிக்கப்பட்ட புதுப் புது வழிகளும் அதிகம். இந்தியர்கள் கீழே அறைகளில் தேடிக் கொண்டிருக்கும் போது, போராளிகள் பல மணிநேரம் வீட்டுக் கூரையில் ஒட்டிக் கிடந்திருக்கிறார்கள். வைக்கோல் போருக்குள், புகையிலை சூடுகளுக்கு இடையில் புதைந்து கிடந்திருக்கிறார்கள். அந்தரித்த வேளைகளில் மலக்குழிக்குள் பதுங்கிய சந்தர்ப்பங்களும் உள்ளன. இதனால், இருண்ட பின்னரே நடமாடுவது புத்திசாலித்தனம் என்று சூசை உணர்ந்து கொண்டார். காலநிலையும் கடலும் சாதகமாக அமையும்போது, படகுமூலம் இந்தியாவுக்கு அனுப்பி வைக்குமாறு புலி இயக்கத் தலைமை பணிப்புரை வழங்கியிருப்பதாக சூசை எம்மிடம் தெரிவித்தார். ஆனால், மேலும் சில காலம் நாம் காத்திருக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

ரதியின் வீட்டில் நாம் சில நாள்களே தரித்திருந்தோம். அந்த நாள்களில் எதுவித இடர்பாடுகளோ குழப்பங்களோ எமக்கு வரவில்லை. ஆனால், நீண்ட நாள்கள் அங்கே தரித்திருப்பது புத்திசாலித்தனமாகப்படவில்லை. அப்படித் தங்கியிருந்தால் எல்லோருக்கும் அது ஆபத்தாக முடியும் என்பது எமக்குத் தெரியும். எனவே, அங்கிருந்து வெளியேறினோம்.

(தொடரும்...)




தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

ஜனாதிபதியாக எனது முதல் உத்தரவே, நமது அணுஆயுத தளவாடங்களைப் புதுப்பிப்பதற்காக மற்றும் நவீனப்படுத்துவதற்காக இருந்தது, என்று அவர் அறிவித்தார். இப்போது அது முன்பினும் அதிக பலத்தோடும், சக்திவாய்ந்தும் உள்ளது. இந்தப் பலத்தை நாம் ஒருபோதும் பயன்படுத்தாமல் இருப்போமென்று நம்புவோமாக. ஆனால், உலகிலேயே நாம் மிகவும் சக்திவாய்ந்த நாடு கிடையாது என்றவொரு காலம் ஒருபோதும் வராமலேயே இருக்கட்டும்.- என்றார்.




இதுபோன்ற பொறுப்பற்ற அச்சுறுத்தல்களும் கிலியூட்டும் வாய்ச் சவடால்களும் மலைப்பூட்டுகின்றன. உலகிலேயே மிக சக்தி வாய்ந்த அணுஆயுத சக்தி, ஆத்திரம் மற்றும் கோபத்துடன்'' (fire and fury) அவர்களைத் தாக்கி, அவர்களின் ஒட்டுமொத்த மக்களையும் நிர்மூலமாக்க மீண்டும் மீண்டும் அச்சுறுத்துகின்ற போது வட கொரியத் தலைவர்களுக்கு என்ன நினைக்கத் தோன்றும்?

**அமெரிக்க அணுஆயுத நீர் மூழ்கிக் கப்பல்கள் மற்றும் மூலோபாய குண்டு வீச்சுக்கள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தளங்களைக் கொண்ட அமெரிக்க பசிபிக் பகுதியான குவாம்.**

கொரியக் கடற்கரையை ஒட்டி விமானந்தாங்கி போர்க்கப்பல் USS கார்ல் வின்சன் தலைமையில் ஒரு படைக்குழுவை அமெரிக்கா நிறுத்தியுள்ளது மற்றும் வடகொரிய எல்லைக்கருகில் அச்சுறுத்தும் விதத்தில் டீ-1 லான்சர் குண்டுவீசிகள் பறக்க விடப்பட்டுள்ளன என்கின்ற நிலைமைகளின் கீழ், இத்தகைய அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றன.

அமெரிக்க அணுஆயுத நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் மூலோபாய குண்டு வீசிகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள தளங்களைக் கொண்ட அமெரிக்க பசுபிக் பகுதியான குவாம் மீது ஓர் ஏவுகணைத் தாக்குதல் நடத்துவதற்கான அதன் சொந்த அச்சுறுத்தலுடன் வட கொரியா அமெரிக்கா போர் அச்சுறுத்தல்களுக்கு விடையிறுத்துள்ளது. அதேவேளையில் இந்த அச்சுறுத்தலை பியொங்யாங்கில் இருந்து வரும் வெறும் வாய்ச் சவடால் என்று ஒதுக்கிவிடலாம் என்கின்ற அளவுக்கு, அது எவ்வகையிலும் நிச்சயமானதல்ல. அமெரிக்க அச்சுறுத்தல்கள் நிஜமானவை என்றும், போர் உடனடியாக நிகழக்கூடும் என்றும் வட கொரியர்கள் கணக்கிட்டால் என்னாவது? அமெரிக்க குண்டுகள் மற்றும் ஏவுகணைகளுக்கு தங்களின் இராணுவத்தை இழப்பதற்குப் பதிலாக அவர்கள் தங்களின் சொந்த முன்கூட்டிய தாக்குதலை நடத்தி, அவர்கள் உளறிக் கொண்டிருக்கவில்லை என்று வொஷிங்டனுக்குக் காட்டுவதற்கும் கூட அவர்கள் முடிவெடுக்கலாம். வட கொரியாவின் பிற்போக்குத்தனமான மரபுவழி ஆட்சியையோ மற்றும் அதன் சொந்த ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளையோ உலக சோசலிஷ வலைத் தளம்சிறிதும் ஆதரிக்கவில்லை. ஆனால், அதேவேளையில் இதுபோன்ற கணக்கீடுகள் பகுத்தறிவற்றவை கிடையா.

வட கொரியாவின் நிலைப்பாடு அளப்பரிய வரலாற்றுச் சுமையை சுமந்து கொண்டிருக்கிறது. 65 ஆண்டுகளுக்கு முன்னர் கொரியாவிற்கு எதிரான அமெரிக்க போரில் குறைந்தபட்சம் மூன்று மில்லியன் மக்கள் கொல்லப்பட்டனர். அவர்களில் இரண்டு மில்லியன் பேர் வடக்கில் இருந்தவர்கள். அமெரிக்க விமானப் படையின் சொந்த மதிப்பீட்டின்படி, வட கொரியாவின் இருபத்திரெண்டு பிரதான நகரங்களில் பதினெட்டு குறைந்தபட்சம் அரைவாசியாவது துடைத் தழிக்கப்பட்டிருந்தன. விமானப்படை தளபதி கர்டிஸ் லெமெ பின்னர் நினைவு கூர்கையில், நாங்கள் வட கொரியா மற்றும் தென் கொரியா இரண்டினது ஒவ்வொரு நகரையும் எரித்து தரை மட்டமாக்கினோம்.- என்றார்.

அவ்விதத்தில் வட கொரியா குறித்து, அமெரிக்காவின் ஆத்திரம் மற்றும் கோபமான பேச்சும் மற்றும் ஒட்டுமொத்த மக்களையும் பூண்டோடொழிப்பதற்கான அச்சுறுத்தல்களும் தற்பெருமை கொண்ட வாய்வீச்சு என்பதல்லாமல் வேறொன்றுமில்லை.

**வட கொரியா அதன் அணு ஆயுத மற்றும் தொலைதூர ஏவுகணை பரிசோதனைகளை நிறுத்தி, அதன் ஒட்டுமொத்த அணுசக்தி ஆற்றலையும் ஒப்படைக்க வேண்டுமென்ற வாஷிங்டனின் கோரிக்கையே தற்போதைய மோதலின் ஒட்டுமொத்த அடித்தளமாகும்**

வட கொரியா அதன் அணுஆயுத மற்றும் தொலைதூர ஏவுகணை பரிசோதனைகளை நிறுத்தி, அதன் ஒட்டுமொத்த அணுசக்தி ஆற்றலையும் ஒப்படைக்க வேண்டுமென்ற வொஷிங்டனின் கோரிக்கையே தற்போதைய மோதலின் ஒட்டுமொத்த அடித்தளமாகும். ஆனால், அதுபோன்ற கோரிக்கைகளுக்கு அடிபணிந்த ஏனைய ஆட்சிகளின் கதியைக் குறித்து வட கொரியாவின் கிம் ஜொங்-யுன் அரசாங்கத்துக்கு நன்கு தெரியும்.

வட கொரியாவைப் போலவே, 'தீய அச்சின்' பாகமாக ஜோர்ஜ் டபிள்யு. புஷ்ஷால் பிரகடனப்படுத்தப்பட்ட ஈராக், அதன் ஆயுத திட்டங்களைக் கைவிட ஒப்புக் கொண்டது. இருப்பினும் 'பெரிய பேரழிவு ஆயுதங்களைக்' கொண்டுள்ளது என்ற பொய் சாக்குபோக்கின் கீழ் அதன்மீது 2003 இல் படையெடுக்கப்பட்டது. அந்த அமெரிக்க போரில் சுமார் ஒரு மில்லியன் ஈராக்கியர்கள் கொல்லப்பட்டு, அந்நாட்டின் அரசு தலைவர் சதாம் ஹூசைனும் தான்தோன்றித்தனமாக கொல்லப்பட்டமையில் போய் முடிந்தது. அதேபோல, ஈராக் படையெடுப்புக்குப் பின்னர் லிபியாவின் மௌம்மர் கடாபி அவர் ஆயுத திட்டங்களைக் கைவிட உடன்பட்டார், பார்க்கப் போனால் அமெரிக்கா மற்றும் நேட்டோ 2011 இல் அவர் நாட்டுக்கு எதிராக ஒரு போர் தொடுத்து, அதில் பத்தாயிரக் கணக்கான லிபியர்கள் கொல்லப்பட்டு, அந்த சமூகம் ஒன்றுமில்லாமல் விடப்பட்டு, அவரது சொந்த அடாவடித்தனமான-குண்டர்களாலேயே அவர் படுகொலை செய்வதில் போய் முடிந்தது.




வட கொரியாவின் அணுஆயுத திட்டம் ஒன்று மட்டுந்தான் அந்நாட்டையும் அதன் அரசாங்கத்தையும் அதுபோன்ற கதியில் பாதிக்கப்படுவதில் இருந்து தடுத்து வைத்துள்ளது.

பைத்தியக்காரத்தனமாகத் தெரியும் ட்ரம்பின் இந்த அச்சுறுத்தல்கள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஆக்ரோஷமான போர் திட்டங்களுக்கு ஓர் அணுஆயுத மோதல் அபாயம் ஒரு தீர்க்க முடியாத தடையாக இருப்பதை இனியும் அது ஏற்க விரும்பவில்லை என்பதற்கு ஒரு சமிக்ஞையாக உள்ளன.

**ஈராக்கிய பெரிய பேரழிவுகரமான ஆயுதங்கள் (WMD) குறித்த புஷ் நிர்வாகத்தின் பொய்களை ஜீரணித்து கொள்ள வேண்டியிருந்தது,அதை விட இந்த குற்றச்சாட்டுக்கள் நியாயமாக இருக்கின்றன என்பதற்கெல்லாம் அங்கே எந்த காரணமும் இல்லை**

அமெரிக்காவிலும் மற்றும் இந்த பூமியின் ஒவ்வொரு பாகத்திலும் பொருளாதார நிலைமைகள், ஜனநாயக உரிமைகள் மீதும் மற்றும் உழைக்கும் மக்களின் உயிர்வாழ்க்கை மீதும் பேரழிவுகரமான விளைவுகளுடன், ஏறத்தாழ நிச்சயமாக எது ஓர் உலக பேரழிவு போராக மாறக்கூடுமோ அதற்கு மக்களைத் தயார் செய்ய அமெரிக்க நிர்வாகம் முயன்று வருகிறது. அமெரிக்க ஏகாதிபத்திய கொள்கையை விரிவாக்கி வரும் வெள்ளை மாளிகை, பென்டகன் மற்றும் பல்வேறு சிந்தனைக் குழாம்கள் அனைத்தும், பியொங்யாங் ஓர் அணுஆயுத சக்தியாக மாறுவதற்கான வரம்பை எட்டி விட்டதாகவும், ஓர் அமெரிக்க நகருக்கு எதிராக அவற்றைப் பிரயோகிக்க தகைமை கொண்ட சிறிய குண்டுகள் மற்றும் கண்டம் விட்டு கண்டம் பாயும் தொலைதூர ஏவுகணைகளை அபிவிருத்தி செய்திருப்பதாகவும் குற்றஞ்சாட்டி வாதிடுகின்றன.

ஈராக்கிய பெரிய பேரழிவுகரமான ஆயுதங்கள் (WMD) குறித்த புஷ் நிர்வாகத்தின் பொய்களை ஜீரணித்துக் கொள்ள வேண்டியிருந்தது, அதை விட இந்த குற்றச்சாட்டுக்கள் நியாயமாக இருக்கின்றன என்பதற்கெல்லாம் அங்கே எந்த காரணமும் இல்லை.




வட கொரியாவின் அணு குண்டுகள் உயிர்வாழ்வு மீதான ஓர் அச்சுறுத்தல் என்று வொஷிங்டன் பிரகடனப் படுத்துகின்ற அதேவேளையில், இஸ்ரேல், இந்தியா மற்றும் பாகிஸ்தானின் சம அளவில் ஸ்திரமற்ற மற்றும் ஆக்ரோஷமான ஆட்சிகள் அவற்றின் சொந்த அணுஆயுத குண்டுகளை அபிவிருத்தி செய்வதற்கு அது ஒத்துழைத்துள்ளது.

(கேள்வி தொடரும்)

# நல்லூர்க் கந்தன் தேர்த்திருவிழா சிறப்பிதழ்

20-08-2017

## தங்க ரதத்தில் பவனி வருகிறான்

## அழகு முருகன் ஆறுமுக சுவாமியாக!



அழகன், முருகன் ஆறுமுக சுவாமியாக இன்று தங்க ரதத்தில் ஆரோகணிக்கும் அற்புதக்காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். இந்தக் காட்சியைக் காண ஆயிரம் கோடி கண்கள் வேண்டுமய்யா! தன்னை வழிபடும் அடியார்களின் துன்பங்களையும், துயரங்களையும், இன்னல்களையும், இடுக்கண்களையும் நீக்கும் நோக்கில் முருகன் இன்று ஆறுமுகசுவாமியாக அழகே வடிவான அற்புதத்தங்கத் தேரிலே ஆரோகணித்து அருங்காட்சி தருகின்றான்.

அந்த ஆறுமுகனானவன் இந்த நல்லை நகரிலே அருள்வேல் வடிவில் எழுந்தருளி வீற்றிருந்து தன்னை உள்ளன்போடு வழிபடும் அடியார்களின் துன்ப துயரங்கள் தீர்த்து அருளாட்சி புரிந்து கொண்டு இருக்கின்றான். நல்லூரில் மட்டும் அடியார்கள் அலை மோதுவதற்குக் காரணம் மூலஸ்தானத்தில் இருக்கின்ற வேலுக்கு ஓர் அரும் சக்தி அதாவது சொல்ல முடியாத இன்பத்தை அள்ளிச் சொரியும் காந்த சக்தி இருக்கின்றது.

ஆடி அமாவாசைக்கு ஆறாம் நாள் நல்லைக் கந்தனின் ஆண்டு மஹோற்சவம் ஆரம்பமாகி தொடர்ந்து இருபத்தி ஐந்து நாள்கள் திருவிழா இடம்பெற்று கந்தனின் திருக்கல்யாணத்துடன் இனிதே நிறைவு பெறும்.

இக்காலத்தில் யாழ்.நகரமே விழாக் கோலம் பூண்டிருக்கும். நல்லையம் பதி இந்திரலோகம் போலக் காட்சியளிக்கும். பக்தர்கள் எல்லோரும் ஒன்றாகக் கூடி பஜனைகள் நடைபெறும். நல்லூர் தேரடி மிகவும் சிறப்பு வாய்ந்தது. செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் சைவ சமயத்தை வளர்த்து முத்திப்பேறு அடைந்த இடம்

(17 ஆம் பக்கம் பார்க்க...)

## தேதேறி வருகிறான் அழகுத் திருமகன்; அவனருள் கிடைப்பதாக!



சரித்திரப் பெருமை மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயிலில் இன்று ரதோற்சவம், அழகன் முருகன் இந்த நல் லையம்பதியிலே தொல்லை வினை தீர்க்கும் 'நல்லூர் கந்தன்' என்று நாமம் பூண்டு அடியார்க்கருளும் அழகுத் திருமகனாக எழுந்தருளி வீற்றிருந்து அருள்பாலிக்கின்றான்.


வழிபடும் அடியார்களின் துன்பம் போக்கி இன்ப நல்வாழ்வு அருளுகின்ற ஆறுமுகன் சரவணன் இன்று அழகிய சித்திரத் தேரிலே ஆரோகணித்து அருள் காட்சி தருகின்றான். அலங்காரக் கந்தனாக அருள்பாலிக்கும் ஆண்டவன் இன்றைய தினம் அழகுத் தேர் மீது ஏறி வள்ளி, தெய்வானையுடன் திரு வீதி வலம் வருகின்ற அற்புதக் கோலா கல அருட்காட்சி காண்பதற்குக் கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

நிகழும் வருடாந்த மஹோற்சவத்திலே இன்றைய தேர்த்திருவிழா இறைவனின் பஞ்ச கிருத்தியத்திலே அழித்தலைக் குறிப்பதாகும். அதாவது அடியார் படும் துன்ப துயரங்களையெல்லாம் அழித்தொழித்து அன்பு நிறைந்த அற்புத நல் வாழ்க்கையை நல்கி அருள்புரிகின்றான் அழகுக் குமரன் முருகன்.

இன்று தேரேறி வருந் தேவனான முருகப் பெருமான் எல்லோருக்கும் திருவருளை வாரி வழங்கி, இன்னருள் புரிந்து, காக்க வேண்டுமென்று அவன் திருவடி பணிந்து அருளாசிகள் நல்கி உளமாரப் பிரார்த்தித்து வாழ்த்தி மகிழ்கின்றோம்.


*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

ஆதீன குருமுதல்வர்.
ஸ்ரீலஸ்ரீ தேசிக சோமசுந்தர ஞானசம்பந்த பரமந்த பரமாசார்ய சுவாமிகள்,
2 ஆவது குருமஹா சந்நிதானம், நல்லை திருஞானசம்பந்த ஆதீனம்,
யாழ்ப்பாணம்.






# நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழா சிறப்பிதழ்-2017

JEEVAN STUDIO
021 222 2955/ 077978 5717
No 8B, first floor, Cargills Square, Jaffna.
www.Jeevan Studios.Com

த. சங்கரப்பிள்ளை அன் சன்ஸ்



அனைத்து விதமான சாறி வகைகள், பஞ்சாபிகள், குர்தாக்கள், சேட் வகைகள், இன்னும் சிறுவர் சிறுமியர்களுக்கான ஆடை வகைகள் என அனைவருக்கும் ஏற்ற சகல விதமான ஆடைகளையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய சிறந்த ஸ்தாபனம்.

T.SANGARAPPILLAI & SONS
E.mail:- sangarappillaiandsons@gmail.com
No, 21, Modern Market,
Power House Road,
Jaffna.
T.P:- 021 222 9965
MOB: 0773086894







KIRUBA LEARNERS
கிருபா
Govt. Approved A Grade Driving Training School
சாரதிப் பயிற்சிப் பாடசாலை

அரச அங்கீகாரம் பெற்ற A தர கனரக சாரதிப் பயிற்சிப் பாடசாலை
திறமையான சாரதிகள் ஆக வேண்டுமா? கிருபா லேணர்ஸ் உடன் இணையுங்கள்.

★தவணை முறையில் கட்டணம் செலுத்த முடியும்.
★வாகன தொழில்நுட்ப வகுப்புகளும் உள்ளன.
★பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், மாதிரி வினாத்தாள் இலவசமாக வழங்கப்படும்.
★விரைவில் எழுத்துப் பரீட்சையில் சித்தியடைய விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
★எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு விசேட வீதிஒழுங்குவகுப்புக்கள்நடைபெறவுள்ளன.
★விரைவில் எழுத்துப் பரீட்சைக்கு ஒழுங்கு செய்து LEARNER PERMIT பெற்றுத் தரப்படும்.
★சாரதி தெரிந்துகொள்ள வேண்டிய வாகனம் சம்பந்தமான அடிப்படைக் கல்வி மற்றும் சாரதிக்கான சிறந்த பயிற்சி வழங்கப்படும்.
★License விண்ணப்பிக்கும் ஒழுங்குகள் எங்கள் காரியாலயத்திலே செய்து தரப்படும்.
★உடைந்த, தொலைந்த தெளிவில்லாத License புதுப்பிக்க ஒழுங்கு செய்து தரப்படும்.
★சர்வதேச லைசன்ஸ் International License பெற்றுக் கொள்ளக்கூடிய வசதி உண்டு.
★இலவச எழுத்துப் பரீட்சை வகுப்புகள்.

**சாரதி அனுமதிப்பத்திரம் பெறுவதற்குத் தேவையான ஆவணங்கள்**

- அடையாள அட்டை
- பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (மூலப்பிரதி)
- திருமண அத்தாட்சிப் பத்திரம் (பெண்கள் மட்டும்)
- சாரதி அனுமதிப்பத்திரம் (வைத்திருந்தால்)
- தேசிய போக்குவரத்து வைத்திய நிறுவகம் வழங்கும் மருத்துவச் சான்றிதழ்

தலைமைக் காரியாலயம்
**இல.226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்**
021 222 4353
021 492 3200
0777225292



# எமது கிளைகள்

யாழ். கச்சேரியடி, இல.36
கச்சேரி நல்லூர் வீதி , **யாழ்ப்பாணம்.**
021 222 6699 , 076 7225 292

இல.227/ 6, கே.கே.எஸ். வீதி
சுன்னாகம். (முதவடி அருகில்)
021 224 2022 , 0714546956.

ஓம் பிளாசா , பருத்தித்துறை வீதி ,
**ஆவரங்கால்.**
021 222 6688 , 071 242 2622.

பிரதான வீதி, **நெல்லியடி.**
(பொலிஸ் நிலையம் முன்பாக)
021 300 6550, 0714546958

முதலாம் கடைச் சந்தி, **பருத்தித்துறை.**
021 4923 201, 0714546961

கண்டி வீதி, **சாவகச்சேரி.**
(நீதிமன்றம் அருகில்)
021 4923 202, 0712270700.

ஏ9 வீதி, **கிளிநொச்சி.**
021 228 5505, 0714546955.

வாடியடிச் சந்தி, **பூநகரி.**
021 320 1818, 071 4546955.

புளியடிச் சந்தி, முல்லை வீதி,
**விசுவமடு.**
0213201515, 0714546955.

நாச்சிக்குடாச் சந்தி, மன்னார் வீதி,
**முழங்காவில்.**
021 3006544, 071 4546955

இல.94, பிரதான வீதி, **மன்னார்**
023 225 1656, 0778472732

216, ஏ9 வீதி , **வவுனியா.**
(வசந்தி திரையரங்கு முன்)
0242227777, 0777100444

# நல்லூர் கந்தனின் தேர்த்திருவிழா சிறப்பிதழ்-2017

## நல்லை கந்தனுக்கு இன்று அற்புதமான தேர்த்திருவிழா



உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற எல்லாம் வல்ல பரம்பொருளான நல்லைக் கந்தனுக்கு இன்று தேர்த்திருவிழா. அடியார்க்கருளும் பெருமானாக அழகிய சித்திரத் தேரிலே ஆரோ கணித்து வருகின்ற அந்த ஆறுமுகப் பெரு மானுடைய திவ்ய கருணைத் திருவருள் எல்லோருக்கும் கிடைக்க வேண்டு மென்று அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்த்தி மகிழ்கின்றோம்

வருடாந்த மஹோற்சவத்திலே தேர்த் திருவிழா அழித்தலைக் குறிப்பதாகும். அந்த வகையிலே அழகன் முருகன் ஆறுமுகங்களுடனும் தம்முடைய அருட்சக்திகளான வள்ளி தெய்வானையுடனும் எமது துன்பத்தை அழித்தொழிக்க சித்திரத் தேர் மீது சிங்காரப் பவனி வரும் அற்புதமான ஆனந்த கோலாகல நிகழ்வு சிறக்க முருகனின் பொற்கமல பாதங்களை வணங்கி நிற்கின் றோம்.

இன்று ஞாயிற்றுக்கிழமை சூரிய பகவானை வணங்கி, வாழ்த்தி அவன் திருவடி பணிந்து, ‘உலகுக்கு ஒளி தருபவனே!’ எமது வாழ்வுக்கும் ஒளி தருவாய் என்று வேண்டுவது போல, ‘முருகனே! எமக்கு நல்லதொரு விடிவைத் தர வேண்டுமென்று கந்தப் பெருமானின் கழல் பணிந்து வாழ்த்தி நிற்கின்றோம்.

இன்றைய தேர்த்திருவிழா சிறப்புற அவனருளையே நாடி சிந்தித்துச் சேவித்து வாழ்த்தி வணங்கி மகிழ்கின் றோம்.

வேலுண்டு வினையில்லை! மயிலுண்டு பயமில்லை!

*தெய்வத் தமிழ்ச் சுடர்*
*கலாபூஷணம் இராசையா ஸ்ரீதரன்.*

## வடம் பிடிப்போம் வாரீர்!!

தேரேறி வருகிறான் தேவர் துயர் தீர்த்தவன்
தீராத வினைகளெல்லாம் தீர்ந்திடவே
சீரியராக நாமிங்கு சிறப்புடன் வாழ்ந்திடவே
நல்லூரான் தேர் வடம் பிடிப்போம் வாரீர்

தேரேறி வருகிறான் தேவகுஞ்சரி நாதன்
கார்முகில் கனத்து வாகனம் வழங்கிடவே
ஊர் செழிக்க உயிர்கள் மகிழ்ந்திடவே
நல்லூரன் தேர் வடம் பிடிப்போம் வாரீர்

தேரேறி வருகிறான் தேவசேனாபதியவன்
பாரெங்கும் தன்பதிதனின் பெருமை மிகு
பேர் விளங்க கனத்த எம் கலாசாரம் காண
நல்லூரன் தேர் வடம் பிடிப்போம் வாரீர்

தேரேறி வருகிறான் தேவேந்திரன் மருகன்
வேரோடு அதர்மத்தை அழித்திடவே
கூரான வேலாயுதம் தனைத் தாங்கி
நல்லூரான் தேர் வடம் பிடிப்போம் வாரீர்.

*-செல்வ வேலாயுதம்.*



சசிகா லேணர்ஸ்
THE SASIKA LEARNERS
அரச அங்கீகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை
முறைமையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்
THE SASIKA DRIVING SCHOOL
sasika Learners
sasika driving School@gmail.com.
மற்றுமொரு கிளை
இல - 821 C, மணிக்கூட்டுகோபுர வீதி, யாழ்ப்பாணம்
[ஞானம்ஸ் ஹோட்டல் அருகில்]
021 222 8004
கிளை நிறுவனங்கள்:
வேலணை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
0703013012
கே.கே.எஸ். வீதி,
மல்லாகம்
021 224 3393
0703013014
சங்கானை
ஓடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
0703013016
தலைமைக் காரியாலயம்:
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.
HOTLINE- 077 722 6247
021 2217678, 0776140361
வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியினை மேற்கொள்ளலாம்)
★ விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் அடிப்படையில் செலுத்த முடியும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புக்களும் நடை பெறும்.
★ எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய் முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம் பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங் கப்படும்.
★ எழுத, வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும்.
★ விரைவில் எழுத்துப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

A.T.A TRANSPORT
(NP-LM3276)
COLOMBO - KILINOCHCHI
077 3117615/ 0770685596/ 0771322864
THOLPURAM, VALAKKAMPARAI, AMMAN KOVIL ROAD.


NIGI STUDIO
Like : Nigi Video & Studio
PROFESSIONAL VIDEO FILMING
PROFESSIONAL PHOTOGRAPHY
HD VIDEO GRAPHY
ALBUM MAKING
DURO FRAME
Thank you Visit again....
Contact No 9450776042820
Email nigi190@gmail.com
Chulipuram, Jaffna, Srilanka.

உங்கள் எதிர்காலத் திட்டம் எதுவாயினும் உங்கள் ஒளிமயமான வாழ்வுக்குக் கைகொடுக்க நாம் தயார்...
★கல்வி ★வேலைவாய்ப்பு ★வெளிநாடு
WIN Forever success
WINSTAR CONSULTANTS
- சிறந்த உயர்தர கல்வி வழிகாட்டலைப் பெற,
- தகுதிக்கேற்ப விரும்பிய வேலைவாய்ப்புப் பெற,
- கனவு நாட்டை நேர்மையான முறையில் சென்றடைய
Plan your bright future with us.
WINSTAR CONSULTANTS
எதுவாக இருந்தாலும் எம் இளஞ் சந்ததியின் கலங்கரை விளக்காக விளங்கும் WINSTAR CONSULTANTS உடன் தொடர்பு கொள்ளுங்கள்.
106, தபாற் பெட்டி சந்தி, பலாலி வீதி,திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 320 2789


சரஸ்வதி மண்டபம்
ராஜா கிறீம் ஹவுஸ்
SARASWATHY HALL
ஹம்சியா மஹால்
யாழ்.மாநகரில் மிகப் பிரமாண்டமான மண்டபம்.
நியாயமான கட்டணங்களுடன் கூடிய தரமான சேவை
எல்லா மதத்தினருக்கும் அவரவர் கலாசாரத்திற்கும் விரும்பிய நிறத்துக்கும் ஏற்ற வகையில் மணவறை அலங்காரங்கள்.
முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) வசதி.
மண்டபத்துடன் இணைந்த ஐஸ்கிறீம் விற்பனை நிலையம்.
37, சேர்.பொன் இராமநாதன் வீதி,
(நாச்சிமார் கோவிலுக்கு அருகில்) யாழ்ப்பாணம்.
021 320 7369
077 923 4176


உலக நிகழ்ச்சி தயாரிப்பாளர்
K.T.பிரசாத் வழங்கும்
நல்லூர் முருகன் ஆலய
பூங்காவன உற்சவத்தை
முன்னிட்டு
(பழைய, புதிய, இடைக்காலப் பாடல்கள்
அடங்கிய மாபெரும் இசை நிகழ்ச்சி)
"இன்னிசை வார்ப்புகள்"
அனுமதி இலவசம்
இம்மாதம் 22ஆம் திகதி (22.08.2017) மாலை 6 மணிக்கு
நல்லூர் சங்கிலியன் பூங்கா மைதானத்தில்!
பிரதான அனுசரணை
ஸ்ரீ லங்கா இன்ஷுவரன்ஸ்
தந்தையும் தாயும் போன்று
இணை அனுசரணை வழங்குவோர்
NSB National Savings Bank
Sri Lanka Telecom Mobitel
SriLankan Airlines
அபி பஷன் வேல்ட்
112, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
NDB
கிருபா லேணர்ஸ்
Lankapuri
ANDRA JAFFNA
T.P : 021 222 8929
SPC
Highland
MILCO
IDM யாழ்ப்பாணம்
சிறிநதியா நகைமாடம்
கஸ்தூரியார் வீதி.


MATHI COLOURS
OFFSET
SCREEN
DIGITAL
அச்சமைப்பின் புதிய பரிமாணத்துடன்
மதி கலர்ஸ்
பிறிண்டர்ஸ்
திருமண அழைப்பிதழ்
காட்சியறை
இல.10, முருகேசர் ஒழுங்கை, நல்லூர்.
021 2229285, 077 7222259
mathicolours@gmail.com
mathicolours
0702222259


முருகா! முருகா!! நல்லூர் முருகா
ஈழ மக்களுக்கு அமைதி தந்து காத்திடுவாயாக!
புதிய
வீ.எம்.கே
ஜுவல்லறி
80/03, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 2515, 021 720 1117
நீங்கள் விரும்பிய டிசைன்களை
புதிய முறையில் 22 கரட்டில் செய்து
பெற்றுக் கொள்ளலாம்.
V.M.K JEWELLERY
மக்களின் முழு
நம்பிக்கையை பெற்ற
ஒரே நகை ஸ்தாபனம்
கண்டி வீதி, சாவகச்சேரி
தொ.பே: 021 227 1616, 077 7849 369
Prop:- VMK.K.Abarajithan




# அதிசயமிக்க சிறப்புத் தலமாக விளங்கும் நல்லூர் ஆலயம்

செ.கந்த சத்தியதாசன்
(ஆசிரிய ஆலோசகர்)

தமிழரின் தனிப்பெரும் தெய்வம் முருகன். ''முத்தமிழால் வைதாரையும் இங்கு வாழ வைப்போன்'' என அருணகிரிநாதர் எடுத்துக் கூறுகின்றார்.

பண்டைத் தமிழ் இலக்கியங்களான பதினெண் மேற் கணக்கு நூல்களில் நக்கீரரின் திருமுருகாற்று படை முருக வழிபாட்டின் சிறப்புக்களையும் முருகனின் பெருமைகளையும் முருகன் உறையும் ஆறுபடை வீடுகளையும் சிறப்பாக எடுத்துக் கூறும் முதன்முதல் தமிழ் நூலாகும்.

இந்தியாவுக்கு அண்மையில் சேய் நாடாக விளங்கும் இலங்கை மிகப் பழங்காலத்திலேயே முருக வழிபாட்டோடு தொடர்புபட்டதாகக் காணப்படுகின்றது. முருகப் பெருமான் சூரனைச் சங்கரிக்கும் பெரும்போர் இலங்கையிலேயே முடிவடைந்தது. முருகப் பெருமான் வீரவாகுதேவரோடும் ஒரு லட்சத்து எட்டு வீரர்களோடும் இலங்கைக்கு வந்து கதிர்காமத்தில் ஏமகூடம் அமைத்து சூரசங்காரத்தை நிறைவு செய்து சூரனுக்கு முத்தி கொடுத்தது மட்டுமல்ல, தேவர்களுக்கு துன்பமில்லாத வாழ்வு கொடுத்தார்.

### இலங்கையில் முருக வழிபாடு

இதனையே ''அமரரிடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி'' என கந்தசஷ்டி கவசம் போற்று தற்கேற்றவாறு இலங்கையில் முருக வழிபாடு சிறப்படையத் தொடங்கியது.

கதிர்காமத் தலத்தின் தோற்றுவாய் மிகத் தொன்மையானது. புராதன பௌத்த அரசர்களும் கதிர்காமத்தைப் போற்றியிருக்கின்றார்கள். இதேபோல கதிர்காமத்திலிருந்த சிகண்டி முனிவருடைய வழிகாட்டலில் தொண்டைமானாற்றங் கரையில் பூவரச மர நிழலில் முருகன் வந்திறங்கிய இடமாகும். வீரவாகு தேவரால் முருகனுக்குரிய உபகாரங்கள் செய்து நிவேதனம் கொடுத்த அவ்விடத்தில் செல்வச் சந்நிதி ஆலயம் அமைந்துள்ளது.

### நல்லூர்க் கந்தன் ஆலயம்

நல்லூர்க் கந்தசுவாமியார் ஆலயம் கி.பி.948 ஆம் ஆண்டு முதலாம் புவனேகபாகுவால் ஆரம்பிக்கப் பட்டது. இக்கால கட்டத்திலேயே சோழ மன்னர்கள் இலங்கையில் பொலன்னறுவையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த காலத்தில் சோழ இளவரசியான மாருதப் புரவீகவல்லியின் குன்ம நோய் நீங்கும் முகமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து கீரிமலை கண்டகி சமுத்திரத் தீர்த்தத்தில் தீர்த்தமாடி, கோயிற் கடவையின் கிழக்குப் பகுதியில் அமைந்த கந்தப் பெருமானை வழிபட்டு குதிரை முகம் நீக்கப்பெற்றாள். இதனால் இவ்விடம் மாவிட்டபுரம் என அழைக்கப்பட்டது.

### மூன்று முக்கிய முருகன் கோயில்கள்

இவ்வாறு இலங்கையின் வடபால் சிரசென விளங்கும் யாழ்ப்பாணத்தில் மூன்று முக்கியமான பெரிய முருகன் ஆலயங்கள் வரலாற்றுப் பெருமையோடும் மகிமையோடும் அமைந்து காணப்படுகின்றன.

கி.பி.14 ஆம் நூற்றாண்டில் இந்தியாவில் காஞ்சி குமர கோட்டத்துப் பூசகர் கச்சியப்ப சிவாசாரியார் தமிழில் எழுதிய கந்தபுராணம் அரங்கேற்றப்பட்டது. யாழ்ப்பாணம் அரியாலை சித்தி விநாயகர் குருக்கள் கணேசையர் அங்கு சென்று, கந்தபுராணத்தின் பெருமை, மகிமை அறிந்து, கந்தபுராண ஏட்டுப் பிரதியை இலங்கைக்குக் கொண்டு வந்தார். தனது சித்தி விநாயகர் ஆலயத்தில் அப் பாடல்களைப் படித்து பொருள் விளக்கம் கூறினார். இதுவே கந்த புராணபடலமாகியது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் புராண படனத்தை எல்லாக் கோயில்களிலும் படிக்கச் செய்து கந்தபுராண கலாசாரத்தை வளர்த்துக் கொடுத்தார். கந்தபுராண வசன நூலை எழுதி அச்சிட்டு வெளியிட்டார்.

### கந்தசாமி எங்கள் சொந்த சுவாமி

இதனால் முருக வழிபாடும் முருக பக்தியும் அதிகரித்தது. கந்தசுவாமி எங்கள் சொந்த சுவாமி என கந்த வழிபாடு தமிழர்கள் எல்லோராலும் நன்கு கடைப்பிடிக்கப்பட்டு வந்தது.

முருக விரதங்களான வெள்ளிக் கிழமை திருக்கார்த்திகை, கந்தசஷ்டி விரதங்களை எல்லோரும் கடைப் பிடித்தார்கள். இவ்வாறு முருக பக்தி அதிகரித்தமையால் தமிழ் பிரதேசங்கள் எங்கணும் முருகன் ஆலயங்கள் பல்கிப் பெருகின. இவற்றுள் தலையாய தலமாக விளங்குவது யாழ்ப்பாணத்து நல்லூர்க் கந்தசுவாமி கோயிலாகும். அருணகிரிநாத சுவாமிகளே ''யாழ்ப் பாணப் பட்டினம் மேவிய பெருமாளே'' எனத் திருப்புகழ் பாடியுள்ளார்.

இத்தகு சிறப்பு மிக்க நல்லூர் கந்தசுவாமி கோயில் உலகப் பிரசித்தி பெற்ற கோயிலாக - திருவருட் சக்தி நிறைந்த தலமாக - விளங்குவதோடு அதிசயமிக்க சிறப்புத் தலமாக விளங்குகின்றது.

போர்த்துக்கேயர் இந்த ஆலயத்தை இடித்தழித்தாலும் கூட கிட்டத்தட்ட இரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் குருக்கள் வளவு எனச் சிறப்பிக்கப்படும் இடத்தில் வேல் ஸ்தாபித்து கந்தபுராண படனத்தோடு மீண்டும் நல்லூர் கந்தசுவாமி கோயில் வழிபாடுகள் ஆரம்பமாகின.

### தினமும் நேரம் தவறாது ஆறுகாலப் பூசைகள்

தினமும் நேரம் தவறாத ஆறுகாலப் பூசைகள் நடைபெற்று வருகின்றது. அதிகாலை 4.30 மணிக்கு திருப்பள்ளி எழுச்சிப் பாடல் பாடி பள்ளியறைப் பூசை நடைபெற்று முருகப் பெருமான் சிறிய அழகிய தேரில் ஆதி மூலத்துக்கு எழுந்தருளுவார். இவ்வேளையிலேயே அதிகளவான பக்தர்கள் கூடி தமிழில் கந்தர் அலங்காரம், கந்தர் அனு பூதி, திருப்புகழ், திருமுருகாற்றுப் படை, வேல் விருத்தம் எனப் பல வகையான தோத்திரப் பாடல்களைப் பாடி வழிபடுவார்கள். 5 மணிக்கு உஷக்காலப் பூசை நடைபெறும்.

தினமும் காலை 10 மணிக்கு காலை சந்திப் பூசையும் நண்பகல் 12 மணிக்கு உச்சிக்காலப் பூசையும் நடைபெறுவதோடு மாலை 4.30 மணிக்கு சாயரட்டைப் பூசையைத் தொடர்ந்து இரண் டாங்காலப் பூசை நடைபெற்று 6 மணிக்கு அர்த்தசாமப் பூசை நடைபெற்று முருகன் அழகிய சிறிய தேரில் பள்ளியறை சென்று ஊஞ்சலில் அமர்வார். தொடர்ந்து வயிரவர் பூசை நடைபெறும்.

தினமும் நித்திய பலி, நித்திய ஹோமம், நித்திய உற்சவம் நடைபெறும். ஆதி மூலத்தைச் சுற்றி 5 பலி பீடங்கள் அமைக்கப்பட்டு பலிப் பூசை நடைபெறும். நம்முடைய மலங்கள் அப்பலி பீடத்தில் பலியிடப்படுகின்றன என்பது ஐதீகம். மகா மண்டபத்தில் ஓம குண்டத்தில் நித்திய அக்கினி காணப்படும். அந்த அக்கினியை நெய் விட்டுப் பிரகாசிக்கச் செய்து அவிப் பொருள்களை சிவாசாரியர்கள் தினமும் வழங்குவார்கள்.

### அழகிய வெள்ளி மயிலில் மாலையில் திருவீதியுலா

மாலையில் சிறிய அழகிய வெள்ளியினால் செய்யப்பட்ட மயிலில் வள்ளி தெய்வானை சமேத முருகப் பெருமான் திருவீதியுலா வருவார்.

நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் என்றால் இலங்கையின் எல்லாப் பாகங்களில் இருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் தமிழர்கள் சைவர்கள் மட்டுமன்றி வேற்று இனத்தவர்கள். மதத்தவர்களும் பக்தியோடு வருகை தந்து சைவப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் திருத்தலமாக நல்லூர் விளங்குகின்றது.

கந்தசாமி எங்கள் சொந்தசாமி
கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகன்
அவன் கலியுக வரதன்
தமிழ் வளர்த்த தமிழரின் தெய்வம் முருகன். ★

> நல்லூர் கந்தசுவாமி கோயில் மகோற்சவம் என்றால் இலங்கையின் எல்லாப் பாகங்களில் இருந்தும் வெளி நாடுகளிலிருந்தும் தமிழர்கள் சைவர் கள் மட்டுமன்றி வேற்று இனத்தவர் கள். மதத் தவர்களும் பக்தி யோடு வருகை தந்து சைவப் பண்பாட்டைக் கடைப்பிடிக்கும் திருத்தலமாக நல்லூர் விளங்குகின்றது.



# மகிழ்ச்சியைத் தரும் கோபமும், வெறுப்பும் புதிய ஆய்வு சொல்கிறது



விரும்பும் உணர்ச்சிகளை மனதால் அனுப விக்க முடிந்தால் மக்கள் மகிழ்ச்சியுடன் இருப்பார்கள் - அந்த உணர்ச்சி கோபம், வெறுப்பு என விரும் பத்தகாத உணர்ச்சிகளாக இருந்தாலும் பரவாயில்லை என ஓர் ஆய்வு கூறுகிறது.

மகிழ்ச்சி என்பது, வெறுமனே இன்பத்தை அனுபவிப்பது மற்றும் வலியைத் தவிர்ப்பது மட்டுமல்லாமல் அதற்கும் மேலானது என ஒரு சர்வதேச ஆராய்ச்சிக் குழுவின் ஆய்வு கண்டுபிடித்துள்ளது.

எதிர்மறை உணர்ச்சிகளை அதிகளவு உணர்ந்தால், மகிழ்ச்சியுடன் இருக்கலாம் என ஆய்வு கூறுகிறது.

அமெரிக்கா,பிரேசில், ஜேர்மனி, சீனா, இஸ்ரேல், கானா, போலாந்து, சிங்கப்பூர் உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்த 2,300 பல்கலைக்கழக மாணவர்களிடம் இந்த ஆய்வு நடத்தப்பட்டுள்ளது.

என்ன உணர்ச்சியை விரும்பினார்கள் என்றும் மற்றும் என்ன உணர்ச்சியை அனுபவித்தார்கள்என்றும்பங்கேற்பாளர்களை ஆராய்ச்சியாளர்கள் கேட்டுள்ளனர்.

மக்கள், வாழ்க்கை திருப்தியை எப்படி மதிப்பிடுகிறார்கள் என்பதை இதை வைத்து ஒப்பீட்டு பார்க்கப்பட்டது.

தாங்கள் விரும்பியதற்கு நிகராக அனுபவித்த உணர்ச்சிகள் இருந்தால் மக்களின் வாழ்க்கை திருப்தியுடன் இருக்கும்என ஆராச்சியாளர்கள்கண்டுபிடித்துள்ளனர்.

எதிர்மறை உணர்வுகள் நீங்கள் விரும்பும் உணர்ச்சியை உங்களால் அனுபவிக்க முடிந்தால், நீங்கள் மகிழ்ச்சியுடன் இருப்பீர்கள். சோகம், வெறுப்பு என அந்த உணர்வு விரும்பத்தகாத உணர்வாக இருந்தாலும் பரவாயில்லை என ஜெருசலேமின் ஹீப்ரு பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த முன்னணி ஆராய்ச்சியாளர் டொக்டர் மாயா தாமிர் கூறியுள்ளார்.

கோபமும் வெறுப்பும் மகிழ்ச்சியைத் தரலாம். அன்பு போன்ற நேர்மறை உணர்ச்சிகளைக் குறைவாக உணர 11 வீத மக்கள் விரும்புகின்றனர் என்றும், 10 வீத மக்கள் வெறுப்பு மற்றும் கோபம் போன்ற எதிர்மறை உணர்ச்சிகளை அதிகம் உணர விரும்புகின்றனர் என்றும் இந்த ஆய்வு கூறியுள்ளது.

ஒரு மோசமான கணவரை விட்டுச் செல்ல விரும்பும் ஒரு பெண், அவ்வாறு செய்ய தயாராக இல்லை. காரணம் கணவரை குறைவாக நேசித்தால் அப்பெண் மகிழ்ச்சியாக இருக்கலாம் என ஓர் எடுத்துக் காட்டை தாமிர் கூறுகிறார்.

மோசமாக உணர்வது நல்லதாக இருக்கலாம். விரும்பத்தகாத உணர்வுகள் எனக் குறிப்பிடும் போது, இந்த ஆய்வானது கோபத்தையும் வெறுப்பையும் மட்டுமே மதிப்பீடு செய்கிறது.


ஆனால், பயம், குற்றவுணர்வு, துக்கம் மற்றும் பதற்றம் போன்றவற்றை விரும்பத்தகாத உணர்வுகள்எனகூறுவதற்கான அறிகுறிகள் இல்லை என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

மனரீதியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த ஆய்வு பொருந்தாது என டொக்டர் மாயா தாமிர் கூறுகிறார். 'மனரீதியாகப் பாதிக்கப்பட்டவர்கள், மற்றவர்களை அதிக சோகமாகவும், குறைவான மகிழ்ச்சியுடனும் இருக்க விரும்புவார்கள். இது பிரச்சினையை அதிகரிக்கவே செய்யும் என மாயா கூறியுள்ளார்.

மேற்கத்திய கலாசாரங் களில் எல்லா நேரமும் மிகவும் நன்றாகவே உணர வேண்டும் என மக்கள் விரும்புகிறார்கள். பெரும்பாலான நேரங்களில் அவர்கள் நன்றாக உணர்ந்தாலும், இன்னும் சிறப்பாக உணர வேண்டும் என்று அவர்கள் நினைக்கலாம். அவை ஒட்டு மொத்தமாகக் குறைவான மகிழ்ச்சியை அவர்களுக்குக் கொடுக்கலாம் என்கிறார் மாயா.

*நன்றி: பி.பி.சி.*

## ''கொஞ்சு தமிழ் பாவெடுத்து, தேர் நெஞ்சு விடு தூது சொல்லும்''



விடிகாலை பொழுதில் எழுந்து
அதிகாலை சுரத்தில் நீராடி முடித்து
வீதி நடந்து வேலவன் கோவில் நண்ணி
உயர் கோபுர தரிசனம் கண்டு
சேவல் கொடிகளின் அசைந்தாடலில்
கோழி குலத்தின் கூவல் கேட்டு
விரிசுடல் எழுந்த காலைப் பொழுதில்
வேலவன் தங்கத்தேர் ஏறி ஆரோகணித்தனன்!

மானிடம் சிறந்து விளங்க கந்தன்
தானிடம் கொண்ட நல்லூர் வீதி எங்கணும்
மானிடர், மங்கையர், அரம்பையர், என்றாங்கு
ஆரவாரித் தெழும் கூட்டம், அரகர சிவசிவ
என்றே ஓத ஓம்என்றொலித்தது அலை கடலோதம்
மடை கடந்த வெள்ளமாக அடியவர் வெள்ளம்!
முப்புரி நூல் தரித்த ஒப்பரிய வேலவன் சித்திரமாக
தேர் ஏறினன் சித்திர தேரில் தேவியர் சூழமைய!

கொஞ்சு தமிழ் பாவெடுத்து கோதையர்கள்
நெஞ்சு விடு தூது சொல்ல, சாமரம்
கொடி குடை ஆலவட்டத்தோடு குமரன்
தேர் ஏறி உலாவரும் தருக்காட்சி காணீர்!
குமரரும் குமரியரும் காவடி தூக்கினர் நல்லை
குமரன்தேர் ஏறும் திருப்புகழ் பாடியே!
தேர் காவடி, பால் காவடி தூக்கு காவடி ஆடி
ஆர்த்தெழும் தமிழன் துயர் தீர வரம் கேட்டனரே!!

*மண்டைதீவு கை.பேரின்பநாயகம்.*

## இது தேசியத் திருவிழாவப்பா!

நல்லை நகரில் வீற்றிருந்து,
நாடேவியக்கும் வண்ணமாக
கொள் அழகுக் குமரனையே
கூடி வணங்க ஓடி வாரீர்
இரண்டு பத்து ஐந்து நாள்கள் - இங்கே
திரளும் மக்கள் கோடானு கோடி
இருண்ட வாழ்வை நீக்கிடவே
இவனின் பாதம் பணிவோம் வாரீர்

எந்தத் தேசத்தில் வசிப்போரும்- தங்கள்
சொந்தக் கந்தன் என நினைந்து
வந்து விழாவில் கலந்து கொள்ளல்
எங்கும் காணக் காட்சியன்றோ
தேரில் சன சமுத்திரமே- அது
தீர்த்தத்திலும் தொடருமப்பா
பேரிற்கான விழாவல்ல- இது
தேசியத் திருவிழா வப்பா.

*கவிமணி அன்னைதாஸன் ஊரெழு*

## நமக்கு நிம்மதி நல்லூரே

பட்டம் பதவி பதக்கம் சங்கிலி
பாராட்டு நல்லூரில் ஆகாது,
பாட்டு ஆட்டம் போட்டு சினிமாப்
பாடல்கள் நல்லூரில் ஆகாது,
சட்டை பெனியன் போர்வை போடும்
சண்டித்தனம் நல்லூரில் ஆகாது

சஞ்சலம் வஞ்சகம் சூது வாது
சபலங்கள் நல்லூரில் ஆகாது,
திட்டம் தீட்டும் சூழ்ச்சி களவு
தொந்தரவு நல்லூரில் ஆகாது,
தோல்வி வெற்றி உயர்வு தாழ்வு
தோஷங்கள் நல்லூரில் ஆகாது,
நட்டம் இலாபம் நாட்டம் நோட்டம்
நளினம் நல்லூரில் ஆகாது,
நாடு வீடு நிம்மதி யாவும்
நமக்கு நல்லூரில் ஆகும்.

*கே.எஸ்.சிவஞானராஜா*

## விரைந்தோடி வருவாய் ஐயா!

அடியார்கள் கோடி கூடி வணங்கிநிற்கும்
நல்லூரின் கந்த வேளே
நீ மரகதத் தேரேறி வரும் அழகினைக் காண
இந்த இரு கண்கள் போதுமோ சொல்
வேண்டும் அடியார்கள் வினைதீர்க்கும் குமரனே
குஞ்சரி, வள்ளி மணவாளா - வெஞ்சமர் புரிந்து
தேவர் சிறை மீட்ட வள்ளலே - ஆறுமுகா
எம்சிறை மீட்டிட தேரேறியே
விரைந்தோடி வருவாய் ஐயா!

*- எஸ்.பி.மணி ஆனைப்பந்தி, யாழ்.*

## பொற் தேரேறி வருகவே!

கந்தனுக்கு அரோகரா
நல்லைக் கந்தனுக்கு அரோகரா
தேம்பியே நிற்கும் உள்ளங்களை ஆற்றுதற்காய்
தேரேறி வருகின்ற நல்லூர் பெருமானுக்கு அரோகரா
சரவணப் பொய்கைதனில் உதித்த
சுவாமிநாதனுக்கு அரோகரா
தேவியர் சகிதம் தேரேறி வருகின்ற
தமிழ்த் தெய்வமே தரணிதனைக் காக்கவே
நீ தேவியரோடு தேரேறி வருக
ஆறுதல் வேண்டி வந்தோர் யாவர்க்குமே
தேறுதல் தரவே ஆறுமுகப் பெருமானே
நீ பொற் தேரேறி வருகவே!

*- மீசாலையூர் கமலா*



## நல்லையில் அல்லலில் இல்லல்

மாம்பழம் வாய்த்ததென்றறியாமோ
மாபலம் யாதென்றறியாமோ
மாம்பழம் சுவைத்தனன் வேழன்
மாபலம் அறிந்தனன் வேழன்
மாம்பழம் ஆண்டியில் கண்டன்
மாபலம் அறிந்தனன் வேலன்
மாம்பழம் அந்திக்குபேர வானில்
மாபலம் சொர்க்கம் நல்கும் நற்கந்தசாமியே சரணம்!

யாமிருக்கப் பயமேன்
வாழ்விருக்க வியமேன்
யாழிருக்கு லயநல் வேல்
தாழிருக்க நயந்தேன்

வில்லில் சொல்லில் எல்லில்
அல்லிலும் எல்லிலும் இல்லில் ஆல்
எல்லையில் ஏல்லில் ஆலல்
நல்லையில் அல்லலில் இல்லல்

*- மருத்துவர் சி.யமுனாநந்தா.*

# அரசியல்வாதிகளின் அல்லக்கைகள்;

*(07 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

விடுதலைப் புலிகளையும் தமிழ்த் தேசியத்தையும் தனியே பேசுபொருளாக மாத்திரம் முன்வைத்து கடை விரித்த அரசியல் வியாபாரிகளிடமிருந்து செயலூக்கமுள்ள இளையவர்கள் புதிய செயல்தளத்தில் தமிழ்த் தேசிய அரசியலை நகர்த்தவேண்டிய காலம் கண் முன்னே விரிந்து கிடக்கிறது.

அப்படியானால், தமிழ் மக்கள் கடந்த காலங்களில் இளையவர்களை இப்படியான அரசியலுக்குத் தயாராகத் தெரிவு செய்யவில்லையா?

### விசிலடிக்கும் வீரர்கள்

இதனைத்தான் இந்த பத்தி சற்று விரிவாகப் பார்க்கவிருக்கிறது.

இன்று ஈழத்தமிழ் அரசியல் சூழலில் தங்களை இரண்டாம் நிலை அரசியல் தலைவர்களாக அறிவித்துக் கொண்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்களைப் பாருங்கள். தமிழ் அரசியலின் மிகப் பெரிய சாபக்கேடுகளாக சனங்களின் மத்தியில் சாம்பிராணி போட்டுக் கொண்டு திரிகிறார்கள்.

நாடாளுமன்றக் கனவுகளோடு மாகாணசபைகளுக்குள்ளும் கலைக் கப்பட்ட பிரதேச சபைகளிலிருந்து வெளியேறியவர்கள் ஆஸ்தான மன்னர்களின் அடியிலும் காய்ந்துகொண்டிருக்கும் இந்தப் 'புரட்சிகர அரசியல்வாதிகள்' இன்று செய்துகொண்டிருக்கும் சாதனை அரசியல் என்ன?

அதிகாரத்திலிருக்கின்ற அரசியல்வாதிகளின் வால்பிடிகளாக - அவர்களின் நிழலில் இருந்துகொண்டு அநியாயத்துக்கு விசுவாச விசில் அடிக்கும் வீரர்களாக - வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

தங்கள் தலைவனின் கடைக்கண் பார்வைக்காக ஏங்கிக்கொண்டு நிற்கும் அடிமைகளாக - அவர்களுக்கு சேவகம் செய்வதிலேயே - காலத்தை ஓட்டுகிறார்கள். தங்கள் தலைவர்கள் இப்போது செய்துகொண்டிருக்கின்ற அதே அரசியல்பாணியை பின்பற்றிக் கொண்டு தாங்கள் எவ்வாறு எதிர்காலத்தில் அவர்களைப்போல காலாட்டிக்கொண்டிருக்கலாம் என்பதில்தான் அதிக சிரத்தையோடு காணப்படுகிறார்கள்.

இவர்களிடம் எவ்வாறு புதிய சிந்தனைகளை எதிர்பார்ப்பது?

இவர்களிடம் எவ்வாறு புதிய பாதைகளை எதிர்பார்ப்பது?

இவர்கள்தான் தமிழினம் எதிர்பார்க்கின்ற புரட்சிகரமான விடுதலைப் பாதையைத் திறந்துவிடப்போகிறார்களா?

இவர்கள்தான் சர்வதேச அரசியல் பெருஞ்சுழல்களுக்குள் எல்லாம் சிக்கிப்போயிருக்கும் ஈழத்தமிழர் பிரச்சினையை பிய்த்தெடுத்து தீர்வு தரப் போகிறார்களா?

### துதிபாடும் குழு

ஒரு நேர்த்தியான தொடர்பாடலைக் கூட பொதுவெளியில் முன்வைக்கத் தெரியாத - நாகரிகங்களைத் தொலைத்து விட்ட இந்தக் குறுநில மன்னர்கள் - எப்போது கனவு கலையப் போகிறார்கள்?

இப்பொழுதுள்ள சுமந்திரனுக்கும் மாவைக்கும் ஏனைய கூட்டமைப்பு மன்னர்களுக்கும் தப்பாமல் துதிபாடிக் கொண்டும்; - அவர்களையே தங்களது ஏக முதல்வர்களாக ஏங்கி பிரார்த்தித்து கொண்டும் - தங்கள் அறிவுக் கண்களையெல்லாம் அந்தத் தலைவர்களின் அடுப்பங்கரையிலேயே காய விட்டுக் கொண்டிருக்கும் சயந்தனும் ஆர்னோல்ட்டும் அஸ்மினும் சுகிர்தனும் அடுத்த சுகிர்தனும் இன்னும் பல 'ரத்தத்தின் ரத்தங்களும்'தங்களது தலைவர்களைத் தாண்டி ஒரு கிராம் அரசியலையாவது மக்கள் மத்தியில் செய்திருக்கிறார்களா? இல்லை செய்யத் துணிவார்களா? செய்யத்துணிவது இருக்கட்டும், அதற்கான சிந்தனையாவது இவர்களிடம் முதலில் உள்ளதா?

இவர்களைத்தனித்தனியாக அழைத்து தமிழர்கள் இன்று எதிர் நோக்கும் பிரச்சினை ஒன்றுக்காவது தீர்வை தரக்கூடிய வித்தியாசமான தீர்வு வரைபடம் ஒன்றைக் கேட்டால் சொந்த புத்தியில் விளக்கம் தருவதற்கு முடியுமா?

அறிவை அடமானம் வைத்து விட்டு செய்கின்ற அல்லக்கை அரசியலின் வழியாக மக்களை வெல்ல முடியாது என்ற அடிப்படை அரசியல் தத்துவத்தைக்கூட புரிந்துகொள்ளாத இவர்கள் தமிழ் மக்களின் எதிர்கால மீட்பர்களாக வரத்துடிப்பதை பார்க்க நகைச்சுவையாக இல்லை?

தமிழரசுக் கட்சி என்ற பாரம்பரிய அமைப்பிற்குள் பதுங்கியிருந்து அரசியல் நடத்துவதும் மக்கள் வழங்கிய வாக்குகளின் பலத்தில் வியாபித்து நிற்கின்ற தமிழ்க் கூட்டமைப்பின் அதிகார நிழலில் நின்று கொண்டு திமிரோடு செயற்படுவதும் தான் தமிழ் அரசியலின் அச்சாணி என்று எண்ணிக்கொண்டிருக்கும் இவர்கள் எப்போது அரசியல் பழகி, எப்போது மக்களுக்கு சேவை செய்து, எப்போது அதனை மக்கள் அனுபவித்து, இதெல்லாம் நடக்கின்ற காரியமா?

அரசியலில் உண்மையான பலம் என்ன? அது மக்களிடமல்லவா இருக்கிறது. அதனை மக்களிடம்தானே சம்பாதிக்கவேண்டும்! அதற்கு மக்களிடம் பேசவேண்டும். மக்கள் மனங்களை வெல்லவேண்டும். அவர்களோடு சேர்ந்து நின்று அரசியல் செய்யவேண்டும். ஆனால், இவர்களோ மேற்குறித்த எல்லாவற்றையும் தலைவர்களிடம் சம்பாதிப்பதற்கல்லவா ஒற்றைக்காலில் நிற்கிறார்கள்?.

கூட்டமைப்புக்கு ஒத்து ஊதா விட்டால் மக்களாதரவு கிடைக்காது. கேட்டுக் கேள்வியில்லாமல் கூட்டமைப்புடன் ஒட்டிக்கொண்டிருக்கும் வரைதான் எங்களுக்கு முகவரி யாவது கிடைக்கும். கஜேந்திரகுமாருக்கு நடந்தது ஓர் அனுபவம் - என்று இந்த இளையவர்கள் எண்ணலாம். கஜேந்திரகுமார் கூட்டமைப்பை விட்டு வெளியில்வந்து தாயகத்திலுள்ள மக்களுக்காக அரசியல் செய்திருந்தால் வெற்றி பெற்றிருக்கலாம். அவர் புலம்பெயர்ந்த மக்களுக்காக அரசியல் செய்த காரணத்தால் தோற்றார்; தோற்றுக்கொண்டிருக்கிறார்.

இன்று தமிழ்த் தேசிய அரசியலில் தங்களின் இருப்பை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஆர்வத்தோடு 'ஆணிகளை' தேடிக்கொண்டிருக்கும் இளையவர்கள் முதலில் மக்கள் மத்தியில் புதிய அரசியலைக் கொண்டுசெல்ல வேண்டும். புதிய சிந்தனைகளையும் புதிய செயல்திட்டங்களையும் அறிமுகம் செய்து அதற்கு ஆதரவான புதிய முகங்களை மக்கள் மத்தியிலிருந்து தங்களுக்கு ஆதரவாக இணைத்துக் கொள்ளவேண்டும்.

### சுமந்திரனின் அரசியல்

இவர்களுக்கு புரியும்படி சொல்வதாக இருந்தால் தேசியப்பட்டியல் மூலம் நாடாளுமன்றம் சென்ற சுமந்திரன்கூட தனது உண்மையான பலத்தை நிரூபிப்பதற்கு தேர்தலில் போட்டியிட்டு வென்றுவிட்டுத்தான் இன்று மார்தட்டிக் கொண்டிருக்கிறார். அவர் தொடர்ந்தும் சம்பந்தனுக்கு துதிபாடிக்கொண்டு அரசியலை ஓட்டலாம் என்று திட்டம் போடவில்லை.

அதேபோல,சுமந்திரனைப் போல அரசியல் செய்வதற்கு சுமந்திரன் இருக்கிறார். சுமந்திரனின் பிரதிகள் என்ற பெயரிலான பிரகிருதிகள் தேவையில்லை. அதுபோல ஏனைய தலைவர்களும் சரியோ தவறோ ஏதோ செய்து கொண்டிருக்கிறார்கள். அவர்களின் அடிபொடிகளாக வரிசைகட்டி நிற்பது இப்போதைக்கு தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு ஜனரஞ்சக அந்தஸ்தை தரலாம். ஆனால், அது அந்தந்தத் தலைவர்களின் அரசியலோடு அஸ்தமித்துவிடும்.

மக்கள் விழிப்பானவர்கள். அவர்களை எல்லா நேரமும் ஏமாற்றி விட முடியாது. ஆயுதங்களுக்குள் ஒளிந்திருக்கும் ஆவா குழு இளையவர்களைவிட அரசியலுக்குள் ஒளிந்திருக்கும் விசுவாச இளையவர் கூட்டம்தான் தங்களுக்கு ஆபத்து என்று முடிவெடுப்பதற்கு முன்னர் இந்த 'வீரர்கள்' விழித்துக் கொண்டால் சேமம். (தொடரும்)

# தங்க ரதத்தில் பவனி வருகிறான் அழகு முருகன் ஆறுமுக சுவாமியாக!

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தேரடி வில்வ மரத்தைச் சுற்றி வந்தால் பொல்லா வினைகள் எல்லாம் போய்விடும் என்பார்கள்.

தேர்த்திருவிழா அழித்தல் தொழிலைக் குறிக்கும். எமது உள்ளத்தில் உள்ள ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்று மலங்களையும் பேராசை, பொய், களவு, காமம் என்பவற்றையும் ஒடுக்கவே ஆறுமுகக் கடவுள் தேரில் பவனி வருகின்றான். வாழ்த்த வாயும் நினைக்க மட நெஞ்சும் தாழ்த்தச் சென்னியும் தந்தது எதற்காக? முருகப் பெருமானை மனதாரப் பாடி, வணங்கி மகிழ்வதற்காகவே. எனவே அலங்காரக் கந்தனாகிய ஆறுமுகசாமியின் தேர் பவனி அருங் காட்சியைக் காண வரும் பக்தர்களுக்கு எல்லாம் வல்ல கந்தக் கடவுள் அருளினை வணங்கி, இந்த தேசத்துக்கு நிறைவான ஒரு தீர்வை வழங்கி இந்த மண்ணிலே எல்லோரும் இன்புற்று நல்ல வண்ணம் வாழ திருவருள் பாலிப்பாராக!

- திருமதி மலர்விழி கனகசபை.
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
தீவக கல்வி வலயம்

# இலங்கையில் பாரதி....

*(06 ஆம் பக்கத் தொடர்ச்சி...)*

இவ்வாறு சொன்ன பாரதியே தமது வசன கவிதை ஒன்றிலே, தமிழரை எருமைக்கும் ஒப்பிட்டிருப்பதையும் அ. இரவி தமது கட்டுரையில் சுட்டிக் காண்பிக்கின்றார்.

**''மழை பெய்கிறது, ஊர் முழுவதும் ஈரமாகிவிட்டது. தமிழ்மக்கள் எருமைகளைப் போல் எப்போதும் ஈரத்தி லேயே நிற்கிறார்கள். ஈரத்திலேயே உட்காருகிறார்கள். ஈரத்திலேயே நடக்கிறார்கள். ஈரத்திலேயே படுக்கிறார்கள். ஈரத்திலேயே சமையல், ஈரத்திலேயே உணவு, உலர்ந்த தமிழன் மருந்துக்கும் கூட அகப்பட மாட்டான்''**

இந்த வசன கவிதையிலே ஏன் மீசை துடிதுடிக்க கண்களிலே கோபம் கொப்புளிக்க பாரதியார் இந்தத் திட்டு திட்டுகிறாரே.... ஏன்...? என்று கேட்கிறார் அ. இரவி.

கணியன் பூங்குன்றனாரின் யாதும் ஊரே கவிதையில் வரும் **பெரியோரை வியத்தலும் இலமே சிறியோரை இகழ்தல் அதனிலும் இலமே** என்னும் வரிகளைப் புதுவை இரத்தின துரையின் **''நமக்கு மேலும் ஒருவரிலர், நமக்குக் கீழும் எவருமிலர்''** என்ற வரிகளுடன் ஆராய்கிறார். அத்துடன், சிவ சேகரம் எழுதியிருக்கும் **''நமக்கு நாமே பகை என ஆனோம், ஆதலினால் எம்மூர் தவிர்ந்த யாதும் ஊரே எம்மவர் தவிர்ந்த யாவரும் கேளிர்''** கவிதை வரிகளைப் பாரதியின் கோபத்துடன் ஒப்பிடுகிறார்.

இவ்வாறு பாரதிக்கு முன்பும் பாரதிக்குப்பின்பும் தமிழ்மொழியும் தமிழர்களும் இலங்கையில் பல ஆய்வாளர்களினால் அவ ரவர் கண்ணோட்டத்தில் ஆராயப்பட்டிருக்கிறது.

அவர்களின் அக்கறை யாவும் தமிழ் மொழியிடத்தும் தமிழச் சாதியிடத்திலும் நீடித்திருந்தாலும், இந்த நூற்றாண்டில், அதாவது பாரதி நூற்றாண்டு முடிந்து அதற்குப்பின்னர் வரும் நூற்றாண்டில் தமிழ் மொழி, தமிழ் இனம் பற்றி வேறுவகையான ஆராய்ச்சிகளும் தரவுகளும் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

அதற்கு முன்னர் ஒரு சிறிய கதையைச் சொல்வோம்.

சில வருடங்களுக்கு முன்னர், அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்தில் **மரியா ஸ்மித் ஜோன்ஸ்** என்ற பெண்மணி இறந்துவிட்டார். அவர் இறக்கும்போது அவருக்கு வயது 89. பழங்குடி இனத்தைச் சேர்ந்த அவர் அம்மக்களின் மொழிகளில் ஒன்றான ''ஏயக்'' என்ற மொழியைப் பேசியவர். அவர் தான் அந்த மொழியை இறுதியாகப்பேசியவர். அவருக்குப் பின்னர் அந்த மொழியை எவரும் பேசமாட்டார்கள் என்பது தெரிந்தே, ஏயக் மொழிக் கான அகராதியையும் தயாரித்தார். இனிமேல் யாராவது அந்த அகராதியின் துணையோடு படித்தால்தான் அம்மொழி வாழும்.

இரண்டு வாரத்திற்கு ஒரு மொழிவீதம் உலகில் எங்கோ ஒரு மூலையில் ஏதாவது ஒரு மொழி அழிந்துகொண்டிருக்கிறது. அல்லது காணாமல் போகிறது. அழிந்துபோவதும் காணாமலாவதும் ஒன்றுதான்.

மறைந்த மரியா ஸ்மித் ஜோன்ஸ் வாழ்ந்த அலாஸ்காவில் எஞ்சியிருக்கின்ற மேலும் சில மொழிகளும் அழிந்து விடுவதற்கான வாய்ப்பிருக்கிறது. அவ்வாறு அழியும் மொழிகளுடன் அவற்றின் வரலாறும் அழிந்துவிடலாம். ஒரு மொழி தொடர்ந்து வாழ வேண்டுமாயின் குறைந்தது ஒரு இலட்சம் பேராவது அந்த மொழியைப் பேசிக் கொண்டிருக்கவேண்டும் என்பது மொழியியல் வல்லுநர்களின் கருத்து.

அந்த வகையில் தமிழ்மொழி அழிந்துவிடாது என்று இந்த நூற்றாண்டில் நாம் ஆறுதல் கொண்டாலும், தமிழர் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும், இலங்கை, தமிழ்நாடு மற்றும் மலேஷியா, சிங்கப்பூரிலும், தொலைக்காட்சி ஊடகங்களிலும் தமிழ் சினிமாக்களிலும் தமிழின் தேவை குறைந்து கொண்டிருப்பதை அவதானிக்க முடிகிறது. வெளிநாடுகளில் தமிழர்களின் அரங்கேற்றங்கள் பதச்சோறு.

தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் இதற்கு மிகச் சிறந்த உதாரணம்.

இலங்கையில் பெருகிவரும் சர்வதேசக் கல்லூரிகள் ( **International Colleges**) மற்றும் ஓர் உதாரணம்.

அமெரிக்காவில் வாழும் பாரதியின் கொள்ளுப்பேத்தி மீராவுக்கு தமிழ் பேசமுடிய வில்லை என்றால், அதற்காக பாரதி மீண்டும் உயிர்பெற்று வந்து அவரைக் கோபித்துக் கொள்ளத்தான் முடியுமா...?

**இலங்கையில் பாரதி** என்னும் இத்தொடர் வெளியாகிக்கொண்டிருக்கும் **காலைக் கதிர்** பத்திரிகை வெளிவரும் யாழ்ப்பாணத்திற்கு சுமார் 60 வருடங்களுக்கு முன்னர் வருகைதந்திருந்த இஸ்ரேல் விஞ்ஞானிகள் ''இந்த மண்ணின் தண்ணீர் உவர் நீராக மாறுவதற்கு வாய்ப்பிருக்கிறது'' என்று எச்சரித்து விட்டுச்சென்றார்களாம்.

ஆனால், அதனை அரசியல் தலைவர்களோ மக்களோ கவனத்தில் கொள்ளவில்லை. 60 ஆண்டுகள் கடப்பதற்கு முன்பே யாழ்குடாநாட்டின் தண்ணீரின் சுவை எவ்வாறு மாறியிருக் கிறது.....? ஒவ்வொருவரும் இந்த மாற்றத்தை எமது தாய் மொழிக்கு எதிர்காலத்தில் நேர்ந்துவிடவிருக்கும் மாற்றத்துடன் ஒப்பிட்டுப் பார்த்தல் வேண்டும் என்பதும் இத்தொடரின் முக்கிய செய்தியாகும்.

எந்தவொரு மொழியும் வழக்கிலிருக்கும்வரையில் வாழும் என்ற ஆறுதலுடன், தேமதுரத் தமிழோசை உலகமெல்லாம் பரவும் வகை செய்வோம் என்ற பாரதியின் கனவுடன் நாம் எமது பணிகளைத்தொடருவோம்.

கனவு மெய்ப்படல் வேண்டும்.

(தொடரும்)

## இளையோரே திருஅவையின் நம்பிக்கை

'அன்புள்ள இளையோரே' நீங்கள் திருஅவையின் நம்பிக்கை. உங்களது எதிர்காலம் பற்றி கனவு காண்கின் றீர்களா? அப்படியானால் உலக ஆயர்கள் மாமன்றத்தில் கலந்து கொள்ளுங்கள்:–

என ஐக்கிய நாடுகள் நிறுவனம் உலக இளையோர் நாளைக் கடைப் பிடித்ததையொட்டி தனது டுவிட்டரில் செய்தி வெளியிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ். ஐக் கிய நாடுகள் நிறுவனம், ஓகஸ்ட் 12 ஆம் திகதியை உலக இளையோர் நாளாக அறிவித்துள்ளது.

காலைக்கதிர்
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

## 15 ஆவது உலக ஆயர்கள் மாமன்றம்

'இளையோர் விசுவாசம் மற்றும் அழைப்பை தேர்ந்துதெளிதல்' என்ற தலைப்பில் இளையோரை மையப் படுத்தி 2018ஆம் ஆண்டில் 15ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் வத்திக் கானில் இடம்பெறவுள்ளது. இம் மாமன்றத்திற்குத் தயாரிப்பாக 16 வயது முதல் 29 வயது வரையுள்ள இளையோர் அனைவருக்கும் கேள் விகள் அனுப்பப்பட் டுள்ளன. 1991 ஆம் ஆண்டில் உலக இளையோர் நாளை உருவாக்கியது ஐ.நா. பொது அவை.

# துன்ப வேளைகளில் எங்களுடன் இயேசு இருக்கிறார் என உணர்க!

''நம்மை ஏதாவது துன்புறுத்தும்போது அஞ்சாதே முன் னோக்கிச் செல் – நான் உன்னோடு இருக்கிறேன் என இயேசு நம் இதயங்களில் பேசுகின்றமையை உற்றுக்கேட்க வேண்டும் என அசிசி புனித கிளாராவின் விழாவாகிய ஓகஸ்ட் 11 அன்று வெளியிட்ட செய்தியில் கூறியுள்ளார் திருத்தந்தை.

அசிசி புனித பிரான்சிஸின் வாழ்வாலும் போதனைகளாலும் ஈர்க்கப்பட்ட புனித கிளாரா கிறிஸ்தவ ஏழ்மையைப் பின்பற்ற வேண்டுமென்ற ஆவலில் தனது பிரபுத்துவக் குடும்ப வாழ் வைத் துறந்தார். தனது 18 ஆவது வயதில் ஓர் இரவில் வீட்டை விட்டு வெளியேறிய இவர் ஏழைக் கிளாரா தியான யோக துறவுச் சபையைத் தொடங்கினார்.

திருநற்கருணை மீது அளவு கடந்த பக்தி கொண்டிருந்த இவர் ஒருநாள் இரவில் இவரது துறவு இல்லத்தை சரதேனியக் கொள்ளைக்கூட்டம் சூறையாட முயற்சித்தபோது திருநற் கருணைப் பாத்திரத்தைக் கையிலேந்தி உருக்கமாகச் செபித்து அக் கூட்டத்தினரை விரட்டியடித்தார் எனச் சொல்லப்படுகிறது.

# அன்னை மரியாவைப் போல இயேசுவைக் கொணர்வோம்!

முதிர்ந்த வயதில் எலிச பெத் கருவுற்றிருக்கின்றார் என்ற செய்தியை வானதூதர் வழியாக அறியவந்த அன்னை மரியா எலிசபெத்துக்கும் இவ் வுலகம் முழுமைக்கும் எடுத்து வந்தது இயேசுவையே என மரியின் விண்ணேற்பு விழா வன்று உரை வழங்கினார் திருத் தந்தை பிரான்சிஸ். பெண் களுக்குள் நீர் ஆசி பெற்றவர் உம் வயிற்றில் வளரும் குழந் தையும் ஆசி பெற்றதே என எலிசபெத் அன்னை மரியாவை நோக்கி வாழ்த்தியதையே நம் அருள்நிறை மரியே செபத்தில் கூறுகிறோம் என்பதையும் சுட் டிக் காட்டிய திருத்தந்தை பிரான்சிஸ் முதிய வயதில் குழந் தைப் பேறடைந்த சக்கரியா எலிசபெத் தம்பதியருக்கு அன்னை மரியாவின் வருகையு டன் கூடுதல் மகிழ்ச்சி பொங்கு கிறது, ஏனெனில் வாழ்வுக்கும் குடும்பத்திற்கும் மக்களின் மீட்புக்கும் அர்த்தம் தருபவர் அன்னை மரியுடன் வந்துள்ளார் என்றார்.

அன்னை மரியின் விண் ணேற்புப் பெருவிழாவைச் சிறப்பிக்கும் நாம் இயேசு கிறிஸ்து எனும் விலை மதிப் பற்ற கொடையை நமக்கும் நம் குடும் பங்களுக்கும் சமுதா யத்திற்கும் கொணர வேண்டு வோம்.

இந் நாள்களில் உலகின் பல்வேறு பகுதிகளில் இயற்கை பேரிடர்களாலும் சமூகப் பதற்ற நிலைகளாலும் மோதல் களாலும் துன்புறும் மக்களின் ஏக்கங்களை யும் எதிர்பார்ப்புகளையும் அமை தியின் அரசியாம் அன்னை மரியிடம் ஒப்படைப்பதாக எடுத்துரைத்தார்.

# ஜேர்மன் கேவலார் புலம்பெயர் தமிழர்களின் திருயாத்திரையின் முத்துவிழாவில் யாழ்.ஆயர்



ஜேர்மன் கேவலார் புலம் பெயர் தமிழர்களின் திருயாத் திரை 1988 ஆம் ஆண்டு தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தால் ஆரம்பிக்கப் பட்ட முப்பதாவது ஆண்டு நிறைவு முத்துவிழா (1988 - 2017) யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் 13 ஓகஸ்ட் 2017 அன்று மிக வும் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

இலங்கை மன்னார் மறை மாவட்டத்தில் உள்ள மருதமடு அன்னையின் பெயரால் இலங்கை நாட்டின் நிரந்தர அமைதிக்காக வேண்டுதல் செய்யும் மேற்படி பெருவிழா ஜேர்மன் கேவலார் புலம்பெயர் தமிழர்களால் 2017ஆம் ஆண் டும் கொண்டாடப்பட்ட போது பல ஐரோப்பிய நாடுகளில் இருந்து பத்தாயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் அதில் கலந்து சிறப்பித்தனர்.

கேவலார் திருவிழாவிற்கான ஆயத்த வழிபாடுகள் ஓகஸ்ட் மாதம் 11 ஆம் திகதி செபமாலை பவனியோடு ஆரம்பமாகியது. இவ்வாண்டு செபமாலை பவ னியோடு மாதாவின் திருச் சொரூபமும் கேவலார் ரயில் நிலையத்திலிருந்து பவனியாக எடுத்து வரப்பட்டமை சிறப்பு அம்சமாகும். செபமாலை பவனியின் பின்னர் நற்கருணை ஆராதனை இடம் பெற்றது.

## ஆசியாவில் சமூக அநீதிகளைக் களைய இளையோர் முன்வருதல் வேண்டும்

ஆசிய நாடுகள் சந்திக்கும் வறுமை, சமுதாய அநீதிகள் என்ற கொடுமைகளைக் களைய ஆசிய திருஅவை யுடன் இணைந்து இளையோர் இன்னும் ஆர்வமாக உழைப்பதற்கு முன்வர வேண்டும் என பங்களாதேஷ் கர்தினால் பாட்ரிக் ரொசாரியோ் செய்தியாளர்கள் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.

ஓகஸ்ட் 2 ஆம் திகதி முதல் 6 ஆம் திகதி வரை இந்தோனே ஷியா நாட்டில் நடைபெற்ற 7 ஆவது ஆசிய இளையோர் நாள் நிகழ் வின் ஆரம்ப நாளன்று ஆசிய ஆயர் பேரவையின் இளையோர் பணிக்குழுவின் தலைவர் கர்தினால் ரொசாரியோ இவ்வாறு செய்தியாளர்களிடம் கூறினார்.

ஆசிய இளையோர் நாள் இளை யோரிடம் வளர்க்க விரும்பும் இரு முக்கிய பண்புகள் பரிவு மற்றும் குழுவாகப் பணியாற்றுதல் என இந் தோனேஷிய ஆயர் பேரவையின் தலைவரும் ஜகார்த்தா பேராய ருமான இக்னேசியஸ் செய்தியாளர்கள் கூட்டத்தில் கூறினார்.

# புலமைப் பரீட்சை விழிப்பூட்டல்

கியூடெக் கரித்தாஸ் நிறுவ னத்தினால் புலமைப் பரீட்சை மாணவர் களுக்கான கல்வி விழிப்பூட்டல் நிகழ்ச்சி திட்டத் தின் கீழ் யாழ். சென் சாள்ஸ், சென். ஜேம்ஸ் ஆண்கள் பாட சாலை, சென்றோக் குருநகர், பூம்புகார் அரசினர் தமிழ் கல வன் பாடசாலை, கொழும்புத் துறை துரையப்பா வித்தியால யம், திருநெல்வேலி றோமன் கத்தோலிக்கப் பாடசாலை, உரும் பிராய் றோமன் கத்தோலிக்க பாடசாலை, நாவாந்துறை ஒஸ் மானியாப் பாடசாலைகளைச்



சேர்ந்த 130க்கு மேற்பட்ட மாண வர்களுக்கான புலமைப் பரீட்சை வழிகாட்டல் கருத் தமர்வு அண் மையில் யாழ்.கரித்தாஸ் கியூ டெக் நிறுவனத்தில் நடைபெற் றது. கரித்தாஸ் கியூடெக் நிறு வன இயக்குநர் எஸ்.இயூனிஸ் பிரான்சிஸ் அடிகளார் மாணவர் களைவாழ்த்தி பரீட்சையில் நல்ல முடிவுகளைப் பெற்று கல்லூரிக் கும் பெற்றோருக்கும் பெருமை தேடித்தர ஆசிர் வழங்கினார்.

## உண்மையின் எண்ணங்கள்

### தமிழ், சிங்கள மக்கள் ஒன்று கூடும் மடுத் தலமே!

2017ஆம் ஆண்டு மடுப்பதிக்கு நாட்டின் பல பாகங்களில் இருந்தும் சுமார் 7 லட்சம் பக்தர்கள் வந்த நிலையில் மடுத்திரு விழா நடைபெறுமா என்ற அச்சம் ஏற்பட்ட நிலையில் மடு அன்னையின் அருளால் மழை ஓய்ந்து இயற்கை அமைதியாகி விழாக்கொண்டா டப்பட்டமை மடு அன்னையின் அற்புதமாகவே பக்தர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. மரு தமடு அன்னையின் யாத்திரைத்தலம், சிங்கள மக்களும் தமிழ் மக்களும் ஆரம்ப காலம் முதல் இன்றுவரை இன வேறு பாடுகளை மறந்து ஒன்று கூடும் ஒரே ஒரு யாத்திரைத்தலமாக விளங்கி வந்துள் ளது. தமிழ், சிங்கள மக்கள் மடு அன்னையை தம் அன்னை யாகவே ஏற்று, செல்லும் இடம் எல்லாம் மடு அன்னையைக் கொண்டு சென்று விழாக் கொண்டாடி வருகின்றனர். அது போன்ற ஒரு விழாவிற்கே ஜேர்மன் கேவலார் நகருக்கு யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அண்மையில் சென்று வந்துள் ளார். இலங்கை வாழ் தமிழ், சிங்கள மக்களை இன மத பேத மின்றி தன் பாதத்தில் ஒன்று சேர்க்கின்ற மருத மடு அன்னை தம் பக்தர்கள் அனைவரையும் அவர்கள் உல கின் எப்பகுதியில் இருந்தாலும் பாதுகாத்து வழி நடத்துவாராக.

# பாகிஸ்தானின் அன்னை தெரேசா அருட்சகோதரிக்கு அஞ்சலி



பாகிஸ்தான் நாட்டில் தொழு நோயாளர் மத்தியில் தன் வாழ்வு முழுவதும் சேவையாற்றி மரண மடைந்துள்ள ஜேர்மன் நாட்டு அருள் சகோதரி றுத் அவர்களுக்கு பாகிஸ் தான் அரசுத் தலைவர்கள் தங்களின் இறுதி மரியாதையைச் செலுத்தினர். பாகிஸ்தான் நாட்டு அன்னை தெரேசா என அழைக்கப்படும் அருள்சகோதரி றுத் அவர்கள் முதுமையில் தனது 87 ஆவது வயதில் கராச்சி மருத்துவ மனையில் ஓகஸ்ட் 10 அன்று காலமானார்.

பாகிஸ்தான் அரசுத் தலை வர், பிரதமர் உட்பட பாகிஸ்தான் அரசி யல் தலைவர்கள் மருத்துவரான அருள் சகோதரி றுத் அவர்களுக்கு தங்களின் இரங்கல் செய்திகளை வெளியிட் டுள்ளனர். மருத்துவரான அருள் சகோதரி றுத் ஜேர்மனியில் பிறந்திருந்தாலும் அவரின் இதயம் எப்போதும் பாகிஸ்தானில்தான் இருந்தது என புகழாரம் சூட்டியுள்ளார் பிரதமர். 1929 ஆம் ஆண்டில் பிறந்த அருள்சகோதரி றுத் முன்னாள் கிழக்கு ஜேர்மனியிலிருந்து தப் பித்து மேற்கு ஜேர்மனி சென்று 1950களில் பல்கலைக் கழகங்களில் மருத்துவம் படித்தார். மரியின் திரு இதய சபையில் சேர்ந்த இவர் அச் சபையால் இந்தியாவுக்குப் பணி யாற்ற அனுப்பப்பட்டார்.

ஆனால் இந்தியாவுக்குள் நுழை வதற்கான அனுமதிப் பிரச்சினை களால் 1960 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி கராச்சியில் தங்கி தொழு நோயாளர் மத்தியில் பணியைத் தொடங்கினார். அருள் சகோதரிறுத் அவர்களின் அடக்கச் சடங்கு ஓகஸ்ட் 19 ஆம் திகதி நேற்று கராச்சி புனித பாட்ரிக் பேரா லயத்தில் அரசு மரியாதையுடன் நடைபெற்றது.

# அன்னை மரியாவின் விண்ணேற்பு விழா!

அன்னை மரியாவின் விண்ணேற்பு திருவிழா சிறப்பிக்கப்பட்டதை யொட்டி அப்பெருவிழாவை மையமாக வைத்து தன் டுவிட்டர் செய்தியை வழங்கினார் திருத்தந்தை பிரான்சிஸ். நம் வருங் காலத்திற்கான வாழ்த்துக்களை அன்னை மரியாவின் விண்ணேற்பு நமக்கு வழங்குகிறது. இயேசு கிறிஸ்துவின் வெற்றியோடு புதிய வானம் மற்றும் புதிய பூமியைக் குறித்து அறிவித்துக்கொண்டே வானகம் நோக்கி நம் பார்வையை இவ்விழா திருப் புகிறது என தன் டுவிட்டர் பக்கத்தில் எழுதியுள்ளார் திருத்தந்தை.



# 2019 உலகக் கிண்ணத்திற்கு நேரடித் தகுதிபெற இலங்கைக்கு இறுதி வாய்ப்பு




இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கிடையில் இடம் பெறவுள்ள 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது போட்டி பகலிரவுப் போட்டியாக தம்புள்ளை ரங்கிரி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இன்று இடம் பெறவுள்ளது.

இலங்கைஅணிஎதிர்வரும் 2019ஆம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத் தொடருக்கு நேரடியாகத் தகுதிபெற வேண்டுமாயின் இந்திய அணிக்கு எதிராக ஆரம்பமாகவுள்ள 5 போட்டிகளைக் கொண்ட ஒருநாள் போட்டித் தொடரில் குறைந்தது இரண்டில் கட்டாயம் வெற்றிபெற்றாகவேண்டுமென சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இங்கிலாந்தில் 2019இல் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கான நேரடிதகுதியைப் பெறுவதற்கு, கால எல்லை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 30ஆம் திகதியாகும் பொழுது தரவரிசையில் முதல் எட்டு இடங்களுக்குள் இருக்க வேண்டும். எனினும், இலங்கை அணி தற்பொழுது 88 புள்ளிகளுடன் 8ஆவது இடத்திலும், மேற்கிந்தியத் தீவுகள்அணி 78 புள்ளிகளுடன் 9ஆவது இடத்திலும் உள்ளன.

ஐ.சி.சி. ஒருநாள் போட்டிகள் அணி தரவரிசையில் இந்தியாதற்போது 3ஆம் இடத்தில் உள்ளது. இலங்கைக்கு எதிராக தம்புள்ளையில் இன்று ஞாயிறு ஆரம்பமாகவுள்ள ஒருநாள் போட்டித் தொடரில் இந்தியா 4:1 என்று தொடரை வென்றால் 3ஆம் இடத்தைத் தக்க வைத்துக்கொள்ளும். 114 புள்ளிகளுடன் தற்பொழுது உள்ள இந்தியா 3:2 என்ற அடிப்படையில்இலங்கையை வீழ்த்தினால் கூட தசமப் புள்ளிகளில் இங்கிலாந்தை விடக் குறைவாகப் பெற்று பின்னடைவு கண்டு விடும்.

மாறாக இலங்கை நேரடியாக உலகக் கிண்ணத்துக்கு தகுதி பெறுவதை உறுதி செய்ய இந்தத் தொடர் முக்கிய தருணமாக அமைந்துள்ளது. இலங்கை அணி குறைந்தது 2 போட்டிகளையாவது வெல்வது அவசியம். அப்போதுதான் இலங்கை 2019 உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெறுவதை உறுதி செய்துகொள்ள முடியும்.

ஐ.சி.சி ஒருநாள் தரவரிசையில் கடைசி 4 இடங்களில் உள்ள அணிகள் தகுதிப் போட்டிகளில்விளையாட வேண்டும். இதில் முதல் 2 இடங்களைப் பெற்றுக்கொள்ளும் அணி 2019 உலகக் கிண்ணத்திற்குத் தகுதி பெறும்.

எனவே, இந்தத் தொடரில் 2 போட்டிகளில் இலங்கை வெற்றி பெற்றால் 90 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும். மாறாக மேற்கிந்தியத் தீவுகள் அணி அயர்லாந்துக்கு எதிரான ஒரே ஒருநாள் போட்டியையும் வென்று இங்கிலாந்துக்கு எதிராக 5 போட்டிகளிலும் வென்றாலும் 88 புள்ளிகளையே பெற்றுக்கொள்ளும்.

ஆனால் இந்தியா 4:1 என்று தொடரை வென்றால் இலங்கை அணி 88 புள்ளிகளில் இருக்கும். இந்நிலையில் மேற்கிந்தியத் தீவுகள் சாத்தியமில்லாத நிலையிலும் குறித்த வெற்றிகளைப் பெற்றால் தசமப் புள்ளிகளில் இலங்கையைப் பின் தள்ளிவிடும். ஆனால் இங்கிலாந்துக்கு எதிராக5 போட்டிகளைவெல்லுமா என்பது சந்தேகம்.

எனினும், கடந்த 5 வருடங்களில் ஒருநாள் அரங்கில் 27.20 சராசரியைக் கொண்ட அவ்வணி, ஆப்கானிஸ்தான், ஸிம்பாப்வே மற்றும் அயர்லாந்து அணிகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் பின்னடைவில் உள்ளமை இலங்கை அணிக்கு சற்று ஆறுதலைக் கொடுத்துள்ளது.

டெஸ்ட் போட்டியும் சர்வதேச ஒருநாள் போட்டியும் இரு மாறுப்பட்ட போட்டிகள் என்பதால் டெஸ்ட் தொடரில் போன்று ஒருநாள் தொடரில் மோசமாக விளையாட மாட்டோம் என இலங்கை ஒருநாள் அணியின் தலைவர் உபுல் தரங்க அண்மையில்இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் தெரிவித்திருந்தார்.

டெஸ்ட் போட்டிகளைப் போன்றல்லாது ஒருநாள் போட்டிகளுக்காக அறிவிக்கப்பட்டுள்ள இலங்கை அணியில் இடம்பெற்றுள்ள வீரர்கள் சர்வதேசப் போட்டிகளில் அனுபவமிக்க வீரர்களாக இருப்பதனால் இந்தத் தொடரில் மிகுந்த பொறுப்புடன் விளையாடி குறைந்தபட்சம் 2 போட்டிகளில் வெற்றிபெற்று 2019 உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு நேரடியாகத் தகுதிபெற வேண்டிய நிலையில் உள்ளது.

எனவே, இத் தொடரில் இலங்கை அணி முழு அளவிலான ஆற்றல்களை வெளிப்படுத்த வேண்டிய கட்டாய நிலையில் உள்ளது.

## இலங்கை அணி வீரர்களுக்கு புதிய தடை!

இலங்கை கிரிக்கெட் அணி வீரர்கள் ஓய்வு அறைக்குள் பிஸ்கட்டுகள் கொண்டு வந்து உண்பதை இலங்கை கிரிக்கெட் அணி நிர்வாகம் தடை செய்துள்ளதால் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.

இந்தத் தடையை அறிந்த வீரர்கள், இலங்கை அணியின் முகாமையாளர் அசங்க குருசிங்கவிடம் விளக்கம் கேட்டு உள்ளதாகத் தெரிகிறது. அதற்கு குருசிங்க வீரர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் என்று ஊடகங்களிலும் சமூக வலைத் தளங்களிலும் செய்திகள் பரவி வருகின்றன

இதுகுறித்து விளக்கம் அளித்து பேசிய அசங்க குருசிங்க, வீரர்களுடன் அவ்வாறான வாக்குவாதம் ஏதும் நடைபெறவில்லை. ஆனால் எங்களது அணியில் உள்ள உடல் தகுதி பயிற்சியாளர் வீரர்கள் பிஸ்கட் உண்பதை விரும்பவில்லை.

அதனால் வீரர்களின் உடை மாற்றும் அறையில் பிஸ்கட்டை எடுத்து போகக் கூடாது என அறிவுறுத்தி உள்ளார். மேலும் நாங்கள் உணவு வழங்கும் குழுவிடம் இதைப் பற்றி கூறினோம், அதற்கு அவர்கள் வாக்குவாதம் ஏதும் செய்யாமல் ஒத்துழைத்தனர்.

இதனால் வீரர்களுக்கும் அணி மேலாண்மை நிர்வாகிகளுக்கும் எவ்வித வாக்குவாதங்களும் மனச்சங்கடங்களும் ஏற்படவில்லை. இதுபோன்ற வதந்திகள் பரவிய போது வீரர்கள் என்னை அழைத்து தாங்கள் முழு பங்களிப்புடன் ஒத்துழைப்பதாக எங்களுக்கு உறுதியளித்தனர். சொல்லப்போனால் வீரர்களுக்கு அவர்களின் அறையில் பிஸ்கட் இருந்தது கூட தெரியாது என்று தெரிவித்துள்ளார். (ப)

## ஐ.சி.சி. ஒருநாள் தரவரிசைப் பட்டியல்: விராட் கோஹ்லி முதலிடத்தில்

ஒருநாள் போட்டிகளுக்கான தரவரிசைப்பட்டியலில்இந்திய அணி தலைவர் விராட் கோஹ்லி தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கிறார்.

ஐ.சி.சி. ஒருநாள் போட்டிகளுக்கான புதிய தரவரிசைப் பட்டியலை வெளியிட்டுள்ளது. துடுப்பாட்டத் தரவரிசையில் விராட் கோஹ்லி 873 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

ஆஸ்திரேலிய வீரர் டேவிட் வோர்னர் 861 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், தென் ஆபிரிக்காவின் டிவில்லியர்ஸ் 847 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளனர். பந்துவீச்சாளர்கள் தரவரிசையில் ஆஸ்திரேலியாவின் ஹசில்வுட் முதலிடத்தில் உள்ளார்.

சிறந்த ஒருநாள் அணிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் தென் ஆபிரிக்கா 119 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளது.

ஆஸ்திரேலியா 117 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்திலும், இந்தியா 114 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்திலும் உள்ளது.



இலங்கைஅணி88புள்ளிகளுடன் பட்டியலில் எட்டாவது இடத்தில் உள்ளது. (ப)

## அமெரிக்க ஓபன் டென்னிஸ்: அசரென்கா விலகல்

2 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்ற விக்டோரியா அசரென்கா வருகிற 28ஆம் திகதி தொடங்கவுள்ள அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டியில் பங்கேற்கமாட்டார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கிராண்ட்சிலாம் போட்டியான அமெரிக்க ஓபன் டென்னிஸ் போட்டி வருகிற 28ஆம் திகதி தொடங்குகின்றது. இதில் 2 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றவரான விக்டோரியா அசரென்கா (பெலரஸ்) பங்கேற்பதில் சந்தேகம் நிலவுகிறது. கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதன்பின் ஜூன் மாதம் டென்னிஸ் களத்துக்குத் திரும்பினார். இந்த நிலையில் அவரது கணவரிடம் இருந்து பிரிய சட்டப்படி நடவடிக்கையில் இறங்கி உள்ளார்.

இதனால் குழந்தையை போட்டி நடைபெறும் நியூயோர்க் நகருக்கு அழைத்துச் செல்ல முடியாத சூழ்நிலை நிலவுகிறது. அதன் காரணமாகவே அவர் அமெரிக்க ஓபனில் பங்கேற்கமாட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

## புளொட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) - வவுனியா; மூன்றாமவர் சிவநேசன் - முல்லைத்தீவு மாவட்டம்.

மாகாண சபையின் அமைச்சரவையை முதலமைச்சர் விக்னேஸ்வரன் மாற்றியமைக்கும் போது புளொட் சார்பான இடத்தை சிவநேசனுக்கு வழங்குவார் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது.

ஆனால் அதற்கிடையில் வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த லிங்கநாதனும் அந்த அமைச்சர் பதவியை எதிர்பார்க்கின்றார் என்றும் -

அது குறித்து முதலமைச்சரிடம் கோரிக்கை ஒன்றை அவர் முன்வைத்திருக்கின்றார் என்றும் அறிய வருகின்றது.

இதனால் புளொட் சார்பில் அமைச்சர் பதவியைப் பெறப் போகின்றவர் லிங்கநாதனா அல்லது சிவநேசனா என்ற கேள்வியும் அதனால் கட்சிக்குள் சிறிது குழப்பமும் ஏற்பட்டிருக்கின்றன என்று கூறப்படுகின்றது. (உ)

## தேங்காய்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இச்சம்பவம் நேற்றுக் காலை சாவகச்சேரி நீதிமன்றுக்கு முன் பாக இடம்பெற்றது. இதில் மட்டுவில் தோப்பு ஒழுங்கையைச் சேர்ந்த சிவராஜா (வயது-50) என்பவரே பலியானார்.

நேற்றுக் காலை தமது வீட்டிலுள்ள தென்னை மரங்களில் பறிக்கப்பட்ட தேங்காய்களை மூடையாகக் கட்டி அவற்றை சாவகச்சேரி பொதுச் சந்தையில் விற்பனை செய்வதற்காக தனது துவிச்சக்கரவண்டியில் அவர் கொண்டு சென்றார்.

இதன்போது, சாவகச்சேரி நீதிமன்று முன்பாக எதிரே வேகமாக வந்த டிப்பர் வாகனம் ஒன்று அந்தக் குடும்பஸ்தரை மோதித் தள்ளியது. இதில் அவர் சம்பவ இடத்திலேயே பலியானார்.

சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்ட சாவகச்சேரி பொலிஸார் வாகனச் சாரதியைக் கைது செய்துள்ளனர். (ம)

## 50ஆயிரம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழ்த் தேசியக்கூட்டமைப் பின் பேச்சாளரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமானஎம்.ஏ.சுமந்திரன் இதனைத் தெரிவித்திருக்கின்றார்.

"பொருத்து வீட்டுத்திட்டம்தான் கிடைக்கும். அதைப் பெற்றுக் கொள்ளுங்கள்" - என்று பிரசாரப் படுத்தி அந்தப் பொருத்து வீடுகளை எமது மக்களின் தலையில் கட்டி லாபம் சுருட்ட முயன்றவர்களின் நிலைப்பாட்டை மக்கள் இப்போது புரிந்துகொள்ள வேண்டும்.

பொருத்து வீடுதான் என்று மீள்குடியேற்ற அமைச்சரும் அமைச்சும் ஒற்றைக் காலில் நின்றனர்.

ஆனால் எமது முறைப்பாட்டை அடுத்து ஜனாதிபதியே தமக்குக்கீழ் உள்ள நல்லிணக்க அமைச்சு மூலம் ஐம்பதாயிரம் கல் வீடுகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார். அதை நாம் வரவேற்கின்றோம்.

பொருத்து வீடு எமது மக்களுக்கு ஏற்புடையதல்ல, அது பொருத்தமற்றது என்பதை நாம் வலியுறுத்தினோம். அதை உணர்ந்து, ஏற்று, அரசு உரிய நடவடிக்கை எடுத்திருப்பதாகக் கருதுகிறோம்.

இந்தக் கல் வீடுகளுக்கு மக்கள் விண்ணப்பித்து அவற்றைப் பெற்றுப் பயனடைய வேண்டுகிறோம் - இப்படி சுமந்திரன் மேலும் தெரி வித்தார். (உ)

# சிறுநீரக நோயினால் அனுராதபுரத்தில் 127 பேர் மரணம்

இவ்வருடத்தின் ஆரம்பம் முதல் நேற்று வரையிலான காலப் பகுதியில் சிறுநீரக நோயினால் அனுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் 127 பேர உயிரிழந்துள்ளனர் என வட மத்திய மாகாண சுகாதாரப் பிரிவு அறிவித்துள்ளது.

இம்மாவட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு சிறுநீரக நோயினால் 296 பேர் உயிரிழந்தனர் எனவும் அப்பிரிவு சுட்டிக்காட்டியுள்ளது. கடந்த ஜனவரி மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரையில் அனுராதபுர மாவட்டத்தில் மாத்திரம் 13 ஆயிரத்து 451 பேர் சிறுநீரக நோயாளிகள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்தவர்களே இவ்வாறு கணிப்பில் எடுக்கப்பட்டுள்ளனர் .

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இந்தியாவின் தெற்கு பிராந்திய இராணுவத் தளபதி பி.எம். ஹரிஸ் தலைமையிலான படை அதிகாரிகள் குழுவே யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து தமது படையினருக்கு அஞ்சலி செலுத்தியது.

பலாலி விமானப் படைத் தளத்தில் வந்திறங்கிய இந்தியப் படை அதிகாரிகள், கொல்லப்பட்ட இந்தியப் படையினரின் நினைவாகப் பலாலியில் அமைக்கப்பட்டுள்ள நினைவிடத்தில் முதலில் அஞ்சலி செலுத்தினர்.

பின்னர் கோப்பாய் இராச வீதியில், இந்தியப் படை அதிகாரி ஒருவரின் சமாதி உள்ள இடத்திற்குச் சென்ற இந்திய படையினர், அங்கு இலங்கைப் படையினரால் புனரமைக்கப்பட்ட நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தினர்.

தொடர்ந்து அவர்கள் நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்திற்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் யாழ்.கோட்டைக்குச் சென்று அதைப் பார்வையிட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியப் படையினரின் யாழ். வருகை மற்றும் அஞ்சலி நிகழ்வுகளில் பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகளை யாழ். பாதுகாப்புப் படைகளின் தலைமையகம் மேற்கொண்டிருந்தது.

இலங்கைப் படையினருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே யுத்தம் ஆரம்பமானதைத் தொடர்ந்து, இதற்குத் தீர்வு காண முற்பட்ட இந்தியா 1987 ஆம் ஆண்டு இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற ஓர் உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொண்டது.

அந்த உடன்படிக்கையின் அடிப்படையில் இலங்கையில் அமைதியை ஏற்படுத்த 1987 ஜூலை மாதம் இந்தியப் படையினர் இலங்கைக்கு வருகை தந்து வடக்கு, கிழக்கில் பணியில் ஈடுபட்டனர்.

இந்திய அமைதிப் படையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு நம்பிக்கையீனம் ஏற்பட்டமையால் இரு தரப்பினருக்கும் இடையே யுத்தம் மூண்டது. இதில் ஆயிரத்துக்கும் அதிகமான இந்தியப் படையினர் கொல்லப்பட்டனர். பின்னர் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் இந்தியப் படையினர் அப்போதைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸாவினால் திருப்பி அனுப்பப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## கிழக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

நேற்றுச் சனிக்கிழமை நடைபெற்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் திருகோணமலை மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு தெரிவித்தார். அங்கு உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

மாகாணசபை தேர்தலை பிற்போடுவதாக இருந்தால், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை ஆதரவுடன் யாப்பு திருத்தப்பட வேண்டும். அந்த அறிவித்தல் தற்போது வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கெதிராக சில சிவில் அமைப்புகள் வழக்குத்தாக்கல் செய்வதற்குத் தயாராகிவிட்டன.

வடமத்தி, சப்ரகமுவ, கிழக்கு மாகாண சபைகளின் ஆயுட்காலம் விரைவில் நிறைவடையவுள்ள நிலையில், தேர்தலை பிற்போடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இது தொடர்பில் பல கட்சிகள் அதிருப்தி நிலையில் இருக்கின்றன. நாளை திங்கட்கிழமை இதுதொடர்பில் கட்சித் தலைவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து பேசவுள்ளனர்.

இதுதவிர, வட்டாரமுறை ரீதியிலான தேர்தல்முறை பெரும் பிரச்சினையாக இருக்கின்றது.

எங்களுடைய நீண்டகால போராட்டத்தின் பின்னர் 70:30 என்றிருந்த வட்டாரம் மற்றும் விகிதாசார தேர்தல் முறையை மாற்றுவதற்கான திருத்தம் அடுத்தவாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. 60% வட்டாரம் மற்றும் 40% விகிதாசாரம் என்ற ரீதியில் இந்தத்திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளது.

வட்டார எல்லை நிர்ணயம் தொடர்பிலும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. வட, கிழக்கில் எல்லை நிர்ணயத்தில் பல குளறுபடிகள் நடைபெற்றுள்ளன. இது தொடர்பில் முஸ்லிம் காங்கிரஸ் பலவிதமான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. தேர்தலொன்று நடைபெறுமானால், அதற்கு முன் எல்லை நிர்ணய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உத்தரவாதம் ஒன்றைத்தரவேண்டுமென நான் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளேன். அவரும் அதற்கு இணக்கம் தெரிவித்துள்ளார்.

எந்த சூழ்நிலை வந்தாலும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேர்தலுக்கு முகம் கொடுக்க என்றும் தயாராகவே இருக்கிறது. வடமத்தி மற்றும் சப்ரகமுவ மாகாணசபை தொடர்பில் தேசியக் கட்சிகள் அச்சம் கொள்கின்றன. ஆனால், கிழக்கு மாகாண சபையைப் பொறுத்தவரை முஸ்லிம் காங்கிரஸும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் தேர்தலை எதிர்கொள்ள என்றும் தயாராகவே இருக்கின்றன.

இதுதவிர, தேர்தலில் பெண்களுக்கு 25 வீத ஒதுக்கீடு வழங்குமாறு கூறப்பட்டுள்ளது. இதற்கு முஸ்லிம் காங்கிரஸ் இப்போதே ஆயத்தங்களை செய்துகொண்டு வருகிறது. அதுபோல கட்சியின் மத்திய குழுக்கள் விரைவில் வட்டார ரீதியில் அமைக்கப்படவேண்டும். அதற்கான பணிகளை அந்தந்த அமைப்பாளர்கள் மேற்கொள்ள வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சி மற்றும் சுதந்திரக் கட்சி என்பன வாரிசுரிமை அரசியலுக்கு முக்கியத்துவம் கொடுத்து செயற்படுகின்றன. ஆனால், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் வாரிசுரிமைக்கு குழிபறித்த கட்சி என்று சொல்லாம். இது பாமர மக்களின் கட்சி. அமைச்சர் பதவி இருந்தால் மட்டும்தான் சிலரின் கட்சிகள் உயிரோடு இருக்கும். ஆனால், முஸ்லிம் காங்கிரஸ் அமைச்சு பதவியைத் தூக்கியெறிந்த காலங்களில்தான் அபாரமாக வளர்ச்சி கண்டிருக்கிறது.

மஹிந்த ஆட்சிக்காலத்தில் அவருடன் நன்றாக அனுபவித்துவிட்டு, முஸ்லிம் சமூகத்துக்காக தங்கள் கட்சி வெளியேறுகிறது என்று சொல்லிக்கொண்டு ஓடி வந்தவர்கள், முஸ்லிம் காங்கிரஸ் வெற்றிலை சின்னத்தில் மட்டுமே களமிறங்க வேண்டுமென்று அப்போதையே ஜனாதிபதியுடன் சண்டை பிடித்தனர்.

ஆனால், நாங்கள் தூக்குக் கயிற்றில் தொங்கினாலும் வெற்றிலை சின்னத்தில் கேட்கமாட்டோம் என்று அப்போதே அடித்துக்கூறிவிட்டோம். - என்றார். (உ)

## இராணுவத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருக்கின்றார்.

ராணுவத்தை விட்டு ஓடியோர் ஒழுக்காற்று நடவடிக்கையை எதிர்கொள்ளாத வகையில் சரணடைவதற்கு கால அவ காசத்தை இராணுவம் வழங்கி யிருந்தது.

அது முடிவடைந்தமையை அடுத்தே ஒரு வார கால விசேட தேடுதல் நடவடிக்கைகளின் மூலம் எழுநூறு பேர் மடக்கப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## அமைச்சர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கு முன்பதாக தன்னிலை விளக்க அறிக்கை ஒன்றை அவர் வெளியிடுவார் என்றும் அந்த ஊடகச் செய்தி தெரிவித்தது.

ஐ.தே.கட்சியைச்சேர்ந்த விஜயதாஸ ராஜபக்ஷவுக்கு எதிராக ஆளும் தரப்பினால் நம்பிக்கையில்லாப்பிரேரணை கொண்டுவரப்படலாம் என பேச்சடிபடும் சூழலிலேயே அவர் தாமாகத் தமது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்ய முன்வந்திருக்கின்றார் எனச் செய்தி கசிந்துள்ளது.

சில காலம் ஆளும் தரப்பில் பின் வரிசையில் அமர்ந்திருக்க அவர் தீர்மானித்துள்ளார் என்றும் கூறப்பட்டது.

*(மற்றொரு செய்தி 2ஆம் பக்கத்தில்)*

## அமைச்சுப்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குறித்து அவரிடம் கேட்டபோதே இந்தத்தகவலை அவர் கூறினார்.

"எமது கட்சியின் பரிந்துரையை யாரும் கோரவுமில்லை; நாங்கள் கொடுக்கவுமில்லை.

" ஆனால் முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் ஒரு விடயத்தைத் திரும்பத் திரும்பக் கூறி வந்துள்ளார்.

"புளொட்டுக்கு ஓர் அமைச்சுப் பதவி வழங்கப்பட வேண்டும். அதே சமயம் முல்லைத்தீவைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையிலும் அமைய வேண்டும் என்பதே அது.

"அப்படிப் பார்த்தால் சிவநேசனுக்கு அது கிட்ட வேண்டும்.

"லிங்கநாதன் ஒரு கொள்கை அடிப்படையில் அமைச்சர் பதவி வேண்டாம் என ஏற்கனவே அறிவித்திருக்கின்றார். அவர் இப்போது அந்தப் பதவியைக் கோருகின்றார் என எனக்குத் தெரியவில்லை.

"அமைச்சர்களுக்கு எதிராக லிங்கநாதன் குற்றச்சாட்டுகளை முன்வைத்தமைதான் இந்த அமைச்சரவை மாற்றத்துக்கான ஆரம்பப் புள்ளியாகும். அதனால்தான் இருந்த அமைச்சர்கள் பதவி விலகும் நிலைமை வந்தது.

"இந்த சமயத்தில் அந்த வெற்றிடத்துக்கு லிங்கநாதன் அந்தப் பதவி கோருவது, அந்தப் பதவியைஈட்டுவதற்காகத்தான் இந்தக்குற்றச்சாட்டை அவர் வைத்தார் என்ற கருத்தைத் தந்துவிடும். ஆகவே அதனையும் நாம் வரவேற்கவில்லை." - என்றார் சித்தார்த்தன். (உ)

## புலமைப்பரிசில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

728 மாணவர்கள் இதற்குத் தோற்றுகின்றனர். அவர்களில் 562 மாணவர்கள் விசேட தேவையுடையவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இந்தப் பரீட்சைக் கடமையில் மொத்தம் 20 ஆயிரம் அதிகாரிகள் இன்று ஈடுபடவுள்ளனர். (உ)

## குமரப்பா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலவிய சூழலில், வடக்கிலிருந்து தென்தமிழீழம் எனக் கூறப்படும் கிழக்கு மாகாணத்துக்குப் படகில் சென்ற விடுதலைப் புலிகளே, கடற்படையினரால் வழி மறிக்கப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

ஆழ் கடலில் அந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்தவர்தான் இந்த ட்ரவிஸ் சின்னையா.

இந்தக் கைது நடவடிக்கையின் பின்னர், பலாலிக்குக் கொண்டு வரப்பட்ட புலிகளின் போராளிகள் அங்கிருந்து பலவந்தமாகக் கொழும்புக்கு இலங்கை விமானப் படைவிமானத்தில் கொண்டு செல்லப்படவிருக்கையில் - அதைத் தடுத்து நிறுத்த இயலாமல் இந்தியப் படைகள் வாளாவிருந்தபோது - அந்தப் போராளிகள் சயனைட் அருந்தித் தற்கொலை செய்தனர். தளபதிகள் குமரப்பா, புலேந்திரன் உட்பட பன்னிரண்டு போராளிகள் வீரமரணம் அடைந்தனர்.

இந்தச் சம்பவமே பின்னர் இலங்கை - இந்திய ஒப்பந்தம் செயலிழந்து போவதற்கும் புலிகள் - இந்திய அமைதிப் படைகள் நேரடியாக யுத்தம் வெடிப்பதற்குமான பிரதான காரணியாக அமைந்தது.

இந்திய - இலங்கை ஒப்பந்த சமயத்தில், யுத்த நிறுத்தமும், இணக்க சூழ்நிலையும் நிலவிய காலத்தில், புலிகளின் மூத்த தளபதிகளை கடலில் வழிமறித்து, மடக்கி, கைதுசெய்து, அதன் பின்னரான குழப்பங்களுக்குக் கால்கோள் இட்டமைக்கான வெகுமதியை, இப்போது ட்ரவிஸ் சின்னையா, கடற்படைத் தளபதி என்ற பதவி மூலம் பெற்றிருக்கின்றார் என புலம்பெயர் தமிழர் வட்டாரங்கள் தெரிவித்தன.

இலங்கைக் கடற்படையின் 21 ஆவது தளபதியாகப் பதவியேற்கும் ட்ரவிஸ் சின்னையா புலிகளுக்கு எதிரான கடற்போரில் ஈட்டிய சாதனைகளுக்காக 'வீர விக்கிரம விபூஷண' விருது பெற்றவர்.

புலிகளின் பெரிய ஆயுதக் கப்பல்கள் மூன்றை 48 மணி நேரத்துக்குள் அழித்தவர் இவர் என்றும் கூறப்படுகிறது.

2010 ஜனாதிபதித் தேர்தலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா போட்டியிட்டமையை அடுத்து அவருக்கு ஆதரவானவர்கள் என்ற வரிசையில் பல படை அதிகாரிகள் அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசினால் அரசியல் பழிவாங்கல்களுக்கும் இம்சைகளுக்கும் உட்படுத்தப்பட்டனர். அத்தகைய நெருக்குவாரங்களுக்குள் சிக்கிய ட்ரவிஸ் சின்னையா சேவையில் இருந்து இடைநடுவில் விலகினார்.

எனினும் 2015 ஜனவரியில் நல்லாட்சி அரசு மலர்ந்தமையை அடுத்து அரசியல் பழிவாங்கல்களுக்குள்ளான படையினரை மீளச் சேவையில் இணைத்துக் கொள்ளும் திட்டத்தின் கீழ் அவர் சேவையில் இணைக்கப்பட்டார்.

*(மேலதிக விவரங்கள் 4 ஆம் பக்கத்தில் ஆசிரிய தலையங்கத்தில்)*

# பிலிப்பைன்ஸில் ஒரு வார வேட்டையில் கடத்தல்காரர் 80 பேர் சுட்டுக்கொலை!

பிலிப்பைன்ஸ் நாட்டில் போதைப்பொருள்கடத்தல்கார ர்களுக்கு எதிரான வேட்டையில் ஒரே வாரத்தில் 80 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என பிலிப் பைன்ஸ் அரசு அறிவித்துள்ளது.

பிலிப்பைன்ஸ் நாட்டில் போதைப்பொருள் கடத்தலை ஒழிக்க அதிபர் ரோட்ரிகோ டுட்டர்டே அதிரடி நடவடிக் கையை எடுத்து வருகிறார். போதைப் பொருள் கடத்தல் கார்களைக் கண்டதும் சுட்டுக் கொல்லுமாறு அவர் உத்தரவிட் டுள்ளார்.

இதனால், நாடு முழுவதும் சந்தேகத்துக்குரிய இடங்களில் தொடர்ந்து சோதனை நடத்தப் பட்டுவருகிறது. அவ்வகையில்,



போதைப்பொருள் கடத்தல் காரர்களை ஒடுக்குவதற்கு கடந்த திங்கட்கிழமை இரவு தொடங்கி விடியவிடிய பொலி ஸார் பல்வேறு இடங்களில் அதிரடிச் சோதனைகளை நடத் தினர்.

இந்தச் சோதனையின்போது ஒரேநாளில் 32 கடத்தல்காரர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். தலைநகர் மணிலாவில் நேற்றி ரவு நடத்தப்பட்ட அதிரடிச் சுற்றி வளைப்புகளில் 13 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். அதைத்

தொடர்ந்து இந்த வாரத்தில் இதுவரை 80 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் என அரசு அறிவித்துள்ளது.

ரோட்ரிகோ டுட்டர்டே கடந்த ஆண்டு பிலிப்பைன்ஸ் அதிபராகப் பதவி ஏற்றமை முதல் இதுவரையில் போதைப் பொருள் கடத்தல்காரர்கள் சுமார் 3,500 பேர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

இதுதவிர போதைப் பொருள் தொடர்பான குற்றங்களில் தொடர்புடைய 2 ஆயிரம் பேரும், விவரிக்க முடியாத சூழ்நிலை களில் சுமார் ஆயிரம் பேரும் கொல்லப்பட்டிருக்கின் றனர் எனகாவல்துறை ஆவணங் களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் மலாலா!



அமைதிக்கான நோபல் பரிசு பெற்ற மலாலாவுக்கு, இங்கிலாந்தில் உள்ள உலகின் தலைசிறந்த பல்கலைக்கழ கங்களில் ஒன்றான ஒக்ஸ் போர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்வி பயில இடம் கிடைத்துள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த இளம்பெண் மலாலா, பெண் கள் கல்விக்காகப் போராடி வருகின்றார். இதனால் அவர் தீவிரவாதிகளின் கோபத்திற்கு உள்ளானார்.

கடந்த 2012ஆம் ஆண்டு தலிபான் தீவிரவாதிகள் அவ ரைச் சுட்டுக்கொல்ல முயன்ற னர். இதில் அதிர்ஷ்டவசமாக உயிர் தப்பிய அவர் தற்போது லண்டனில் வசித்து வருகிறார். கடந்த 2014ஆம் ஆண்டு இவருக்கு அமைதிக்கான நோபல் பரிசு கிடைத்தது.

கல்வியில் மிகுந்த ஆர்வம் கொண்ட மலாலாவுக்கு, இங் கிலாந்தில் உள்ள உலகின் தலைசிறந்த பல்கலைக் கழகங் களில் ஒன்றான ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் சேர்ந்து கல்வி பயில வேண்டும் என் பது நீண்ட நாள் ஆசை. இதற் காக அவர் கடுமையாக உழைத்து வந்தார்.

ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் தனக்கு இடம் கிடைத்திருக்கின்றமை குறித்து மலாலா தனது டுவிட்டர் பக் கத்தில் மகிழ்ச்சியை வெளிப் படுத்தி உள்ளார்.

## பூமியைக் கடக்கும்; பெரிய விண்கல்!

### நாசா அறிவிப்பு

மிகப்பெரிதான விண்கல் ஒன்று பூமியைக் கடந்து செல் லும் என அமெரிக்க விண் வெளி ஆய்வுமையம் நாசா தெரிவித்துள்ளது.

நாசாவின் கணக்கீட்டின்படி 4.4 கி.மீ. அளவு கொண்ட ப்ளாரன்ஸ் என்ற விண்கல் எதிர்வரும் செப்ரெம்பர் முத லாம் திகதி பூமியைக் கடந்து செல்லும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

எனினும், இதனால் பூமிக்கு ஆபத்து எதுவுமில்லை என்று நாசா குறிப்பிட்டுள்ளது.

இந்த விண்கல் 70 லட்சம் கி.மீ. தொலைவில் பூமியைப் பாதுகாப்பாகக் கடக்கும். பூமியை இவ்வளவு நெருக்கமாகக் கடக் கும் விண்கல் இந்த ப்ளாரன்ஸ் விண்கல்லாகவே இருக்கும் என்று நாசா தெரிவித்துள் ளது.

## அமெ.ராணுவம் தயார் நிலையில்; வடகொரியாவுடன் போர் மூளுமா?

வடகொரியாவுக்கு எதிராக படையை பயன்படுத்த தங்கள் இராணுவம் தயார் நிலையில் உள்ளதாக அமெரிக்கா தெரிவித் துள்ளது.

வடகொரியா அணு ஆயுதங் கள் மற்றும் ஏவுகணைகள் மூலம் அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியாவைத் தாக்கு வோம் எனத் தொடர்ந்து மிரட் டல் விடுத்து வருகிறது. இத னால் போர் பதற்றம் நிலவி வருகிறது.



இந்நிலையில், அமெரிக்க வெளியுறவுத்துறைச் செயலா ளர்ரெக்ஸ் டில்லர்சன், இராணுவ அமைச்சர் ஜேம்ஸ் மேட்டிஸ் மற் றும் ஜப்பான் வெளியுறவு அமைச்சர் டரோகனோ, இரா ணுவ அமைச்சர் இட்ஸ்னோரி ஒனோ டெரா ஆகியோர் ஒன் றாக அமர்ந்து இது குறித்து விவாதித்துள்ளார்கள்.

பின்னர், டில்லர்சன் கூறுகை யில், அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடுகள் மீது வட கொரியா தாக்குதல் நடத்தினால் அதை எதிர்கொள்ளத் தயாராக உள் ளோம். ஏனெனில், எங்கள் இராணுவப் படை தயார் நிலை யில் உள்ளது எனக்கூறியுள்ளார்.

ஜேம்ஸ் கூறுகையில், எங் களைக் குறிவைத்து வட கொரியா ஏவுகணையை ஏவி னால் உடனடியாக அதிரடி நடவ டிக்கை மூலம் அதனை வீழ்த்து வோம் எனக் கூறியுள்ளார்.

## சீனாவில் பறவைக் காய்ச்சல்

சீனாவின் குயிசோ மாகா ணத்தில் உள்ள காடை பண் ணைகள் மூலமாக அங்கு பறவைக் காய்ச்சல் பரவுவதை வேளாண்மைத்துறை அமைச் சு உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தப் பண்ணைகளில் வளர்க்கப்படும் காடைகளுக்கு H5N6 என்ற வைரஸ் தொற்றால் காய்ச்சல் ஏற்பட்டது என்றும் பத்தாயிரம் காடைகள் வரை அடுத்தடுத்து இறந்தன என்றும் அரசுக்கு தகவல் கிடைத்தது. இதையடுத்து, சுமார் 8 ஆயிரம் காடைகளை அரச அதிகாரிகள் கொன்று அழித்துள்ளனர்.

குயிசோ மாகாணத்தில் பர விய பறவைக் காய்ச்சல் கட்டுப் பாட்டுக்குள் இருப்பதாகவும், காடை மற்றும் கோழிப் பண் ணைகள் சந்தைக்கு விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதாகவும் சீன வேளாண்மைத்துறை அமைச் சகத்தின் இணையத்தளத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது

## பார்சிலோனா தாக்குதல் சம்பவம்;
# சூத்திரதாரி சுட்டுக்கொலை!



ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் பாதசாரிகள் மீது வாக னத்தை மோத விட்டு தாக்கு தல் நடத்திய முக்கிய குற்ற வாளி காம்ப்ரில்ஸ் நகரில் சுட்டுக்கொல்லப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்துள் ளனர்.

ஸ்பெயினின் பார்சிலோனா நகரில் உள்ள லாஸ் ராம்ப்லாஸ் என்ற சுற்றுலாப் பகுதியில் இருக்கும் ப்லகா கடலுன்யா பிளாசா அருகே பாதசாரிகள் சாலையைக் கடந்து கொண்டி ருந்த போது, திடீரென அங்கு வந்த வான் ஒன்று பாதசாரிகள் மீது பயங்கரமாக மோதியது.

இந்த கோரத் தாக்குதலில் 13 பொதுமக்கள் பலியானார் கள், 30 இற்கும் அதிகமானோர் காயமடைந்து மருத்துவமனை யில் அனுமதிக்கப்பட்டுள்ள னர். இந்தத் தாக்குதலுக்கு ஐ.எஸ் தீவிரவாத இயக்கம் பொறுப்பேற்ற நிலையில், இதில் தொடர்புடைய முக்கிய தீவிரவாதியை பொலிஸார் தேடி வந்தனர்.

தாக்குதலை நடத்திய காரை வாடகைக்கு வாங்கி யவன் மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த ட்ரிஸ் ஒபகிர் (வயது 20) என்று கூறிய பொலிஸார், அவனது புகைப்படத்தையும் வெளியிட்டிருந்தனர்.

இதனையடுத்து, காம்ப் ரில்ஸ் என்ற இடத்தில் தீவிர வாதிகள் தங்கியிருந்த பகு தியை முற்றுகையிட்ட பொலி ஸார், அவர்களை நோக்கி சர மாரியான துப்பாக்கிச்சூட்டை நடத்தினர்.

சில மணிநேரம் நடந்த இந்த துப்பாக்கிச் சண்டையில் 5 தீவிரவாதிகள் சுட்டுக் கொல் லப்பட்டனர் என்று அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர். அந்த ஐவரில் பார்சிலோனா தாக்குதல்தாரியும் ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும், பார்சிலோனா தாக்கு தலுடன் தொடர்புடைய நான்கு பேரின் புகைப்படங் களையும் பொலிஸார் வெளி யிட்டுள்ளனர்.

## டோங்கா தீவில் நிலநடுக்கம்:

### ரிச்டர் அளவில் 6.4 ஆக பதிவு

பசிபிக் பெருங்கடலில் அமைந்துள்ள டோங்கா தீவின் மேற்குப் பகுதியில் நேற்றுத் திடீரென நிலநடுக்கம் ஏற் பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 6.4 ஆக பதிவானது என வானிலை மைய அதிகா ரிகள் தெரிவித்துள்ளனர்.

பசிபிக் பெருங்கடலில் உள்ள ஒரு தீவு நாடு டோங்கா. நேற்று அதிகாலை அந்த நாட்டின் மேற்குப் பகுதியில் மிதமான நிலநடுக்கம் ஏற் பட்டது. நிலநடுக்கத்தால் ஏற் பட்ட அதிர்ச்சியில் பூமி குலுங் கியது. இதனால் வீடுகளில் இருந்த மக்கள் அதிர்ச்சி அடைந்து வெளியேறி வீதி களில் தஞ்சம் அடைந்தனர்.

இது குறித்து அமெரிக்க வானிலை ஆராய்ச்சி மைய அதிகாரிகள் கூறுகையில், இந்த நிலநடுக்கம் சுமார் 6.4 ரிச்டர் அளவில் பதிவாகியுள்ளது. பசிபிக் கடலில் இருந்து 500 கி.மீற்றர் தொலைவில் இது உருவானது. நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்த விவரங்கள் வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கையும் விடப்பட வில்லை எனத் தெரிவித்துள் ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir


# பீகார், உ.பியில் வெள்ளம்: சாவு 170 ஆக உயர்வு



பீகார் மற்றும் உ.பியில் பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 170 ஆக உயர்ந்துள்ளது.

பீகார் மாநிலத்தில் கடந்த சில தினங்களாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் அங்குள்ள ஆறுகளில் கடும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதையடுத்து, தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை மீட்புப் படையினர் பத்திரமாக மீட்டு, பாதுகாப்பான இடங்களில் தங்கவைத்து வருகின்றனர்.

இதற்கிடையே, தொடர்ந்து பெய்து வரும் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்கி பீகாரில் இதுவரை 130 பேர் பலியாகி உள்ளனர் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதேபோல், உத்தரப்பிரதேசத்தில் வெள்ளத்தில் சிக்கி இதுவரை 40 பேர் பலியாகி உள்ளனர். மழையால் பாதிப்பு அடைந்தவர்களைப் பத்திரமாக மீட்டு வருகிறோம். பல லட்சம் ஏக்கர் விளைநிலங்கள் பாதிப்பு அடைந்துள்ளன என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ப)

# அ.தி.மு.கவின் அணிகள் இரண்டும் இணைந்தாலும் நீண்டகாலம் நிலைக்கா!

## தினகரன் தெரிவிப்பு



அ.தி.மு.கவின் இரு அணிகளும் இணைந்தாலும் நீண்டகாலம் நிலைக்காது என்று சிறையில் சசிகலாவை சந்தித்த பிறகு டி.டி.வி.தினகரன் தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. இரு அணிகளும் இணைவதற்கான சாத்தியக்கூறுகள் உருவாகியுள்ளன. இச்சூழ்நிலையில் அ.தி.மு.க. (அம்மா) அணியின் துணைப் பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் நேற்றுமுன்தினம் சசிகலாவை அவரது பிறந்த நாளையொட்டி சிறையில் சந்தித்தார்.

சிறையில் இருந்து வெளியே வந்த டி.டி.வி.தினகரன் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியவை வருமாறு:-

ஓ.பன்னீர்செல்வம் மற்றும் எடப்பாடி பழனிச்சாமி தலைமையிலான 2 அணிகளும் சுயநலம் மற்றும் பதவி ஆசைக்காகவே இணைகின்றன என அறிவிப்புகளை வெளியிட்டுள்ளனர். தொண்டர்கள் மற்றும் பொதுமக்களின் விருப்பத்திற்கு ஏற்ப எதுவும் நடக்கவில்லை.

எம்.ஜி.ஆர். மறைவுக்கு பின்னர் 1987இல் இரண்டாக பிரிந்த அ.தி.மு.க. மீண்டும் 1989ஆம் ஆண்டு ஜெயலலிதா தலைமையில் இணைந்தது. அப்போது 2 அணிகளும் தொண்டர்களின் விருப்பத்திற்கேற்ப இணைந்தன. அது இயற்கையானது. இப்போதுள்ள சூழ்நிலையில் 2 அணிகளும் தொண்டர்கள் விருப்பத்திற்கு எதிராக உள்ளன. இப்படி இருக்கும் நிலையில் இரு அணிகளும் இணைந்தால் அது நிலைக்காது. நீண்டகாலத்திற்கு அவர்களால் இணைந்திருக்க முடியாது. இந்த முடிவால் எனக்கு எந்தப் பின்னடைவும் இல்லை.

ஜெயலலிதா இல்லத்தை அரசுடைமையாக்கி அதை பொதுமக்கள் பார்வைக்குவிட முடிவு செய்திருப்பது நல்ல முடிவுதான். ஆனால் அதற்கு முன்பு அவர் உயில் ஏதும் எழுதிவைத்துள்ளாரா? என்பது குறித்து ஆராய வேண்டும். இது குறித்து சட்ட ஆலோசகரிடம் உரிய ஆலோசனை மேற்கொண்டு முடிவு எடுக்க வேண்டும்.

மதுரை மேலூர் கூட்டத்தில் ஜெயலலிதா மரணம் குறித்து நீதி விசாரணை நடத்த வேண்டும் என்று நானும் கோரிக்கை விடுத்திருந்தேன். அப்படி விசாரணை நடந்தால் தான் சசிகலா குற்றமற்றவர் என்று தெரிய வரும். இப்போது நீதி விசாரணைக்கு உத்தரவிட்டுள்ளனர். நீதி விசாரணை நியாயமாக நடந்தால் முழு ஒத்துழைப்பு கொடுக்கப்படும்.

எனக்கு ஆதரவாக எம்.எல்.ஏ.க்கள் பலர் இருக்கின்றார்கள். எத்தனை பேர் என்பதை குறிப்பிட்டு சொல்ல முடியாது. ஆனால் தேவைப்படும்போது பலத்தை நிரூபித்துக் காட்டுவேன் என்று தெரிவித்துள்ளார். (ப)

# சசிகலாவின் மறு சீராய்வு மனு செவ்வாயன்று விசாரணை!



சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற சசிகலா உள்ளிட்டவர்களின் மறு சீராய்வு மனு நாளை மறுதினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் படும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கை விசாரித்த உச்ச நீதிமன்றம், சசிகலா, அவரது உறவினர்கள் இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கு விதிக்கப்பட்ட 4 ஆண்டு சிறைத்தண்டனையை உறுதி செய்தது. இதையடுத்து அவர்கள் பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறையில் அடைக்கப் பட்டனர்.

இதையடுத்து, சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் சார்பில் உச்ச நீதிமன்றத்தில் மறு சீராய்வு மனுதாக்கல் செய்யப் பட்டது. இந்த மனு கடந்த 2ஆம் திகதி விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப் படும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நீதிபதிகள் ரோகிண்டன் பாலி நரிமன் விசாரிக்க சசிகலா தரப்பில் ஆட்சேபம் தெரிவிக்கப்பட்டது. இதனால், சசிகலாவின் மறு ஆய்வு மனு அன்றைய வழக்கு விசாரணைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டது.

இந்நிலையில், சசிகலாவின் மறு சீராய்வு மனுவை நீதிபதிகள் அமித்தவாராய், பாப்தே அடங்கிய அமர்வு நாளை மறுதினம் விசாரிக்கும் என உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது. (ப)

# காஷ்மீரில் சீன இராணுவம் ஊடுருவல்: இந்தியா கடும் கண்டனம்




காஷ்மீரில் லடாக் பகுதியில் சீன இராணுவம் ஊடுருவ முயன்றதற்கு இந்தியா அதிகாரபூர்வமாக தனது கண்டனத்தை தெரிவித்துள்ளது

காஷ்மீர் மாநிலம் லடாக் பகுதியில் பாங்கோன் என்னும் ஏரி உள்ளது. இங்கு, இந்தியா-சீனா நாடுகளுக்கு பொதுவாக உள்ள அசல் எல்லைக் கட்டுப்பாட்டுக் கோடு பகுதியில் இந்தியா எல்லைக்குள் கடந்த 15ஆம் திகதி காலை சீன ராணுவம் அத்துமீறி நுழைய முயன்றது.

சுதந்திர தின கொண்டாட்டத்தில் இந்திய-திபெத் எல்லை பாதுகாப்புப் படையினர் ஈடுபட்டிருந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி சீன இராணுவத்தினர் இந்திய எல்லைக்குள் நுழைய முயன்றனர்.

இதற்கு பாதுகாப்புப் படையினர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

பின்னர் சீன இராணுவத்தினர் பின்வாங்கினர். தங்களது எல்லைக்குள் திரும்பியதும் இந்திய-திபெத் பாதுகாப்புப் படையினர் மீது கற்களை வீசி அவர்கள் தாக்குதல் நடத்தினர். இதற்கு பாதுகாப்புப் படையினரும் இதேபோல் தாக்குதல் நடத்தி பதிலடி கொடுத்தனர். இதில் இரு தரப்பிலும் பலர் காயம் அடைந்தனர். இந்திய அரசு நேற்றுமுன்தினம் முதல் முறையாக தனது அதிகாரபூர்வ கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

சிக்கிம் எல்லையில் இந்தியா, பூட்டான், சீனா ஆகிய நாடுகளின் முச்சந்திப்பில் உள்ள டோக்லாம் பகுதியில் இந்தியாவும், சீனாவும் ராணுவத்தை குவித்துள்ள பதற்றமான நிலையில் காஷ்மீருக்குள் சீன இராணுவத்தினர் ஊடுருவ முயன்றதை இந்தியா வன்மையாகக் கண்டித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. (ப)

# புதிய வடிவமைப்பில் 50 ரூபா: விரைவில் 'நோட்டு' வெளிவரும்!




இந்தியாவில் புதிதாக வடிவமைக்கப்பட்டுள்ள புத்தம் புதிய 50 ரூபா நோட்டுக்கள் விரைவில் வெளியாகும் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்தாண்டு நவம்பர் மாதம் பழைய 500 மற்றும் 100 ரூபா தாள்கள் செல்லாது என மத்திய அரசு அறிவித்தது. அதற்குப் பதிலாக புதிதாக அச்சடிக்கப்பட்ட 500 மற்றும் 2000 ரூபா தாள்கள் வெளியிடப்பட்டன.

பழைய 500 மற்றும் 100 ரூபா தாள்களை வங்கியில் மாற்ற மக்கள் பெரும் பாடுபட்டனர்.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக புதிய 50 ரூபாய் தாள்களின் புகைப்படங்கள் சமூக வலைதளங்களில் வைரலாக பரவி வருகின்றன. இந்த தாள்களை ரிசர்வ் வங்கி விரைவில் வெளியிடும் என அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தியின் புகைப்படத்துடன் வெளிவரும் இந்த ரூபா தாள்களின் பின்புறம், தென்னிந்தியாவைச் சேர்ந்த வரலாற்றுச்சின்னமான ஹம்பி தேர் புகைப்படம் இடம்பெற்றுள்ளது.

புதிய தாள்கள் வெளியானாலும் இப்போது நாட்டின் புழக்கத்தில் உள்ள அனைத்து 50 ரூபா தாள்களும் தொடர்ந்து செல்லும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# பணிப்பெண்ணின் மூக்கை அறுத்த வீட்டு உரிமையாளர்!

மத்தியபிரதேச மாநிலத்தில் தன்னிடம் வேலை பார்க்கும் பெண்ணின் மூக்கை வீட்டு உரிமையாளர் அறுத்துள்ள சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சாகர் மாவட்டத்தைச் சேர்ந்த சாகப் சிங் என்பவர் தனது வீட்டில் வேலை பார்க்கும் பணியாளர், தான் சொன்ன வேலையை செய்யாத காரணத்தால் அவரைப் பயங்கரமாகத் தாக்கியுள்ளார்.

இதற்கு, அவரது மகனும் உடந்தையாக இருந்துள்ளார். இதில் காயமடைந்த அந்த நபரை, அவரின் மனைவி மருத்துவமனையில் அனுமதித்துள்ளார்.

மேலும், இந்த தம்பதியர் ஒரே இடத்தில் தான் வேலைபார்க்கின்றனர், இதற்கிடையில் கணவனை அடித்த கையோடு மனைவியையும் அடித்து அவரது மூக்கையும் அறுத்துள்ளனர்.

இதனால் அந்தப் பெண்ணின் மூக்கில் காயம் ஏற்பட்டுள்ளது, தற்போது மருத்துவமனையில் இந்தத் தம்பதியினருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் குறித்து மத்தியபிரதேச மாநில மகளிர் ஆணையத்தில் முறையிடப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பில், மகளிர் ஆணைய தலைவர் லதா வாண்கடே விசாரணை மேற்கொண்டு வருகின்றார். (ப)

# தேர்தல் வரும் என்றவுடன் வருகிறது வரிக் குறைப்பும்!

## அரசைச் சாடுகிறார் நாமல் ராஜபக்ஷ



கொழும்பு, ஓக,20

தேர்தல் நெருங்க வரிகளை குறைத்து மக்கள் செல்வாக்கை பெற இந்த அரசு முயற்சிக்கின்றது. அதனை மக்கள் அறிந்து செயற்பட வேண்டுமென அம்பாந்தோட்டை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியவை வருமாறு:-

சில குறிப்பிட்ட வாகனங்களுக்கு 90 வீத வரி குறைப்பும், 'நெற்' கட்டணங்களுக்கு 10 வீத வரிக் குறைப்பும் செய்யப்படவுள்ளன. இந்த அரசு இத்தனை நாளும் குறைக்காத வரியை ஏன் இப்போது திடீரெனக் குறைத்துள்ளது, இத்தனை நாளும் வராத தேர்தல் தற்போது வருகின்றதல்லவா?

இந்த அரசு தேர்தலுக்கு முன்பு ஒரு முகத்தையும் தேர்தல் முடிந்த பின்பு இன்னுமொரு முகத்தையும் வெளிக்காட்டுகிறது. இதனூடாக இலங்கை மக்கள் இந்த அரசின் உண்மையான முகத்தை அறிந்து கொள்ளலாம். இப்படி இரட்டை வேடம் கொண்ட அரசை நம்பமுடியுமா ?

அண்மைக் காலத்தில் இப்படி வரிகளை திடீரெனக் குறைக்குமளவு எந்தவிதமான திடீர் பொருளாதார மாற்றங்களும் இடம்பெறவில்லை. நாட்டு வளங்களை விற்று வரும் பணத்தை நம்பி வரிகளைக் குறைப்பது உண்மையான பொருளாதார வளர்ச்சியல்ல.

இந்த அரசால் தேர்தல் நெருங்கும்போது வரியைக் குறைத்து ஆட்சி செய்ய முடியுமாக இருப்பின் அதற்கு முன்பும் அப்படி ஆட்சி செய்யாதிருக்க முடியும். ஆனால், அதைச் செய்யவில்லை.

தேர்தலை மையப்படுத்தி வெற்றி வியூகம் அமைப்பதென்றாலும் அதனை மக்கள் அறியாதவாறு சாதுரியமாக கையாள வேண்டும். இச் சிறு விடயத்தை கூட சாதுரியமாகக் கையாள முடியாதவர்கள், பல நெருக்கடிகள் சூழ்ந்துள்ள இந் நாட்டை எப்படித்தான் கையாளப் போகிறார்களோ?

இந்த அரசுக்கு மக்கள் நலனை விடத் தங்களது சுய நலனேமிக முக்கியமானதாகும். இந்த பூச்சாண்டிகளை எல்லாம் நம்பி வாக்களிக்கும் காலம் மலையேறிவிட்டது. இந்த அரசின் பித்தலாட்டங்களை மக்கள் நன்கு அறிந்து வைத்துள்ளனர். இதனை அறிந்து எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் தகுந்த பாடம் புகட்டுவார்கள் என நம்புகிறோம்.

சலுகைகளை வழங்கி, மக்களை முட்டாள்களாக்கி, நாட்டின் சொத்துக்களை விற்பனை செய்ய மேற்கொள்ளும் இந்த அரசின் முயற்சியை தோற்கடிக்க வேண்டும். - எனவும் அவர் குறிப்பிட்டார். (உ)

## கிணற்றுக்குள் வீழ்ந்த சிறுத்தை மீட்கப்பட்டது!



தம்புள்ள - திகம்பத பிரதேசத்தில் கிணற்றுக்குள் தவறி விழுந்த சிறுத்தை ஒன்றை பிரதேச மக்களுடன் இணைந்து சிகிரியா வனஜீவராசி திணைக்கள அதிகாரிகள் காப்பாற்றியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் சிறுத்தை ஒன்று கிணற்றினுள் வீழ்ந்துள்ளதை அவதானித்த பிரதேச மக்கள் சிறுத்தையை காப்பாற்ற முயற்சி செய்துள்ளனர். எனினும், அவர்களின் முயற்சி வெற்றியளிக்கவில்லை.

இதனையடுத்து சீகிரியா வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு பிரதேச மக்கள் வழங்கிய தகவலுக்கு அமைய விரைந்த அதிகாரிகள் வயர் ஒன்றின் உதவியுடன் சிறுத்தையை காப்பாற்றியுள்ளனர். காப்பாற்றப்பட்ட சிறுத்தை அடுத்தசில வினாடிக்குள் அந்த இடத்தை விட்டு ஓடி மறைந்துள்ளது.

## கூட்டு எதிரணி உள்ளூராட்சித் தேர்தலை மொட்டுச் சின்னத்தில் எதிர்கொள்ளும்!

### கட்சித் தலைவர்கள் ஒன்று கூடித் தீர்மானம்



கொழும்பு, ஓக. 20

நல்லாட்சி அரசுக்கு எதிரான சகல கட்சிகளையும் ஒன்றிணைத்து எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை விசாலமான கூட்டாக அமைத்து, மொட்டுச் சின்னத்தில் போட்டியிடுவது எனக் கூட்டு எதிரணிக் கட்சிகள் தீர்மானித்திருக்கின்றன.

கூட்டு எதிரணியில் உள்ள பிரதான கட்சிகளின் தலைவர்கள் அண்மையில் ஒன்று கூடி இந்தத் தீர்மானத்தை எடுத்திருக்கின்றார்கள் எனத் தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

பேராசிரியர் ஜி.எல்.பீரிஸை மையமாக வைத்து சிறிலங்கா பொதுமக்கள் முன்னணி என்ற கட்சி ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றமை தெரிந்ததே. அதன் சின்னமே மொட்டு ஆகும்.

அந்தப் பொதுச்சின்னத்தில் போட்டியிடவே கூட்டு எதிரணிக் கட்சிகள் தீர்மானித்துள்ளனவாம்.

கூட்டு எதிரணிக்கு வெளியில் உள்ள சில கட்சிகளும், உள்ளூராட்சி சபைகளின் முன்னாள் பிரமுகர்கள் பலரும் இந்த அணியில் சேர விருப்பம் தெரிவித்துத் தங்களுடன் தொடர்பு கொண்டு வருகின்றனர் எனத் தெரிவித்துள்ள இந்தக் கட்சியின் பேச்சாளர் ஒருவர், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டதும், தேர்தல் தொடர்பான தங்கள் கூட்டமைப்பின் தந்திரோபாயச் செயற்பாட்டுத்திட்டங்கள் குறித்து அறிவிக்கப்படும் என்றும் கூறினார். (உ)

## திருமலை மூதூர், சம்பூர் மக்களின் காணிப் பிரச்சினைகளைத் தீர்க்குக!




திருகோணமலை மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள சம்பூர் மற்றும் கடற்கரைச்சேனை கிராமங்களில் மீள்குடியேறிய மக்கள், விடுவிக்கப்படாமல் உள்ள தமது காணிகளை விடுவிக்குமாறும், விடுவிக்கப்பட்டமைக்கான முறையான ஆவணங்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கோரியும், மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளனர்.

இந்த மகஜர்கள் நேற்றுமுன்தினம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் திருகோணமலை பிராந்திய செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளன.

சம்பூர், கடற்கரைச்சேனைக் கிராமத்தில் உள்ள 3 கிராம அபிவிருத்திச்சங்க பிரதிநிதிகள் எழுவர் அடங்கிய குழுவினர், கடிதங்களை மக்கள் சார்பாகச் சேகரித்துக் கையளித்துள்ளனர்.

சம்பூர் பிரதேசத்திலுள்ள நான்கு முக்கிய காணிப் பிரச்சினைகள் தொடர்பான கோவைகள் மற்றும் கடிதங்களை ஆணைக்குழுவிடம் தாங்கள் கையளித்துள்ளனர் எனச் சம்பூர் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.சண்முகநாதன் தெரிவித்துள்ளார்.

தங்களுடைய கிராமம் மூன்று கட்டங்களாகக் குடியேற்றப்பட்டது. முதலில் 365 குடும்பங்களும் பின்னர் படிப்படியாக 950 குடும்பங் களும் குடியேற்றப்பட்டன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது 818 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்டன. எனினும் அவற்றுக்கான முறையான ஆவணங்கள் வழங்கப்படவில்லை.

அவற்றை வழங்க ஆவன செய்ய வேண்டும் என்றும் இரண்டாவது சாயக்கர வட்டவான் என்ற பகுதியில் கடற்படையினர் கோரியதற்கிணங்க முகாம் அமைப்பதற்காக, 18 குடும்பங்கள் தமது 40 ஏக்கர் காணியை விட்டுக் கொடுத்தனர்.

அவற்றுக்கான மாற்று ஒழுங்குகள் எதுவும் வழங்கப்படவில்லை. ஆனாலும் படையினர் 400 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளைப் பிடித்து வைத்துள்ளனர். அவை அனைத்தும் எமது மக்களின் வாழ்வாதாரக் காணிகள்.

மூன்றாவதாக, அனல் மின் நிலையத்துக்கென எடுக்கப்பட்ட, நீர், நிலக்கரி கொண்டு செல்வதற்கான பாதையமைப்புக்கென 49 குடும்பங்களின் காணிகள் எடுக்கப்பட்டன.

அவையும் இன்னும் முறையாக மீளக் கையளிக் கப்படவில்லை. எனினும், மின் நிலையப் பணிகள் கைவிடப்பட்டுள்ளன.

இவை மாத்திரமன்றி கிளல் வெளி வயல்பகுதியில் சுமார் 200 ஏக்கர் உறுதிக் காணிகளை மின்சார சபை அடைத்து வைத்துள்ளது என அவர் குறிப்பிட்டார்.

இந்தப் பிரச்சினைகளைத் தெளிவுபடுத்தும் வகையில் ஆயிரத்துக்கும் அதிகமாக ஆவணங்களைச் சேகரித்து அதற்கான தனித்தனியான கடிதங்களையும் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் தாங்கள் சமர்ப்பித்துள்ளனர் எனக் கிழக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் எஸ்.சண்முகநாதன் தெரிவித்துள்ளார். (உ)

# அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

வெளிநாடுகளுக்கான துரித கடிதங்கள், பொதிகள் சேவை





எமது சேவை 365 நாட்களும்

விரைவாகவும் பாதுகாப்பாகவும் 72 மணி நேரத்தில் உலகின் எப்பாகத்திலும் ஒப்படைக்கப்படும் (EXPRESS SERVICE)

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் ஏற்கப்பட்டு வெளிநாடுகளில் ஒப்படைக்கப்படும் (Door to Door Service)

**அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டட்**
இல.10, புதிய மாநகரசபைக் கட்டடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Call - 021 222 3536

**அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்**
இல.01, பிறவுண் வீதி, நாவலர்வீதி சந்தி,
யாழ்ப்பாணம்.
Call - 021 222 6113



நல்லூர் பருத்தித்துறை வீதியில்
அமைந்துள்ள
எமது உற்சவகால விற்பனை நிலையத்தில்
நீங்கள் வாங்கும் அனைத்து
லிற்றோ காஸ் 12.5 kg (3665/=)
அல்லது 5 kg (2455/=)
சிலிண்டர் ஒன்றை கொள்வனவு செய்யும்
போது ரூபா 3000 பெறுமதியுள்ள காஸ்
அடுப்பு மற்றும் றெகுலேட்டர் ஒன்றும்
இலவசம்.
தொடர்புகளுக்கு : 0770495501











தூய்மையானதும்
நீண்டகாலம்
பாவிக்கக்
கூடியதுமான
இல்லத்தரசிகளின்
ஒரே தெரிவு



LITRO GAS லிற்றோ

தேசிய எரிவாயு
ஏக விநியோகஸ்தர்

Design by: Braghapy Graphic Designers

# S.V. முருகேசு

No. 154 Hospital Road, Jaffna.
T.P : 021 222 8899, 021 492 5831
No. 106 Hospital Road,Jaffna.
T.P : 021 492 5830,021 222 4341
Fax: 021 222 4341


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.